விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 12 புதன்கிழமை (28.11.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 344

### தாயகத்திலும் புலத்திலும் உணர்வெழுச்சியுடன்

# மாவீரர் தினம் அனுஷ்டிப்பு

### புலனாய்வாளர்களின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் பெருமளவான மக்கள் பங்கேற்று அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

சந்தனப் பேழைகளில் உறங்குகின்ற மாவீரருக்கு தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் நேற்று உணர்வெழுச்சியுடன் திரண்டு வந்த உறவுகள் மாலை 6.05க்கு தமது அஞ்சலியை செலுத்தி யிருந்தனர்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## புலம்பெயர் தேசத்தில் மாவீரருக்கு அஞ்சலி



புலம்பெயர் தேசங்களான லண்டன், கனடா, ஜேர்மன், பிரான்ஸ் ஆகிய இடங்களில் பெருமளவிலான மக்கள் ஒன்று திரண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். (3)

## பாராளுமன்றம் நாளைவரை ஒத்திவைப்பு
## நேற்றைய அமர்வை புறக்கணித்தது ஆளும் தரப்பு
### நாளையும் புறக்கணிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

பாராளுமன்றம் நாளை வியாழக் கிழமை காலை 10.00 மணிக்கு கூடும் என சபாநாயகர் கரு ஜய சூரிய அறிவித்துள்ளார்.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலை மையில் பாராளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணி அளவில் கூடியது.

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வுக்கும் பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்படாத நிலையில், செய்திகளை சேகரிப்பதற்கான அனுமதி மாத்திரம் வழங்கப் பட்டிருந்தது.

நாடாளுமன்றத்திற்கு வருகை தரும் ஒவ்வொருவரும் பாதுகாப்பு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட தன் பின்பே பாராளுமன்ற அமர் வில் கலந்துகொள்ள அனுமதிக்கப் பட்டனர்.

இதேவேளை, ஆளும் கட்சி உறுப்பினர்கள் நேற்றைய 24☛

## பாராளுமன்றில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்திய செல்வம் எம்.பி

(கொழும்பு)

மாவீரர் தினத்தை நினைவு படுத்திய செல்வம் அடைக்கல நாதன் நேற்று பாராளுமன்றத்தில் அஞ்சலி செலுத்தினார். 24☛

### யாழ்.பருத்தித்துறைப் பகுதியில்
## மாவீரர் தின நிகழ்வுகளை தடுத்து நிறுத்திய பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி பருத்தித், துறையில் மாவீரர் தின ஏற்பாடு களை பொலிஸார் தடுத்து நிறுத்தி அப்பகுதி மக்களை அங்கிருந்து விரட்டி யடித்துள்ளதாக தெரியவருகிறது. இச் சம்பவமானது நேற்று செவ் வாய்க்கிழமை மாலை 24☛

## புதுக்குடியிருப்பில் பறந்தது புலிக்கொடி



விரிவான செய்தி 09ஆம் பக்கம்...

## மகிந்தவுக்கெதிராக மற்றொரு வழக்கு தாக்கல்

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவி யில் இருந்து நீக்கிவிட்டு மகிந்த ராஜபகஷ பிரதமராக நியமிக்கப் பட்டமையானது அரசியலமைப் புக்கு முரணானது என கட்டளை வழங்கக் கோரி உயர் 24☛

### தமிழர் தாயகமெங்கும் பெருமளவிலான
## பொலிஸ், இராணுவ, புலனாய்வாளர்களின் கெடுபிடிக்கு மத்தியிலும் நினைவஞ்சலி



யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை சுப்பர்மடம், கோப்பாய், நல்லூர், தீவகப்பகுதிகள் மற்றும் வன்னிப் பிரதேசங்க ளில் மாவீரர் தினமான நேற்று பெருமளவிலான பொலிஸ், இராணு வம் மற்றும் புலனாய்வாளர்களின் கெடுபிடிகளுக்கு மத்தியில் மக்கள் ஈகச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். (3)

## சாட்டி துயிலும் இல்லத்தில் சுடரேற்றிய ஜேர்மனியத் தம்பதி



(யாழ்ப்பாணம்)

யாழ். தீவுப்பகுதிகளில் ஒன்றான வேலணை, சாட்டி யில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்றைய தினம் நெகிழ்ச்சியான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஜேர்மனியில் இருந்து வந்த தம்பதியினர் நேற்றைய மாவீரர் நாள் நினைவுகூரும் நிகழ்வில் கலந்து கொண்டு சுடரேற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. (3)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பாராளுமன்ற சொத்துக்களுக்கு சேதம்; விசாரணை இடம்பெறுகிறது- சபாநாயகர்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் அண்மையில் இடம்பெற்ற குழப்பங்களின்போது ஏற்பட்ட சொத்துக்களின் சேத விபரம் தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருவதாக சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு கூடியது. இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே சபாநாயகர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பாராளுமன்ற சொத்துக்களுக்கு விளைவிக்கப்பட்ட சேதம் தொடர்பாக தாம் ஆராய்ந்து வருவதாகவும், பொலிஸாருக்கும் குறித்த விடயங்கள் தொடர்பாக அறிவித்துள்ளதாகவும் சபாநாயகர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்ட பின்னர், பாராளுமன்றம் கடந்த 14ஆம் திகதி கூடியது. அன்றைய தினம் ஆளும் மற்றும் எதிர்த்தரப்புக்கு இடையில் சபையில் கைகலப்பு ஏற்பட்டதோடு, அதன் பின்னர் இடம்பெற்ற அமர்வுகளிலும் இதேநிலை ஏற்பட்டது. இதன்போது பாராளுமன்ற உடைமைகளை உறுப்பினர்கள் வீசியெறிந்து சேதம் ஏற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3)

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு தரித நடமல்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(த-4518)

## பணி நீக்கம்

நோத் லங்கா பமிலி பூட்ஸ் நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட விற்பனை மற்றும் வெளிக்கள உத்தியோகத்தராக (Executive - Sales & Outreach) கடமையாற்றி வந்த திரு.பாலசுந்தரம் விமலன் (தே.அ.அ.இல: 198713802182) உடுத்துறை வடக்கு, தாளையடி அவர்கள் எமது நிறுவனத்திலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்பதனை இத்தால் அறியத் தருகிறோம். இவரால் மேற்கொள்ளப்பட்ட கடன் விற்பனைக்கான காசுக் கொடுக்கல் வாங்கல்களையோ அல்லது நிறுவனம்சார் ஏனைய கொடுக்கல் வாங்கல்களையோ இத்தினம் முதல் இவருடன் மேற்கொள்ளவேண்டாம் என கேட்டுக்கொள்வதுடன், எமது நிறுவனத்தின் பேரில் இவருடன் மேற்கொள்ளப்படும் எந்தவிதமான கொடுக்கல் வாங்கல்களுக்கும் நிறுவனம் பொறுப்பேற்காது என்பதனையும் அறியத் தருகின்றோம்.


**தொழிற்சாலை:**
**நோத் லங்கா பமிலி பூட்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்**
**இராசவெளித்தோட்டம், இயக்கச்சி, பளை, கிளிநொச்சி.**
**தொ.பே இல.: 021 760 2211 / 021 390 0900**

**தலைமை அலுவலகம்:**
**நோத் லங்கா பமிலி பூட்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்**
**இல.30, கோதமி வீதி, கொழும்பு - 8**
**தொ.பே இல: 011 760 2200 / தொ.நகல்: 011 267 7989**

(6572)

# மரண அறிவித்தல்

## இரத்தினம் சாம்பசிவம்



யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை, ஆறுகால்மடத்தை பிறப்பிடமாகவும், I.D.H வீதி, களுதாவளை, மாத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சாம்பசிவம் அவர்கள் நேற்று முன்தினம் (26. 11.2018) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், துன்னாலை வடக்கு, அத்தியடியை சேர்ந்த வடிவேலு - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மருமகனும், இரத்தினேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவஞானம், சரஸ்வதி (லண்டன்), சந்தானலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவரஞ்சனா (லண்டன்), நித்தியகலா (லண்டன்), அஞ்சலிக்கா (ஜேர்மனி), மேனகா (பிரான்ஸ்) நிருசன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாலன் (லண்டன்), பாஸ்கரன் (லண்டன்), பிரேம்குமார் (ஜேர்மனி), நவசீலன் (பிரான்ஸ்), தர்சிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், வியங்கா, விசால் (ஜேர்மனி), திவ்யா, சோபியா (லண்டன்), அஸ்வி, லக்சனன் (லண்டன்), அத்விக்கா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பேரனும், சாந்தமலர், வசந்தமலர், இராசமலர் (லண்டன்), சூரியகுமார் (லண்டன்), சூரியகுமாரி (பிரான்ஸ்), நந்தகுமாரி, வசிகரன் (லண்டன்), தம்பிராசா, சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும், அமரர் சுப்பிரமணியம், கணேசமூர்த்தி, கணேசலிங்கம் (லண்டன்), தவநாயகி (பிரான்ஸ்), அமரர் சண்முகநாதன் (பிரான்ஸ்), ரவிந்திரவிநாயகம், தயா (லண்டன்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.11.2018) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக களுதாவளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.09, I.D.H வீதி,**
**களுதாவளை, மாத்தளை.**

**தகவல் : குடும்பத்தினர்**
**076 662 3995**

(6555)

## மு/ சிலாவத்தை தமிழ் வித்தியாலயம்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




2018 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களான

**க.எழிலினி - 173, நா.நிலாமதி - 173,**
**வி.கலைக்கதிர் - 172, சு.றமணன் - 167,**
**ச.திசாளன் - 163**

இவர்களுடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களையும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**மு/சிலாவத்தை தமிழ் வித்தியாலயம்.**

(த-4524)

வடமராட்சியில்......

## G.C.E A/L MATHS & BIO - 2019

ENGLISH MEDIUM (NEW CLASSES)

RAVEENS EMC - KARAVEDDY

பெற்றோர்களே!

- கல்விக்கு பெயர்போன வடமராட்சிக் கல்வி வலயத்தில். ஆங்கில மொழி மூலக் கல்வியை அறிமுகப்படுத்தி 16 வருடங்களாகியும் (2003 இல்) ஒரு பாடசாலையிலாவது G.C.E A/L ல் ஆங்கிலமொழி மூலம் கல்வி பயில வாய்ப்பளிக்கப்படவில்லை.
- 10 வரையிலான பாடசாலைகளில் 6ம் தரம் தொடக்கம் 11ம் தரம் வரை 6வருடங்களாக ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்ற மாணவர்களுக்கு A/L வகுப்பில் ஆங்கிலமொழி மூலம் கல்வி பயில வாய்ப்பளிக்காமை அடிப்படை மனித உரிமை மீறலாகவே கருதப்படும்.
- G.C.E A/L ல் வகுப்பு தொடங்காமைக்கு பெற்றோர் விருப்பமின்மை, ஆசிரியர் வளம் இன்மை, பல்கலைக்கழக அனுமதிக்கான வாய்ப்பு குறைவு, தனியார் கல்வி நிறுவனங்கள் இல்லை என்ற பொருத்தமற்ற காரணங்களை முன்வைக்காமல் இந்த வருடத்திலாவது வகுப்புகள் தொடங்க **ஆசிரிய சங்கங்கள் உட்பட சகல தரப்பினரும் இதயசுத்தியுடன் தொழிற்பட வேண்டும்.**
- ஆங்கிலமொழி மூலக் கல்வி A/L ல் வழங்கப்பட்டால் தமிழ்மொழி மூல மாணவர்களைவிட அதி உயர் பெறுபேறுகளைப் பெறுவதுடன் பல்கலைகழக கல்விநிலையில் முன்னிலையில் திகழ வாய்ப்பாக அமையும் என்பது உலகறிந்த உண்மை.
- 2019 ல் ஆங்கிலமொழி மூலம் உங்கள் பிள்ளைகளுக்கு கல்வி பயில பாடசாலைகளில் வாய்ப்பு ஏற்படுமிடத்து உங்கள் பிள்ளைகளின் நலனைக் கருத்திற் கொண்டு **ஆங்கிலமொழி மூலம் கல்வி போதிக்க நாம் சகல தரப்பினரதும் ஒத்துழைப்புடனும் நடவடிக்கைக்களை எடுக்கவுள்ளோம்.**
- **சிறந்த வழிகாட்டல், நவீன கல்வி முறை, இணையம் (Internet), நூலக உதவியுடன் சுயமாக கற்றல், மிகக் குறைந்த மாணவர் எண்ணிக்கை கொண்ட வகுப்பு, மன உளைச்சல் இல்லாத கற்றல் செயற்பாடு, தேவையான கல்விப் போதனை என்பனவற்றால் அதி உயர் பெறுபேறுகளை பெற வழி வகுப்போம் என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கிறோம்.**
- இவ்விதம் A/L வகுப்பு தொடங்குவதற்கு ஒரு சிலர் தீவிரமாக எதிர்ப்பை தமது வருமான நோக்கம் கருதி மேற்கொள்ளலாம். ஆனால் இந்த வருடம் தொடங்காவிடின் இனி எக் காலத்திலும் A/L வகுப்பு வடமராட்சியில் தொடங்க முடியாத நிலை ஏற்படலாம். அத்துடன் மிகத்திறமையான மாணவர்கள் யாழ் நகர் பாடசாலைகளை நாடவேண்டிய நிலை மேலும் அதிகரிக்கும்.
- இவ் விளம்பரம் இலாப நோக்கில் மேற்கொள்ளப்பட்டதல்ல, உண்மையை எடுத்துரைக்க மேற்கொள்ளப்பட்டதாகும்.


P. Easwaranathan (B.Sc Hons (Agric).Dip.in.Edu)
Director

✆: 021 226 3321


(C-4528)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று


# உணர்வெழுச்சியுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி

























தமிழினத்தின் விடிவுக்காக தமது உயிரை தியாகம் செய்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக சமூகத்தால் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது. யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மாவீரர் நாள் நினைவு நிகழ்வு யாழ்.பல்கலை வளாகத்தில் புதுப்பொலிவுடன் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவு தூபியியில் இடம்பெற்றது. அகவணக்கத்துடன் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர், ஊழியர் சங்கத்தினர், மாணவர்கள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டு மலர் அஞ்சலி செலுத்தினர். இந்த அஞ்சலி நிகழ்வை தொடர்ந்து மலரஞ்சலியில் கலந்துகொண்டவர்களுக்கு "விதைகளை விருட்சமாக்குவோம்" எனும் தொனிப்பொருளில் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (படங்கள்:-பொ.சோபிகா)









## இராசி பலன்

**மீனம்** — யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**மேடம்** — தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரும், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**இடபம்** — நாடி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** — பேச்சில் கனிவு பிறக்கும், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், புதிய நட்புகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**கும்பம்** — உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ். | **இராசி பலன்**<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>கேட்டை-மூலம் | | சந் ராகு |
| கேது | | | |
| சனி | சூரி. குரு | புத. சுக் | |

**28.11.2018**

கார்த்திகை 12.புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.11 மணிக்கு

சஷ்டி பின்னிரவு 12.25 மணிவரை

பூசம் முற்பகல் 11.57 மணிவரை

சுபநேரம் 4.43-6.13 மணிவரை

இராகுகாலம் 12.13-1.43 மணிவரை

ஆறுமுகநாவலர் குருபூசை

வளவன்

**கடகம்** — சாமர்த்தியமாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மகரம்** — உறவினர்களின் வருகையுண்டு, மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்** — திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், விரயங்கள் கூடும்.

**தனுசு** — திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், கொடுக்கல்- வாங்கல்களில் கவனம் தேவை, நீங்கள் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம்.

**விருச்சிகம்** — பயணங்களால் பலனுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், எதிர்பார்ப்புகள் கைகூடும் வாய்ப்புண்டு.

**துலாம்** — ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், ஆரோக்கியமான நாள்.

**கன்னி** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

# ‘நெருப்பு’ ஹோலி... நெருங்குமா ஆஸி.,

## எடுபடுமா இரகசிய திட்டம்


விராட் ஹோலி

டெஸ்ட் தொடரில் ஹோலியை சமாளிக்க, தீவிரமாக திட்டமிடுகிறது அவுஸ்திரேலிய அணி. தடையில் உள்ள ஸ்ரீவ் ஸ்மித், டேவிட் வோர்னர் உதவிக்கு வருகின்றனர்.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி, அங்கு நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் வரும் டிச. 6ல் அடிலெய்டில் ஆரம்பமாகிறது.

இதற்கான அவுஸ்திரேலிய அணியில் முன்னணி வீரர்கள் ஸ்மித், வோர்னர் இடம்பெறவில்லை. கடந்த ஆண்டு தென்னாபிரிக்க தொடரில் பந்தை சேதப்படுத்திய சர்ச்சையில் சிக்கிய இவர்களுக்கு ஒரு ஆண்டு தடை விதிக்கப்பட்டது.

இது முடிய இன்னும் நான்கு மாதங்கள் உள்ளன. தடையை குறைக்க வேண்டும் என வீரர்கள் சங்கம் விடுத்த கோரிக்கையை அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை ஏற்க மறுத்துவிட்டது.

மூன்றாவது 'ரி20' போட்டி தொடங்கும் முன் ஸ்மித், வோர்னர் சிட்னி மைதானத்துக்கு வந்தனர். இங்கு வோர்னர் துடுப்பாட்டம் செய்ய அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர்கள் பந்துவீசினர். ஸ்மித் ஆலோசனை கொடுத்தார். இருப்பினும் இந்திய அணி வெற்றி பெற்று தொடரை சமன் செய்தது.

**ரகசிய சந்திப்பு**

இப்போட்டி முடிந்ததும் ஒரு ஹோட்டலில் பயிற்சியாளர் ஜஸ்டின் லாங்கர், ஸ்மித் தனியாக சந்தித்துப் பேசினர். டெஸ்ட் தொடரில் ஹோலியை சமாளிப்பது குறித்து ரகசியமாக ஆலோசித்ததாக தெரிகிறது. இதை அங்குள்ள '7 நியூஸ் சிட்னி' செய்தி நிறுவனம் உறுதி செய்தது. இந்த ஆண்டு 10 டெஸ்ட் போட்டிகளில் 1063 ஓட்டங்கள் குவித்துள்ள ஹோலி, அவுஸ்திரேலிய அணிக்கு சிம்மசொப்பனமாக இருப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.


வலைப்பயிற்சியின்போது வோர்னருக்கு பந்துவீசும் பட்ரிக் கம்மின்ஸ்...

டெஸ்ட் தொடரில் இவரை கட்டுப்படுத்த, மிட்சல் ஸ்டார்க், ஹேசல்வுட் மற்றும் கம்மின்ஸ் உள்ளிட்ட அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர்களுக்கு வலைப்பயிற்சியில் உதவிட ஸ்மித், வோர்னர் முன்வந்துள்ளனர். இவர்களது அனுபவத்தை பயன்படுத்திக் கொள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையும் சம்மதித்துள்ளதாம்.

இதுகுறித்து மிட்சல் ஸ்டார்க் கூறுகையில், "ஸ்மித், வோர்னருடன் பயிற்சியில் ஈடுபடவுள்ளது எங்களுக்கு கிடைத்த சிறந்த வாய்ப்பு. இந்திய பேட்ஸ்மேன்கள் குறித்த தகவல்களை தந்து உதவுவதால் களத்தில் எப்படி செயல்பட வேண்டும் என்பதை முன்னதாக திட்டமிட்டுக் கொள்வோம்," என்றார்.


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

### சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான 01.01.2019 - 31.12.2019 வரையுள்ள காலப்பகுதிக்கான குத்தகை மீள் கேள்வி அறிவித்தல் 2019

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தைகள் இறைச்சிக் கடைகளுக்கான மீள் கேள்விகள் 31/10/2018ஆம் திகதிய தினக்குரல், வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

மேலும் மாடு, ஆடு இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு எடுத்துக் கொள்பவர்கள் எம்மால் வழங்கப்படும் மாடு/ஆடு கொள்வனவுக்கான படிவத்தினை பூரணப்படுத்தி தலைவர்/ செயலாளரின் அனுமதி ஒப்பத்தினைப் பெற்றதன் பின்பே கொல்களத்தில் ஆடு/மாட்டினைக் கட்டலாம் எனும் நிபந்தனையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

01. கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி :-10/12/2018 பி.ப 3.00 மணி வரை
02. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :-11/12/2018 காலை 10.00 மணி வரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :-11/12/2018 காலை 10.30 மணி

**மீள்கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| தொ. இல | குத்தகை விபரம் | 2019 இல் ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப் படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப்படாத கேள்வி பத்திரக் கட்டணம் (வரிகள் நீங்கலாக) | மாத வாடகை (வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | **நெல்லியடி உப அலுவலகம்** | | | | |
| 1 | நெல்லியடி மரக்கறிச் சந்தை - துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் உட்பட (அங்காடி நீங்கலாக) | 7316400.00 | 73200.00 | 1000.00 | - |
| 2 | கொட்டடிச்சந்தை | 6300.00 | 500.00 | 500.00 | - |
| 3 | நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை | 601125.00 | 6100.00 | 500.00 | 100.00 |
| 4 | நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை | 48720.00 | 500.00 | 500.00 | 100.00 |
| 5 | கோயிற் சந்தை கோழியிறைச்சிக்கடை | 197400.00 | 2000.00 | 500.00 | 100.00 |
| 6 | நெல்லியடிச் சந்தை கோழிக்கடை | 684730.00 | 6900.00 | 500.00 | 100.00 |
| 7 | நெல்லியடி மீன் சந்தை | 711900.00 | 7200.00 | 500.00 | |
| | **உடுப்பிட்டி உப அலுவலகம்** | | | | |
| 8 | உடுப்பிட்டி சந்தை | 854805.00 | 8600.00 | 500.00 | |
| 9 | மண்டான் சந்தை | 47250.00 | 500.00 | 500.00 | |
| 10 | உடுப்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 535395.00 | 5400.00 | 500.00 | 100.00 |
| 11 | உடுப்பிட்டிச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 264075.00 | 2650.00 | 500.00 | 100.00 |
| 12 | உடுப்பிட்டிச்சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 138075.00 | 1400.00 | 500.00 | |
| 13 | அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 654255.00 | 6600.00 | 500.00 | 100.00 |
| 14 | சாண்டா சந்தை கோழிக்கடை | 60480.00 | 650.00 | 500.00 | 100.00 |
| | **கட்டைவேலி உப அலுவலகம்** | | | | |
| 15 | துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 43950.00 | 500.00 | 500.00 | 100.00 |

**க.த.ஐங்கரன்,**
**தவிசாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,**
**கரவெட்டி.**
**28.11.2018**

(C-4523)


# யாசீர் செம ‘ஜாலி’

## பாக்., இன்னிங்ஸ் வெற்றி


சுழலில் பின்னியெடுத்த யாசீர் ஷா ஆட்டநாயகன் விருதுடன், அருகில் பாகிஸ்தான் அணித் தலைவர் சர்ப்ராஸ் அஹமட் (இடது)

நியூசிலாந்து அணிக்கு எதிரான டுபாய் டெஸ்டில் பாகிஸ்தான் இன்னிங்ஸ் மற்றும் 16 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. சுழலில் அசத்திய யாசிர் ஷா இரு இன்னிங்ஸிலும் சேர்த்து 14 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி ஜொலித்தார்.

ஐக்கிய அரபு எமிரேட்சுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து - பாகிஸ்தான் அணிகள் அங்கு மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

அபு தாபியில் நடந்த முதல் டெஸ்டில் நியூசிலாந்து அணி வென்றிருந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது டெஸ்ட் டுபாயில் நடந்தது.

முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் 418 (டிக்ளேர்), நியூசிலாந்து 90 ஓட்டங்கள் எடுத்தன. 'பொலோ ஒன்' அடிப்படையில் மீண்டும் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி, நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்டநேர நிறைவில், இரண்டாவது இன்னிங்சில், 2 விக்கெட்டுக்களை இழந்து 131 ஓட்டங்களை எடுத்திருந்தது. லதம் (44), ரோஸ் ரெய்லர் (49) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று நான்காம் நாள் ஆட்டம் நடந்தது. லதம் (50), ரோஸ் ரெய்லர் (82) அரைச்சதம் அடித்தனர். யாசிர் ஷா சுழலில்' வோட்லிங் (27) சிக்கினார். ஹசன் அலி 'வேகத்தில்' கிராண்ட்ஹோம் (14) ஆட்டமிழந்தார். வோக்னரை (10) வெளியேற்றிய யாசிர் ஷா, இப்போட்டியில் 2ஆவது தடவையாக ஐந்து விக்கெட் பெறுதியைக் கைப்பற்றினார்.

இறுதியில், நியூசிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் 312 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் சுழலில் பின்னியெடுத்த யாசிர் ஷா 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.


# யாழில் நேற்று மாவீரர் நாள் அனுஷ்டிப்பு







நல்லூர்







கோப்பாய்



கொடிகாமம்





படங்கள்:-பொ.சோபிகா

## மகிந்த பின்கதவால் வந்தவர் -திகாம்பரம்



(கொழும்பு)

"பின் கதவால் வந்த மகிந்த ராஜபக்ஷ இன்று பிரதமர் நாற்காலியில் அமர்ந்துள்ளார். அவருக்கு பெரும்பான்மை கிடையாது. நாட்டில் யாருக்கு பெரும்பான்மை இருக்கிறதோ அவர்கள் தான் அதிகாரத்தில் இருக்க வேண்டும்" என பாராளுமன்ற உறுப்பினர் திகாம்பரம் தெரிவித்தார்.

நேற்றுப் பாராளுமன்ற அமர்விற்கு முன்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே திகாம்பரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இன்றைய அரசியல் சூழ்நிலையிலும் கூட தொழிலாளர்களுக்கு அவர்களது நியாயமான கோரிக்கையை பெற்றுக் கொடுக்க முடியும்.

தொழிலாளர்களிடம் 1000 ரூபாய் பெற்றுத் தருவதாக கூறிக்கொண்டு கம்பனிக்காரர்களிடம் 900 ரூபாயைப் நாள் சம்பளமாக பேசுபவர்கள் தொடர்பில் மக்கள் தெளிவு பெற வேண்டும்.

தொழிலாளர் போராட்டங்கள் நியாயமானவை. பல தொழிலாளர் போராட்டங்கள் வெற்றி கண்டுள்ளது. அதே போல் இப் போராட்டத்திலும் மக்களோடு இணைந்து வெற்றி பெறுவோம்.

பலவந்தமாக பிரதமர் நாற்காலியில் அமர்ந்திருப்பவர்களுக்கெதிராக எமது போராட்டம் தொடரும். கண்டிப்பாக நாம் வெற்றி பெறுவோம். கண்டிப்பாக ரணில் விக்கிரமசிங்க பிரதமராவார்.

நாங்கள் மக்கள் பக்கமாக இருக்கிறோம். மக்கள் இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்த செயற்பாட்டை வெறுக்கிறார்கள். அவருடைய செயற்பாட்டிற்கு எதிராக மக்கள் இருக்கிறார்கள்.

இது சட்டத்தை மீறிய அரசாங்கம். பாராளுமன்றில் 113 பெரும்பான்மையை நிரூபித்து காட்டி அவர்கள் ஆட்சியை அமைத்தால் அதனை ஏற்றுக் கொள்ளலாம். இதனடிப்படையில் இன்று நாட்டில் சட்டப்படியான அரசாங்கம் என்று ஒன்றில்லை" என தெரிவித்தார். (இ-7)

## கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிரான வழக்கு டிசெம்பர் 4ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 7 பேருக்கு எதிரான வழக்கை டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க கொழும்பு நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி முதல் தொடர் விசாரணைக்கு எடுக்க நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

டீ.ஏ. ராஜபக்ஷ நினைவுத் தூபி மற்றும் நூதனசாலை அமைப்பதற்கு 90 மில்லியன் ரூபா அரச நிதியைப் பயன்படுத்தியதாக கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 7 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்தால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்குடன் தொடர்புடைய ஆவணங்கள் சில இதுவரை தமக்கு கிடைக்கவில்லை என்று பிரதிவாதிகள் தரப்பில் விளக்கமளிக்கப்பட்ட நிலையில் டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு சம்பத் அபேகோன் (தலைவர்), சம்பத் விஜயரத்ன மற்றும் சம்பா ஜானகி ராஜரத்ன ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டது.



எவ்வாறாயினும் வழக்குடன் தொடர்புடைய பெரும்பாலான ஆவணங்கள் பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும். மேலும் சில ஆவணங்களே வழங்க வேண்டியுள்ளதாகவும் அரச தரப்பு பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் திலீப பீரிஸ் நீதிமன்றில் தெரிவித்தார்.

இந்த வழக்கில் ஏனைய பிரதிவாதிகளாக நில மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பிரசாத் ஹர்ஷன டி சில்வா மற்றும் அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களான பத்ரவதி கமலதாச, சுதம்மிகா ஆட்டிகல்ல, சமன் குமார கலாபத்தி, டி. மெண்டிஸ் சலிய மற்றும் மல்லிகா குமாரி சேனதீர ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.(இ-7)

## நீதிமன்றத்தில் அனைத்து உண்மைகளையும் தெரிவிக்கத்தயார்-முப்படைகளின் பிரதானி

(கொழும்பு)

பொறுப்பு வாய்ந்த சிரேஷ்ட அதிகாரி என்ற வகையில் நான் எந்தக் குற்றத்தையும் வேண்டுமென்று செய்யவில்லை எனத் தெரிவித்துள்ள முப்படைகளின் பிரதானி ரவீந்திர விஜேகுணவர்த்தன நீதிமன்றத்தின் முன்னாள் அனைத்து உண்மைகளையும் சொல்வதற்குத் தயார் எனவும் தெரிவித்தார்.

சி.ஐ.டி.யினரால் விசாரணைக்கு அமைக்கப்பட்டுள்ள நிலையில் கொழும்பு ஊடகமொன்றிற்கு அவர் இதனைத் தெரிவித்தார்.

நான் எனது பதவிக்காலத்தில் எந்த சட்டவிரோதமான நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. வேண்டுமென்றே எந்தத் தவறையும் செய்யவில்லை எனவும் தெரிவித்தார்.

இதன் காரணமாக எனக்குத் தெரிந்த அனைத்தையும் நீதிமன்றத்தின் முன்னிலையில் தெரிவிப்பேன் என அவர் கூறினார். (இ-7)



# கோப்பாய் துயிலுமில்லம் முன்பாக நேற்று பெருமளவு பொலிஸார், இராணுவம் குவிப்பு!



(யாழ்ப்பாணம்)

**தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக நேற்று பெருமளவு இராணுவத்தினர் மற்றும் பொலிஸார், புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டிருந்தனர்.**

மாவீரர் நாள் நேற்று தமிழர் தாயகம் எங்கும் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் வடக்கு.கிழக்கு மாகாணங்களில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுப்பதற்கு பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் கடுமையான முயற்சிகளை மேற்கொண்ட போதும் அவை பெரியளவில் வெற்றியளிக்காத நிலையில் நினைவேந்தலை தடுப்பதற்கான முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டிருந்தனர்.

நேற்றுக் காலை கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார். இதன்போது அப்பகுதியில் பெருமளவு இராணுவத்தினர் மற்றும் பொலிஸார், புலனாய்வாளர்கள், குவிக்கப்பட்டிருந்தனர்.

அதேபோன்று கொடிகாமம், வடமராட்சி துயிலுமில்லங்களிலும் பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். (இ-9)

## 15 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் வீதி

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட உரும்பிராய் கிழக்கு சிவன்வீதி செல்லப்பா வீதி (ஒரு கிலோ மீற்றர்) வரையான வீதி 15 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமலுள்ளது.



பாடசாலைகள், ஆலயங்கள், பிரதேச சபை உப அலுவலகம், வைத்தியசாலை, சந்தை ஆகியவற்றுக்கு செல்லும் பிரதான வீதியான பலாலி வீதியுடன் இணையும் இவ் வீதியை தினமும் அதிகளவிலானோர் பயன்படுத்தி வருகின்றனர்.

2016 ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ஐ) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு காப்பெற் வீதியாக மாற்றும் ஒப்பந்தத்தில் முன்னாள் பிரதேச சபை செயலாளர் குமணன் கையெழுத்திட்ட போதும் இன்றுவரை வீதி புனரமைக்கப்படாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும். எனவே வலி. கிழக்கு தவிசாளர் இவ் வீதி தொடர்பாக காலம் தாழ்த்தாது உரிய கவனமெடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)

## மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலையின் தரம் 5, 2018 விடுகை மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா இன்று 28 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ். பரஞ்சோதி வித்தியாலய அதிபர் திருமதி வி.கடம்பமலர் கலந்து கொள்வார். (இ-5)

## கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்படுகின்ற கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை 29 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணியளவில் யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரியில் யாழ். வலயக்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) திருமதி த.மோகனராஜ் தலைமையில் நடைபெறும்.




இதில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்து கொள்வார். (இ-5)

## தவிசாளர் அலுவலகத்தில் மாவீரர்களுக்காக உறுதியுரை



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் விடுதலைப் போரில் ஆகுதியாகிய வீர மறவர்கள் நினைவுகூரப்பட்டுள்ளதுடன் தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள் நேற்றுக் காலை 9 மணிக்கு உறுதியுரையும் எடுத்துக்கொண்டனர்.

அக வணக்கத்துடன் ஆரம்பித்த நிகழ்வுகளில் தவிசாளர் தி. நிரோஷ், உப தவிசாளர் ம.கபிலன் ஆகியோரைத் தொடர்ந்து உறுப்பினர்கள் மெழுகுவர்த்திகளை ஏந்தி மாவீரர்களை அஞ்சலித்தனர்.

மாவீரர்களை இந்நாளில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாம் அஞ்சலிக்கின்றோம். மாவீரர்கள் எமது மண்ணுக்காக தம்மையே அர்ப்பணித்தார்கள். உடல், பொருள்,ஆவி என சகலவற்றினையும் எமது மக்களின் விடிவிற்காக அர்ப்பணித்தவர்கள். அவர்களை நாம் ஒவ்வொரு மணித்துளியும் நினைவுகூர்ந்து எமது மக்கள் பணியினை அர்ப்பணிப்புடனும் இலட்சியத்துடனும் முன்னெடுப்போம் என உறுதியுரையளித்தனர். (இ-9)

## ஆசிரிய ஆலோசகர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் வடக்கு மாகாண கல்வி வலயங்களின்நிலவும் ஆசிரிய ஆலோசகர் வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவங்களையும் தகைமைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான அறிவுறுத்தலை வலயக் கல்விப் பணிமனையிலும் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் www.edudept.np.gov.lk என்ற இணையத்தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

பூரணப்படுத்திய விண்ணப்பங்களை வலயக் கல்விப் பணிப்பாளரூடாக 2018.12.10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (இ)




கல்வியியல் ஆய்வுகள் மூலமாக சமகால பாடசாலை, கல்வியியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல் என்ற தொனிப்பொருளில் கல்விமாணி, கல்வி முதுமாணி, கலாநிதிப்பட்ட ஆய்வு இறுதி சமர்ப்பிப்பும் தீர்வுகளை நடைமுறைப்படுத்தல் ஆய்வு வெளிப்படுத்துகை அண்மையில் நோத் லங்கா சர்வதேச பல்கலைக்கழக பணிப்பாளர் எஸ்.ஏ.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. அதில் நிபுணத்துவ ஆலோசகர் கலாநிதி பா.தனபாலன், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் அருட்தந்தை கலாநிதி சிங்கராஜா, கல்வியியலாளர் திருமதி ஜே. உதயகுமார் ஆகியோர் மதிப்பீடுகளையும் ஆலோசனைகளையும் வழங்கினர்.


(படங்கள்: புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# யா/ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்


## தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு -2018




தி.சந்தோஸ்(191)
மாவட்ட நிலை 17



ஜெ.செரோன்(173)



ம.தீபிகன்(165)



கி.பிரேம்ஷாந்(164)



க.காவியா(164)

### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் விபரம்



| | | | | | |
|---|---|---|---|---|---|
| வ.சானுஜன் | -163 | ரா.சங்கீதா | -149 | இ.டினோஜன் | -128 |
| ட.கனிஸ்ரன் | -162 | ச.சியானு | -149 | வா.டர்வினா | -128 |
| உ.அக்ஷாயினி | -162 | த.கௌசிகன் | -146 | ச.கபிலன் | -125 |
| செ.மதுராங்கி | -160 | ச.லக்ஸ்வினி | -146 | ம.துஸ்வினா | -121 |
| ச.ரிஷான் கேதித்த | -160 | அ.அகிசனா | -145 | பா.ஹம்சிகா | -118 |
| ப.விநுகன் | -157 | உ.கஜானி | -141 | ற.டிலக்சன் | -114 |
| ஸ்ரீ.ஜானுகா | -157 | க.தீபிகா | -141 | ஸ்ரீ.கஜனி | -114 |
| நா.கோபிநாத் | -156 | வ.திஷேக்கா | -141 | கிசோக்காந் | -114 |
| ரா.சாருதன் | -156 | பி.லிதுசன் | -139 | ய.சதுர்த்திகன் | -113 |
| இ.தனுசாந் | -155 | ஜெ.அகிஜா | -139 | கு.ஸ்ரெபினா | -113 |
| க.கஜதீபன் | -154 | க.விஸ்வா | -137 | ஜெ.கௌதமி | -108 |
| கு.மகிஷாயினி | -153 | செ.கிருத்திசன் | -136 | ப.மகிஷா | -107 |
| ர.யாதர்சன் | -152 | இ.யதுர்ஷிகா | -135 | உ.யனுஸ்கா | -106 |
| சி.தமிழ்ச்செல்வன் | -151 | ஜெ.டிலான் | -134 | பா.யதுசன் | -105 |
| சி.நிருஜன் | -151 | ல.கௌதம் | -134 | த.தமிழினி | -104 |
| கா.துவாதயன் | -150 | ம.அஸ்வினி | -133 | சி.கபிஸ்சன் | -104 |
| ஜீ.லக்சனா | -150 | த.கஜப்பிரியன் | -132 | ந.தர்சிகா | -103 |
| | | அ.சிந்துஜா | -132 | சி.வர்சினி | -102 |
| | | | | மு.செந்தூரன் | -100 |



எமது மாணவச் செல்வங்களை நெறிப்படுத்தி அவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்து எமது பாடசாலையின் உயர்வுக்குப் பெருமை சேர்த்துத்தந்த அதிபர் யோ.ஜெகஆனந்தம் அவர்களுக்கும் எமது ஆசிரியர்களான திருமதி.நே.இரவீந்திரன், செல்வி.மு.கிருஷ்ணபாமினி திருமதி.பா.பாலமுரளீதரன், மற்றும் ஏனைய ஆசிரியர்களையும் உளப்பூரிப்போடு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(6566)

## வாழ்த்துவோர்:-பாடசாலை சமூகம்.

# சபரிமலை யாத்திரை புனித யாத்திரையாகப் பிரகடனம்

### அமைச்சர் டக்ளஸின் கோரிக்கையை அமைச்சரவை அங்கீகரித்தது

(கொழும்பு)

சபரிமலை யாத்திரையை புனித யாத்திரையாக பிரகடனம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.,

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி, இந்துமத அலுவல்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வைத்த விசேட அமைச்சரவைப் பத்திரத்திற்கே நேற்று கூடிய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இம்மாதம் 17ஆம் திகதி அமைச்சரைச் சந்தித்த கொம்பனித்தெரு ஸ்ரீஹரி ஹர சுதன் ஐயப்ப சுவாமிகளின் பிரதிப்குமார் தலைமையிலான யாத்திரைக குழுவினர், சபரிமலை யாத்திரையை புனித யாத்திரையாக பிரகடனம் செய்ய அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கையிலுள்ள அனைத்து சபரிமலை யாத்திரை மேற்கொள்ளும் யாத்திரிகர்கள் சார்பில் விடுத்த கோரிக்கையை விரைவில் நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சைட்டம் மாணவர்கள் 81 பேருக்கு எதிரான மனு ஜனவரியில் விசாரணைக்கு

(கொழும்பு)

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியில் பட்டம் பெற்ற 81 மாணவர்களைப் பதிவு செய்வதற்கு இலங்கை மருத்துவ சபைக்கு தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரிதாக்கல்செய்யப்பட்டுள்ள மனு எதிர்வரும் ஜனவரி மாதம் 24ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அரச பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் மூன்று பேர் இணைந்து இந்த அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்து ள்ளனர்.

குறித்த மனு நேற்று பிரதம நீதியரசர் நளின் பெரேரா உள்ளிட்ட மூன்று நீதியரசர்கள் குழு முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இலங்கை மருத்துவ சபை, சுகாதார அமைச்சு, உயர்கல்வி அமைச்சு, சட்டமா அதிபர் உள்ளிட்ட தரப்பினர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்றை அடிப்படையாக வைத்து சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியில் பட்டம் பெற்ற மாணவர்களைப் பதிவு செய்வதற்கு இலங்கை மருத்துவச் சபை நடவடிக்கை எடுத்துள்ளதாக மனுதாரர்கள் தெரிவித்தனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அந்தத் தீர்ப்பு அதனுடன் தொடர்புடைய மாணவர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டது என்றும் ஏனைய மாணவர்களைப் பதிவு செய்வதற்கு இலங்கை மருத்துவச் சபைக்கு அதிகாரம் இல்லை என்றும் மனுதாரர்கள் கூறியுள்ளனர்.

இதன் காரணமாக சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியில் பட்டம் பெற்ற 81 மாணவர்களையும் பதிவு செய்வதற்கு தடை உத்தரவு பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
உயரம்: 5' 4"
தகைமை/தொழில்: O/L, தனியார்
எதிர்பார்ப்பு: O/L, படித்தவர்
தொ.இ: B/9017

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 4
கி.பா: 41 சூரிசெவ் 8இல்
தகைமை/தொழில்: M.B.A,I.I.S, தனியார்
எதிர்பார்ப்பு: அரசதொழில்
தொ.இ: B/9018

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அனுசம் 2
கி.பா: 45 செவ் 7 இல்
உயரம்: 168 CM
தகைமை/தொழில்: B.sc,M.sc, பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: அரச நிர்வாக சேவை
தொ.இ: B/9020

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 37 உயரம்: 5' 6"
தகைமை/தொழில்:B.sc,தனியார், அவுஸ்திரேலியா
எதிர்பார்ப்பு: அரசதொழில்,வெளிநாடு
தொ.இ: B/9021

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்:பரணி 2
உயரம்: 4' 10"
தகைமை/தொழில்:A/L, அரசதொழில்
எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு
தொ.இ: G/9044

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 2
கி.பா: 29 செவ் 2 இல்
உயரம்: 4' 11"
தகைமை/தொழில்:I.T, பொறியியலாளர், தனியார்
எதிர்பார்ப்பு: அரச நிர்வாக சேவை
தொ.இ: G/9046

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்:கேட்டை 2 உயரம்: 5'2"
தகைமை/தொழில்: B.A
எதிர்பார்ப்பு: அரசதொழில்,வெளிநாடு
தொ.இ: G/9059

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 20 உயரம்: 5' 3"
தகைமை/தொழில்:Dip.in.Teaching, அரச தொழில்
எதிர்பார்ப்பு:அரச,தனியார், சொந்ததொழில்
தொ.இ: G/9062

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# மன்னார் மனிதப்புதைகுழி அகழ்வுப்பணியை இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் பார்வை





(மன்னார்)

**மன்னாருக்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜார்ன்ரோட், மன்னார் மனித புதைகுழி அகழ்வுப் பணிகளை நேரடியாகச்சென்று அவதானித்ததோடு அகழ்வுப் பணிக்குப் பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடினார். இக் கலந்துரையாடல் நேற்றைய தினம் அகழ்வுப் பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட 105 ஆவது நாளில் இடம்பெற்றது.**

மன்னார் நகர நுழைவாயிலில் உள்ள மனித புதை குழி அகழ்வு பணியானது கடந்த 12 ஆம் திகதி இடை நிறுத்தப்பட்டது.

பலத்த மழை காரணமாகவும்,அரச பணி காரணமாகவும் மன்னார் வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் சமிந்த ராஜபக்ஷ வெளிநாடு சென்றதாலும் அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில் 105 ஆவது நாளாக நேற்று மீண்டும் அகழ்வு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன் போது அகழ்வு பணிகளை நேரடியாக பார்வையிடுவதற்கு இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜார்ன் ரோட் மன்னாரிற்கு வருகை தந்து மன்னார் மனித புதைகுழி அகழ்வு பணிகளை நேரடியாக அவதானித்ததோடு,குறித்த அகழ்வு பணி தொடர்பாக உரிய விளக்கத்தையும், அகழ்வு பணிகள் தொடர்பில் பணிக்குப் பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷவிடம் கேட்டு அறிந்து கொண்டார்.

தற்போது வரை 239 மனித எலும்புக்கூடுகள் குறித்த அகழ்வு பணிகளின் போது கண்டுபிடிக்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளதோடு, அவற்றில் 230 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நேற்றைய அகழ்வு பணி தொடர்பில் செய்தி சேகரிக்க வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் குழு ஒன்றும் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-285)

## போக்குவரத்து வசதியின்மையால் அம்பாள்புர கிராம மக்கள் அவதி

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு அம்பாள்புரம் கிராமத்திற்கான போதிய போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலையில் மாணவர்கள்,பொதுமக்கள் கிராமத்திலிருந்து தினமும் 24 கிலோமீற்றர் கால்நடையாக சென்று வர வேண்டிய நிலை காணப்படுவதாகவும் தமக்கு போதிய போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க எவரும் முன்வருவதாக இல்லையென பாதிக்கப்பட்ட மாணவர்கள்,பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

தினமும் 85 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் காலையில் 12 கிலோமீற்றர் தூரம் கால்நடையாக வன்னி விளாங்குளம் பாடசாலைக்கும் பாடசாலை முடிந்து பிற்பகல் 12 கிலோ மீற்றர் கால்நடையாக வீட்டிற்கும் திரும்பிச்செல்லும் பரிதாபகரமான நிலை காணப்படுகின்றது.

போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு கடந்த 2010ம் ஆண்டில் இருந்து மாவட்ட அரச அதிபர் பிரதேச செயலாளர்,பாராளுமன்ற உறுப்பினர்கள்,அரசியல்வாதிகள் எல்லோரிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனையடுத்து இந்த மாணவர்களின் அவல நிலை தொடர்பில் கடந்த பெப்ரவரி மாதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டதற்கு அமைவாக தினமும் காலை 6.30 மணிக்கு அம்பாள் புரத்தில் இருந்து வன்னிவிளாங்குளம் மாங்குளத்திற்கும் பிற்பகல் 1.30 மணிக்கு அம்பாள் புரத்திற்கும் போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இது தவிர எந்த போக்குவரத்துச் சேவைகளும் இல்லாத நிலையில் தமக்கு போதிய போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி தருமாறு கோரியுள்ளனர். (2-315)

## பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஜெயந்தி நகர் மகாதேவ ஆச்சிரமத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வழமையான நிகழ்ச்சி நிரல்படி நடைபெறவுள்ளது. சகல அங்கத்தலைவர்களும் மெய்யன்பர்களும் பங்குபற்றி சிறப்பிக்குமாறு அறங்காவலர் சபையினர் கேட்டுள்ளனர்.(2)




# ஒட்டுசுட்டானில் விமானத்தாக்குதலில் உயிர்நீத்த பொதுமக்களின் நினைவேந்தல் அனுஷ்டிப்பு







(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு ஒட்டு சுட்டான் பகுதியில் விமானப் படையினரின் மிலேச்சத்தனமான குண்டுத் தாக்குதலில் உயிர்நீத்த 12 அப்பாவி பொதுமக்களின் 28 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்றைய தினம் நினைவிற் கொள்ளப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு ஒட்டுசுட்டான் சந்திப்பகுதியில் மாவீரர் நாள் நிகழ்வை நினைவிற்கொள்வதற்கு ஏற்பாடாகிக் கொண்டிருந்த வேளை இலங்கை விமானப் படையினரின் விமானங்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்தியுள்ளன. இதில் 12 அப்பாவி பொது மக்கள் உயிரிழந்துள்ளார்கள். இந்த மக்களின்28 ஆம்ஆண்டுநினைவேந்தல் வன்னிக்குறோஸ் அமைப்பின் ஏற்பாட்டில் நினைவிற் கொள்ளப்பட்டுள்ளது.

நிகழ்வில் உயிரிழந்தவர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்ட பந்தலில் வன்னிக்குறோஸ் அமைப்பின் கலாசார பேரவையின் மாவட்ட செயலாளர் சி. வேதவனம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் சுடரினை உயிரிழந்தவரில் ஒருவரின் உறவினர் ஏற்றி வைக்க தொடர்ந்து உயிரிழந்தவர்களுக்கு அவர்களின் உறவினர்களால் ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவிக்கப்பட்டுள்ளது.

மலர்வணக்கத்தை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தொடக்கி வைக்க தொடர்ந்து புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ.பிறேமகாந் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் சத்தியசீலன் உள்ளிட்ட வருகை தந்தவர்களினால் மலர் வணக்கம் செலுத்தப்பட்டு நிகழ்வில் நினைவுரையை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் நிகழ்த்தினார். (2-281)

# கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்த மாணவர்களுக்கு ஐயன்கன்குளத்தில் அஞ்சலி





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஐயன்கன்குளம் பகுதியில் கடந்த 2007ஆம்ஆண்டு இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினர் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் கொல்லப்புட்ட எட்டு பாடசாலை மாணவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் ஐயன்கன் குளம் பகுதியில் இடம்பெற்றது.

கடந்த 2007 ஆம் ஐயன்கன் குளம் பகுதியில் இருந்து ஆலங்குளம் நோக்கி நோயாளர் காவுவண்டியில் சென்ற பாடசாலை மாணவர்கள் மீது இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினர் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் எட்டு பாடசாலை மாணவர்கள் கொல்லப்பட்டனர்.

இவர்களது உடலங்கள் புதைக்கப்பட்ட இடத்தில் மக்கள் திரண்டு உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். நிகழ்வில் வ்ன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்,துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் சுஜாந்தன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களுடன் உறவுகள் அப்பகுதி மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# வவுனியா எரிபொருள் நிலையத்தில் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்பாக உள்ள எரிபொருள் நிலையத்தில் பணியாற்றும் ஒருவரிடம் இருந்து போதைப் பொருளை வவுனியா பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் நிரப்புநராக பணியாற்றும் ஒருவரை திடீர் பரிசோதனை செய்த பொலிஸார் அவரிடம் இருந்து சிறிய அளவில் ஹெரோயின் போதைப் பொருளை கைப்பற்றியுள்ளனர்.

இதனையடுத்து கடமையில் இருந்த மேலும் சிலரையும் சோதனைக்குட்படுத்திய பொலிஸார் போதைப்பொருளை வைத்திருந்த நபரை கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

# பெண் தலைமைத்துவக்குடும்பத்தின் வீடு புனரமைக்கப்பட்டு கையளிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாங்குளம் கற்குவாரிப்பகுதியில் காற்றினால் கூரைகள் தூக்கி வீசப்பட்டு காணப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பத்தின் வீட்டை நேரடியாகச் சென்று பார்வையிட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா விரைந்து நடவடிக்கை எடுத்து வீட்டைப் புனரமைத்து வழங்கியுள்ளார்.

கடந்த மே மாதம் வீசிய காற்றினால் வீட்டின் கூரை தூக்கி வீசப்பட்டதையடுத்து. கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோருக்கு பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக்குடும்பத்தினால் தெரியப்படுத்தப்பட்டது.

வீட்டின்நிலைமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜாவுக்கு தெரியப்படுத்தியதையடுத்து அன்றைய தினம் மாலை உடனடியாக அந்த வீட்டிற்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் வீட்டின் உரிமையாளர்களுடன் கலந்துரையாடி அந்த குறித்த வீட்டை புலம் பெயர் உறவான முல்லைத் தீவு குமுழமுனையைச் சேர்ந்த கனடா வாழ் சி.விஜிதரனின் பிறந்த தினத்தை முனனிட்டு ஒளிரும் வாழ்வு அமைப்பின் மூலம் சுமார் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் வரையான நிதியை செலவிட்டு கனடா வன்னி தமிழ் கலாசார அமையத்தின் ஊடாக வீட்டின் கூரை மற்றும் ஏனைய வேலைகளையும் முழுமையாக செய்து முடித்து இந்த வீட்டை நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு கையளிக்கப்பட்டுள்ளது. (2-281)

# ‘தமிழீழம் எங்கள் தாயடா’

## புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு முன்பாக நேற்று புலிக்கொடி பறந்தது





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு முன்பாக புலிக்கொடி பறக்கவிடப்பட்டுள்ளது

புதுக்குடியிருப்பு பாடசாலைக்கு முன்பாகவுள்ள மின்கம்பத்தில் சிவப்பு நிறச் சீலையிலே கீறப்பட்டு “தமிழீழம் எங்கள் தாயடா” என எழுதப்பட்டு குறித்த புலிக் கொடி பறக்கவிடப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை குறித்த புலிக்கொடி பறந்ததை அவதானித்தவர்கள் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். அதனைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு பொலிஸார் குறித்த புலிக் கொடியை அகற்றியதோடு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-281)




# தென்னை பயிர்ச்செய்கை சபையின் மானியங்கள் வழங்கும் நிகழ்வு





(கிளிநொச்சி)

தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் யாழ். பிராந்திய காரியாலயத்தின் ஏற்பாட்டில் 2018 ஆம் ஆண்டுக்குரிய மானியத் திட்டங்களில் பங்குபற்றியோருக்குரிய மானியங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி பலநோக்கு கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி அரசாங்க அதிபர் மற்றும் கரைச்சிப் பிரதேச செயலர் ஆகியோர் பங்குபற்றி மானியக் கொடுப்பனவுகளை வழங்கினர்.

அத்துடன் தென்னைப்பயிர்ச் செய்கை சபையும் கற்பகதரு சங்கங்களும் இணைந்து கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயம் மற்றும் பாரதிபுரம் வித்தியாலய விசேட தேவையுடைய மாணவர்களுக்கும் அவர்களது வேண்டுகோளுக்கு அமைய கற்றல் உபகரணங்களை வழங்கினர்.

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்த பிராந்திய முகாமையாளர்,

தென்னை பயிர்ச்செய்கையின் மூலம் குறைந்த வருமானமுடைய குடும்பங்களின் வருமானங்களை அதிகரிக்க முடியுமெனவும் கூறினார்.

இந்நிகழ்வில் 250 பயனாளிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். (2)

# கேப்பாபிலவு அ.த.க.பாடசாலையில் ஆயிரத்து ஒரு மரங்கள் நடும் திட்டம்





(பரந்தன்)

கனடா டொரண்டோ புளூஸ் டெவலப்மென்ட் பவுண்டேஷன் ஏற்பாட்டில் கேப்பாபிலவு அ.த.க.பாடசாலையில் ஆயிரத்து ஒரு மரங்கள் நடும் திட்டம் பாடசாலை வளாகத்தினுள் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில்நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கரைதுறைப்பற்று கோட்டக்கல்வி அதிகாரி ஸ்ரீபுஷ்பகாந். மனித உரிமை செயற்பாட்டாளர் முபாத். சமூக ஆர்வலர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்தி உறுப்பினர்கள், எழுத்தாளர்கள், கிராம பொது அமைப்பினர் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

பாடசாலை வளாகத்தினுள் நேற்று முன்தினம், நேற்று பயன்தரும் மரக கன்றுகள் நடப்பட்டுள்ளன. (2-312)

# மாவீரர் குடும்பங்கள் கௌரவித்து மதிப்பளிப்பு

(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் கிராமங்கள் தோறும் மாவீரர் குடும்பங்களை கௌரவித்து மதிப்பளிக்கும் நிகழ்வுகள் உணர்வெழுச்சியாக நடைபெற்றுள்ளது.

தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடி தமது இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரர்களது குடும்பத்தினரைக் கௌரவித்து மதிப்பளிக்கும் நிகழ்வுகள் கடந்த 21 ஆம் திகதி மாவீரர் வாரத்துடன் ஆரம்பமாகி தமிழர் தாயகப் பகுதிகள் எங்கும் மிகவும் உணர்வெழுச்சியாக இடம்பெற்றுள்ளது.

அந்தவகையில் கிளிநொச்சி மாவட்டத்தின் பல கிராமங்களில் கிளிநொச்சி மாவட்ட மாவீரர் பணிக்குழுவின் ஏற்பாட்டில் மாவீரர்களது பெற்றோர் உள்ளிட்ட உறவினர்கள் கௌரவித்து மதிப்பளிக்கப்பட்டு வருகின்றனர்.

இதற்கமைவாக நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டத்தின் உதயநகர், கிருஸ்ணபுரம், விவேகானந்தநகர், பெரியபரந்தன், திருநகர், ஊற்றுப்புலம், கோணாவில், யூனியன் குளம், உருத்திரபுரம், சிவநகர் போன்ற பகுதிகளில் மாவீரர் குடும்பங்கள் அழைக்கப்பட்டு, கௌரவித்து மதிப்பளிக்கும் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

கிளிநொச்சியில் மேற்படி பகுதிகளில் நடைபெற்ற மாவீரர் குடும்பங்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மற்றும் கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், கிளிநொச்சி மாவட்ட மாவீரர் பணிக்குழுவினர் எனப் பலரும் கலந்துகொண்டு மாவீரர் குடும்பங்களைக் கௌரவித்துள்ளனர். (2-281)

# கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் நினைவுதினம் அனுஷ்டிப்பு!!



(குருமன்காடு)

வவுனியா பலநோக்கு கூட்டுறவுசங்கத்தின் முன்னாள் தலைவரும் சிறந்த கூட்டுறவாளராகவும் சேவையாற்றிய சு.வீரசிங்கத்தின் இருபதாவது நினைவுதினம் வவுனியா பலநோக்கு கூட்டுறவுசங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள அன்னாரது திருவுருவச்சிலையில் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கபட்டது.

வவுனியா பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் ஜெகசோதிநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முன்னாள் தலைவரும், நகரசபை உறுப்பினருமான நா.சேனாதிராஜா, பிரதேச சபை உறுப்பினர் சுப்பிரமணியம், பொது முகாமையாளர் சி.புவனேந்திரன், முன்னாள் தலைவர் சிவலிங்கம், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கபட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (2-250)

# சட்டவிரோத மின்சாரம் பாய்ச்சல்; இருவருக்கு விளக்கமறியல்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாய் பகுதியில் அத்துமீறிய குடியேற்றவாசிகளான சிங்களவர்களின் சட்டவிரோத மின்சார கம்பியில் சிக்குண்டு கொக்குத்தொடுவாயைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்திருந்தார்.

இவர் மின்சாரம் தாக்கியே உயிரிழந்ததாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது உயிரிழந்தவரின் வயல் நிலத்திற்கு அருகிலுள்ள விவசாயிகள் மூவரிடம் மேற்கொண்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் வெலிஓயாவைச் சேர்ந்த இரண்டு சிங்களவர்களை கடந்த 23 ஆம் திகதி முல்லைத்தீவு குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவர்கள் இருவரையும் கடந்த 24 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது இருவரையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம்உத்தரவிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு குற்ற விசாரணைப்பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (2-281)

# தமிழ்க் கைதிகளின் விடுதலைக்கு பொறிமுறை உருவாக்கத் திட்டம்

(கொழும்பு)

தமிழ்க் கைதிகளை விரைவில் விடுதலை செய்வதற்கான பொறிமுறையொன்றை தயாரிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பில் உயர்மட்ட கலந்துரையாடல்கள் நடைபெற்றிருப்பதுடன், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பிரதியமைச்சர்களான சதாசிவம் வியாழேந்திரன், அங்கஜன் இராமநாதன் மற்றும் காதர் மஸ்தான் ஆகியோர் வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள தமிழ் கைதிகளை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர். புனர்வாழ்வு அளித்தாவது தம்மை விரைவில் விடுதலை செய்யுமாறு கோரியுள்ள தமிழ் அரசியல் கைதிகள், தமது விடுதலை விடயத்தில் சகல சிறுபான்மை அரசியல்வாதிகளும் ஒன்றிணைந்து செயற்படுமாறும் வலியுறுத்தியுள்ளனர்.

சிறுபான்மையினரின் ஆதரவைப் பெற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்ற பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் இணைந்திருக்கும் சந்தர்ப்பத்தில் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த இறுதிச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் ஆண்டாட்டுக்கு சிறைகளில் வாடவேண்டிய நிலையே இருக்கும் என கைதிகளைப் பார்வையிட்ட பிரதி அமைச்சர்கள் தெரிவித்தனர்.

கைதிகள் விடுதலை விவகாரத்தை முன்ன கர்த்திச் செல்ல யார் தலைமை வகித்தாலும் அவர்களுடன் தாம் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

பிரதி விவசாயத்துறை அமைச்சர் அங்கஜன் இராமநாதன் தெரிவிக்கையில், நாம் மகசின் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளைச் சந்தித்தோம். மொத்தமாகவுள்ள 105 தமிழ் அரசியல் கைதிகளில் 70 பேரைச் சந்தித்தோம். கைதிகள் எதிர்கொண்டுள்ள வேதனை கவலைக்குரியது. நல்லாட்சியூடாக ஏதாவது தீர்வு கிடைக்கும் என கடந்த மூன்றரை வருடங்களாக அவர்கள் எம்மை நம்பியிருந்தனர். ஏதாவது ஒரு பொறிமுறையின் கீழ் தாம் விடுவிக்கப்படுவோம் என நம்பி ஏமாந்துள்ளனர்.

கடந்த இரண்டு கிழமையாக கைதிகளின் விடுதலை தொடர்பில் நாம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, நிதியமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோருடன் நாம் குழுவாக இணைந்து செயற்படுகின்றோம். கைதிகளை விடுவிப்பதற்கான பொறிமுறையொன்றை தயாரிப்பது குறித்து கவனம் செலுத்தியுள்ளோம். இது தற்பொழுது சாத்தியமான நிலைப்பாட்டை எட்டியுள்ளது.

தண்டனை வழங்கப்பட்ட கைதிகள், இரண்டு மூன்று வருடங்களில் விடுவிக்கப்படவுள்ளோர், மேன்முறையீடு செய்தோர் என பல்வேறு கைதிகள் இருக்கின்றனர். ஜே.வி.பி கிளர்ச்சியின் பின்னர் பல சிறைக் கைதிகள் பொது மன்னிப்பின் 'அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர். அதன் பின்னர் தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது 12 ஆயிரம் முன்னாள் புலி உறுப்பினர்களை புனர்வாழ்வளித்து விடுவித்திருந்தார். இவ்வாறான நிலையில் எஞ்சியுள்ள 105 அரசியல் கைதிகளையும் விடுவிப்பது குறித்து கவனம் செலுத்தியுள்ளோம்.

தமது விடுதலையில் சிறுபான்மை பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிறுபான்மையினரின் நம்பிக்கையைப் பெற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்ற பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் சேர்ந்துள்ள நிலையில் கைதிகளை விடுவிப்பதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒரு சிலரை எதிர்வரும் வாரங்களில் அடையாளமாக விடுதலை செய்வதானது சகலரினதும் விடுதலை தொடர்பான நம்பிக்கையை ஏற்படுத்தும். தற்பொழுது உருவாகியுள்ள சந்தர்ப்பத்தை கட்சி பேதமின்றி பயன்படுத்த வேண்டும். இதனைப் பயன்படுத்தப்படாவிட்டால் என்றுமே விமோசனம் கிடையாது என்றார்.

பிரதியமைச்சர் வியாழேந்திரன்,

பெரும்பான்மையானவர்களின் நம்பிக்கையைப் பெற்ற பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சிறுபான்மை இனத்தவர்கள் சார்பில் கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு தென்பகுதியில் எதிர்ப்புக்கள் கிளம்பாது.

எனவே தற்பொழுது கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கடந்த மூன்றரை வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சியின் நிதியமைச்சர் சமர்ப்பித்த வரவு- செலவுத் திட்டங்கள் மற்றும் பிரதமராகவிருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் அவரைக் காப்பாற்றுவது போன்றவற்றுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத்தில் கையுயர்த்தியிருந்தது. ஒவ்வொரு தடவையும் நிபந்தனைகளை முன்வைத்து, அதாவது 25 கைதிகளை விடுவித்தாலே ஆதரவு வழங்குவோம் என்ற நிபந்தனைகளை முன்வைத்திருந்தால் சகலரையும் விடுவித்திருக்க முடியும். கிடைத்த நல்ல சந்தர்ப்பத்தை தவறவிட்டுவிட்டோம் என்ற குற்ற உணர்வு இன்னமும் உள்ளது.

தற்பொழுது கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை சிறுபான்மை அரசியல் தலைவர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, யார் பிரதமர் பதவிக்கு வந்தாலும் அது இரண்டாவது நிலைமையே.

முதலில் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட சிறுபான்மையினரின் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்படுவதே அவசியமாகும். எஞ்சியிருக்கும் இரண்டு வாரங்களுக்குள் இந்த விடயங்களுக்குத் தீர்வு காணப்பட வேண்டும். தற்பொழுதும் பிழையான முடிவை எடுத்தால் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்ந்தும் கேள்விக்குறியாகவே இருக்கும்.

குறிப்பாக கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி தாம் அனைவரும் ஒன்றிணைந்து உரிய அழுத்தத்தைக் கொடுத்து, பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வொன்றை வழங்க எதிர்பார்த்துள்ளோம். குழப்பமான அரசியல் சூழல் இருந்தாலும் 2020ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பொறுப்பில் இருப்பார் என்பதால் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பளித்து அல்லது உரிய பொறிமுறையின் அடிப்படையில் கைதிகளை விடுவிப்பதற்கான சந்தர்ப்பம் ஜனாதிபதிக்கு உள்ளது என்றார்.


பிரதியமைச்சர் காதர் மஸ்தான், நீண்டகாலமாக சிறையில் உள்ள அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதில் நாம் இணைந்து செயற்படுகின்றோம்.

இதற்காக சிலர் நடவடிக்கை எடுத்தால் சில சமூகங்கள் எந்தவித எதிர்ப்பும் இன்றி இதனை ஏற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கை உள்ளது.

இந்த விடயத்துக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க ஒரு தலைமை உருவாகினாலும் அவர்களுடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். (இ-7)

## முத்து விநாயகர்

# முன்பள்ளியை மூடி முள்வேலி



(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஜே/190 கிராம உத்தியோகத்தர் பிரிவில் இயங்கும் ஸ்ரீ முத்து விநாயகர் முன்பள்ளியை நேற்று முன்தினம் நபரொருவர் மூடி அடைத்துள்ளார்.

இதன் காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

முத்து விநாயகர் ஆலயத்துக்குச்சொந்தமான காணியை "99" வருட குத்தகைக்கு அரியாலை கிராம அபிவிருத்திச் சங்கம் பெற்றதாகவும் அதன் கீழ் பதிவு செய்யப்பட்டே முன்பள்ளி இரு வருடங்களுக்கு மேலாக இயங்கி வருவதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் நல்லூர் பிரதேச செயலாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது இச் சம்பவம் தொடர்பாக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளருக்கும் பொலிஸாருக்கும் அறிவித்ததாகவும் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக வடக்கு கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் ஜெயா தம்பையாவிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது,

ஸ்ரீ முத்து விநாயகர் முன்பள்ளி தனது அதிகாரத்துக்கு உட்பட்ட முன்பள்ளிகளின் பட்டியலில்உள்ளடங்கவில்லை எனவும் இதனால் உடனடி நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனினும் மாணவர்களின் கல்வி நடவடிக்கை பாதிக்கப்பட்டால்அப்பிரதேசமக்களுடன் கலந்துரையாடி முடிவொன்றை எடுப்பதாகத் தெரிவித்தார். (இ)


## Supply, Installation, Testing, Commissioning and Maintenance of Grid-Connected Solar Photovoltaic system for the University College of Jaffna.

1. The Director, University College of Jaffna, #29, Brown Road, Kokuvil, now invites sealed bids from eligible and qualified bidders for supply and installation of solar photovoltaic (PV) system as described as below. The work consists of Supply, Installation, Testing, Commissioning and Maintenance of 40 kW Net Metered Solar PV system.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the following requirements.
   a) Bidder shall have valid registration in Sri Lanka Sustainable Energy Authority under service provider for solar PV system.
   b) Bidder shall be a reputed business organization, having experience in supplying, installing, testing, commissioning and maintenance of similar type of solar PV system at least for last five (05) years.
   c) Minimum average annual turnover of LKR 30 Million or equivalent calculated as total certified payments received for contracts in progress or completed within immediate past 3 years
   d) The bidder has successfully completed one contract with; supply, install and commission of solar PV system more than 50 kW within immediate last 3 years
   e) The supplier shall have a regional agent/office within Jaffna peninsula for maintenance of the whole system and shall supply the spares within seven days of time.
   f) Manufacturer of the solar panel and related accessories shall have at least five (05) years experience in the design and manufacture of similar type of solar PV accessories.
   g) The make of solar panel and related accessories offered shall have satisfactory service record in Sri Lanka.

   Additional details are provided in the Bidding Documents.
4. Interested bidders may obtain further information directly/via 021-221-7794.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested Bidders on the submission of written application to "The Director, University College of Jaffna, #29, Brown Road, Kokuvil" from 28.11.2018 until 11.12.2018 from 9:00 Hrs to 15:00 Hrs upon payment of a non-refundable fee of Rs.5,000.00.
6. Bid shall be valid up to 77 days from the date of closing of bid. The execution period is 20 days.
7. Bids shall be addressed to the "The Director, University College of Jaffna, #29, Brown Road, Kokuvil" and deposited in the Tender Box provided for at "Bursar Room" on or before 14.00 hrs. on 12.12.2018. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of bidders/ their representatives.
8. All bids shall be accompanied by a Bid Security as follows,
   - For an amount Sri Lankan Rupees **90,000.00**
   - Valid up to **105 Days** from the date of closing of bids.
   - Issued by a bank operating in Sri Lanka licensed / registered by Central Bank of Sri Lanka acceptable to Employer.
   - Any Bid not accompanied with such Bid Security shall be rejected.

**Director / CEO,**
**University College of Jaffna,**
**No 29, Brown Road,**
**Kokuvil.**

(C-4522)

# இலங்கை மீது தடைகளை விதிக்கும் முடிவை ஐரோப்பிய ஒன்றியம் இன்னும் எடுக்கவில்லை

(கொழும்பு)

இலங்கையிலுள்ள தனி நபர்களை வைத்து தடைகளை விதிப்பது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் இன்னமும் எந்த முடிவையும் எடுக்கவில்லை என்று ஐரோப்பிய ஒன்றிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அண்மைய அரசியல் குழப்பங்களுக்கு காரணமான மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அரசியல்வாதிகளை இலக்கு வைத்து ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சில மேற்குலக நாடுகள் தடைகளை விதிக்கத் திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும், இத்தகைய எந்த நகர்வும் தற்போது முன்னெடுக்கப்படவில்லை என்றும் இதுபற்றிய கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் ஐரோப்பிய ஒன்றிய வட்டாரங்கள் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றிடம் தெரிவித்துள்ளன.

கடந்த மாதம் 26 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்ட பின்னர், இடம்பெற்று வரும் பல்வேறு மாற்றங்களால் ஐரோப்பிய ஒன்றியம் கவலை கொண்டிருப்பதுடன், இலங்கை அரசாங்கம் ஜனநாயக நடைமுறைகளையும் அரசியலமைப்பையும் முறையாகப் பின்பற்ற வேண்டும் என்றும் ஏனைய பல நாடுகளுடன் இணைந்து கோரிக்கைகளை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிரதமர் அலுவலகத்தினை கட்சி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துகின்றார் நாமல்

(கொழும்பு)



பிரதமர் அலுவலகத்தினை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துகின்றார் என கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் என தெரிவிக்கப்படுவதில் எந்த பதவியையும் வகிக்காத நாமல் ராஜபக்ஷ பிளவர் வீதியில் அமைந்துள்ள பிரதமர் அலுவலகத்தினை அரசியல் நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தி வருகின்றார்.

நாமல் ராஜபக்ஷ இந்த அலுவலகத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதேச உறுப்பினர்களை சந்தித்து வருகின்றார் எனவும் கொழும்பு டெலிகிராவ் தெரிவி த்துள்ளது.

கடந்த 25ஆம் திகதி நாமல் ராஜபக்ஷ பொதுஜனபெரமுனவின் சூரியவெ உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை சந்தித்தார், 24ஆம் திகதி கட்டுவானவை சேர்ந்தவர்களையும், 26 ஆம் திகதி வீரகெட்டியவை சேர்ந்தவர்களையும் சந்தித்தார். இந்த சந்திப்புகள் அனைத்தும் பிரதமர் அலுவலகத்திலேயே இடம்பெற்றன என கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது. (இ-7)

# வெகுவிரைவில் சிறை செல்லவுள்ள முக்கியஸ்தர்களின் பெயர் விபரம்

(கொழும்பு)

வெகு விரைவில் சிறைக்குச்செல்லவிருக்கும் அனைவரினதும் பெயர் விபரங்களையும் தம்பர அமில தேரர் வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே தம்பர அமில தேரர் விரைவில் சிறைக்கு தண்டனை பெற்று செல்லவிருக்கும் நபர்களின் பெயர் விபரங்களையும் எந்தெந்த குற்றங்களுக்காக சிறைக்கு செல்லவுள்ளார்கள் என்ற பட்டியலையும் வெளியிட்டுள்ளார்.

இதன் காரணமாகவே மகிந்த தரப்பு மைத்திரியோடு இணைந்து ஜனநாயத்திற்கு எதிரான சதி முயற்சியில் இறங்கியுள்ளது என்றும் தேரர் தெரிவித்தார். அந்த வகையில்,

1. மூன்றரைக் கோடி ரூபாய் ஊழல் மோசடி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி வழக்கு விசாரணையின் இறுதித் தீர்ப்பு

2. நாமல் ராஜபக்ஷ விற்கு எதிரான வழக்கு விசாரணை எதிர்வரும் ஜனவரி மாதம் 23ஆம் திகதி ஆரம்பம்

3. நாமல் ராஜபக்ஷவிற்கு எதிராக எதிர்வரும் 30ஆம் திகதி 3 கோடி ரூபாய் பண மோசடி வழக்கு விசாரணை



4. மகிந்தானந்த அளுத்கமகேவிற்கு எதிரான வழக்கு விசாரணை எதிர்வரும் ஜனவரி மாதம் 23 ஆம் திகதி ஆரம்பம்

5. விமல் வீரவன்சவின் மனைவிக்கு எதிரான கடவுச்சீட்டு மோசடி தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி நடைபெறும்.

6. திவிநெகும வேலைத்திட்டத்தின் கீழ் 3000 கோடி ரூபாய் பண மோசடி தொடர்பாக பஷில் ராஜபக்ஷவிற்கு எதிரான வழக்கு விசாரணை நவம்பர் மாதம் 26ஆம் திகதி (நேற்று முன்தினம்)

7. ஜோன்ஸ்டனுக்கு எதிரான வழக்கு விசாரணை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி நடைபெறும்.

8. விமல் வீரவன்சவிற்கு எதிரான வழக்கு விசாரணை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி நடைபெறும்.

9. விமல் வீரவன்சவிற்கு எதிரான 40 அதி சொகுசு வாகனக் கொள்வனவு வழக்கு விசாரணை கடந்த 19ஆம் திகதி நடைபெற்றது. அவ்வழக்கு விசாரணை மீண்டும் எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

10. கோத்தபாய ராஜபக்ஷவிற்கு எதிராக விஷேட நீதிமன்றில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 11, 12, 13 மற்றும் 14 ஆகிய திகதிகளில் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது.

11. காமினி செனரத்திற்கு எதிராக தொடர்ச்சியாக வழக்கு விசாரணை இடம்பெறவுள்ளது.

மேற்கண்டவாறு தேரர் பட்டியலிட்டதோடு இதைத் தவிர மேலும் பல வழக்கு விசாரணைகள் இடம்பெற்று பலர் சிறைச்சாலைக்கு செல்லவுள்ளதாகவும் தெரிவித்தார். (இ-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# சாயவேர் / இம்பூரல்

**Botanical Name:olded landia umbellata**
**Family: Rubiaceae**
**Engl: chaya root**
**Sinh:Saya**

இது தரையோடு தரையாக ஒட்டப்படராமல் சிறிது தலைதூக்கி நிமிர்ந்து நன்கு அடர்த்தியாக வளரும் ஓராண்டுச் செடியாகும். கணுக்களில் வேர் விடுவதில்லை. சுமார் 15-20 செ.மீ. வரைக்கும் வளருகின்ற பல கிளைச் செடிகள் வேரினின்றும் தோன்றி நான்கு பக்கங்களிலும் படரும்.

அதிக அகலமில்லாத நீண்ட சிறிய இலைகள் சுமார் 2 செ.மீ. நீளமும் 3 மி.மீ. அகலமும் உள்ளதாய் சிறிது நெருக்கமாக இருக்கின்றன. நல்ல வெண்ணிற இதழ்கள் நான்குடைய இதன் சிறிய பூக்கள் கொத்தாகப் பூக்கும்.

கருகியதும் சிறிய காய்கள் காய்த்து நெத்தாக மாறும். கோடை காலத்தில் சாய்ந்துவிடும். மழை பெய்ததும் திரும்ப வேரினின்றும் துளிர்விட்டுவளரும். வருடம் முழுவதும் பூக்கள் காணப்படும்.

இனவிருத்தியும் பரம்பலும்

எல்லா வகை மண்களிலும் தானாக முளைத்து வளரும். தரிசு நிலங்களில் சர்வ சாதாரணமாகக் காணலாம். விதைகளைத் தூவியும் சிறு கன்றுகளை பிடுங்கி 30 செ.மீ.இடைவெளி விட்டு நட்டு பயிரிடலாம்.





மருத்துவ பயன்கள்

இம்பூரல் இலைகளை நிழலில் உலர்த்தி சூரணமாக வைத்துக்கொண்டு இந்த சூரணப் பொடியை அரிசி மாவுடன் இரண்டு தே.க.அளவு கலந்து அடை போலச் செய்ய வேண்டும். பிறகு அதை தினசரி உணவுடன் உண்டு வந்தால் என்புருக்கி எனும் நோய் குணமாகும்.

வாயால் சளியுடன் இரத்தம் வரும் நிலைமைக்கு சிறந்ததொரு மூலிகையாகும். இதற்கு 25 கிராம் இலைகளை அரைத்து சாறு பிழிந்து தேனுடன் கலந்து தினமும் 3 வேளை எடுக்கலாம். அல்லது இம்பூரல் எனும் மூலிகையை வேருடன் பிடுங்கி கழுவி நன்கு நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து வைத்துக் கொள்ளலாம்.

இந்தத் தூளில் 2 கிராம் அளவு தினமும் இரு வேளை தேனில் எடுக்கலாம். அல்லது 35 கிராம் இலையை 100 கிராம் தானிய மாவுடன் சேர்த்து அடை தயாரிக்கலாம்.

மார்பு எரிச்சலுக்கு இந்த மூலிகையின் இலைகளை இடித்து சாறு பிழிய வேண்டும். 20 மில்லி சாற்றுடன் அரை டம்ளர் பசும்பால் கலந்து சீனி சிறிது சேர்க்க வேண்டும். அதைக் காலையில் பல் துலக்கியவுடன் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். குடித்தால் பித்த வாய்ப்பு சார்ந்து எழக்கூடிய மார்பு எரிச்சல் அடங்கும்.

காசநோய் ஆரம்ப நிலையாயினும் நோய் தீவிரமடைந்த நிலையாயினும் இம்பூரல் மூலிகை சிறந்த பயனளிக்கும்.

வேருடன் சேர்ந்த இம்பூரல் 100 கிராம், அதிமதுரம் 35 கிராம், சிற்றுரத்தை 30 கிராம் ஆகியவற்றை இடிந்து பொடி செய்து அரித்து எடுத்துக் கொள்ள வேண்டும். இதில் 1 தேக்கரண்டி அளவு எடுத்து ஒரு டம்ளர் நீர் விட்டு காய்ச்சி 1/2 டம்ளராக சுண்டச் செய்து குடி நீராக்க வேண்டும்.

பின்பு அதில் ஒரு தே.க.தேன் விட்டு 20 நாட்கள் முதல் 40 நாட்கள் வரை அருந்தி வந்தால் காசநோய் தணியும்.

இம்பூரல் இலைகளையும் வேரையும் குடிநீராக்கி அந்த குடிநீரைக் கொண்டு நச்சுக்கடிபட்ட விரணங்களை கழுவலாம்.

இருமல், ஆஸ்துமா, காசநோய் முக்கியமாக சளியுடன் கூடிய இரத்த வாந்திக்கு சிறந்த மருந்து.

இம்பூரல் இலேகியமாகும்

இம்பூரல் வேர் 1500 கிராம், சாதிக்காய் 55 கிராம், சாதிபத்திரி (இலை) 55 கிராம்,வால் மிளகு 55 கிராம், இலந்தப் பட்டை 55 கிராம், ஏலக்காய் 55 கிராம், நிலப்பனங்கிழங்கு 200 கிராம், பனை வெல்லம் 8 கிலோ, நெய் 500 மில்லி, பசும்பால் 4 லீற்றர் 1-7 வரையுள்ள சரக்குகளை நன்கு இடித்து அரிந்து சூரணம்/ பொடி செய்து பனை வெல்லத்தை பசும்பாலில் கரைத்து வடிகட்டி, காய்ச்சி, சூரணப் பொடியை சேர்த்து கலந்து சேகரித்து வைத்துக் கொள்ளவும் 5-10 கிராம் அளவு காலை, மாலை எடுக்கவும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

வேருடன் கூடிய இம்பூரல் மூலிகையை நிழலில் உலர்த்தி பொடித்து அரிந்த சூரணப் பொடி பங்கு, வெள்ளை மிளகு 1/4 பங்கு எடுத்து இடித்து அரித்து மேற்படி பொடியுடன் கலந்து வெந்நீரில் அரைத்து ,உருண்டையாக்கி வைத்துக் கொள்ளவும். நாட்பட்ட இருமலுக்கு வாயில் போட்டு உமிழ்ந்து வர இருமல், ஆஸ்துமா நன்கு குணமடையும்.

சுவாசக் குழாயில் ஏற்படும் தாபிதத்திற்கு இம்பூரல் வேர் ஒரு பங்கு, 1/4 பங்கு வெண்மிளகு இவற்றை பொடித்து இம்பூரல் சாற்றால் அரைத்து சிறிய வில்லைகளாகத் தட்டி உலர்த்தி வாயில் போட்டு உமிழ்ந்துவர மேற்படி தாபிதம் குணமாகும்.

# பாரதம்

## ராஜீவ் கொலை விவகாரம்

# முன் விடுதலைக்கான விதிகள் இல்லை

## மத்திய அரசு அறிவிப்பு!



(சென்னை)

தண்டனைக் கைதிகளின் விடுதலையைக் குறித்து பரிசீலிக்க, எந்த சட்ட விதிகளும் மத்திய அரசிடம் இல்லையென அறிவிக்கப் பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், பேரறிவாளன் எழுப்பிய கேள்விக்கு, மத்திய உள்துறை வழங்கியுள்ள பதிலில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், 28 ஆண்டுகளாக பேரறிவாளன், நளினி உள்ளிட்ட 7 பேர், சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை விடுதலை செய்யக் கோரி பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர். சட்டப்பிரிவு 161 இன்படி, தமிழக சட்டப்பேரவை நிறைவேற்றிய தீர்மானம் ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த 2012 ஆம் ஆண்டு, பேரறிவாளன் எழுப்பிய நான்கு கேள்விகளுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு பின் மத்திய உள்துறை பதில் வழங்கியுள்ளது.

மத்திய அரசு விடுதலை செய்த தண்டனைக் கைதிகள் குறித்தும், இதற்காக மத்திய அரசு விதித்துள்ள, வகுத்துள்ள விதிகளின் நகல்கள் வழங்கவேண்டும் என்பது உள்ளிட்ட நான்கு கேள்விகளை கேட்டிருந்தார்.

இதற்கு கடிதம் மூலம் பதில் வழங்கியுள்ள உள்துறை அமைச்சின் அதிகாரி மனாஸ் மொன்றல், தண்டனைக் கைதிகளின் விடுதலை குறித்து பரிசீலிக்க, எந்த சட்டவிதிகளும் மத்திய அரசிடம் இல்லையெனத் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு விடுதலை செய்துள்ள கைதிகளின் பட்டியல் தயார் ஆகாகததால், பின்னர் வழங்குவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (4-7)

## மாலைதீவு முன்னாள் ஜனாதிபதிக்கு விதிக்கப்பட்ட 13 ஆண்டுகள் சிறைத்தண்டனை இரத்து

(மாலே)

பயங்கரவாத வழக்கில் தொடர்புபடுத்தி மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி முகமது நஷீத்துக்கு விதிக்கப்பட்ட 13 ஆண்டு சிறைத்தண்டனையை அந்நாட்டு உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் இரத்துச் செய்தது.

மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி முகமது நஷீத் (வயது-49), கடந்த 2008 ஆம் ஆண்டு அந்நாட்டில் நடந்த முதல் பொதுத் தேர்தல் மூலம் ஜனநாயக முறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஜனாதிபதியாவார். கடந்த 2012 ஆம் ஆண்டு ஆட்சியை அப்துல்லா யாமீன் என்பவரிடம் நஷீத், பறிகொடுத்தார்.

அப்துல்லா யாமீன் தலைமையிலான அரசு முஹம்மது நஷீத் மீது பல்வேறு வழக்குகளை போட்டது. தனது அதிகாரத்தை பயன்படுத்தி நீதிபதியை கைது



செய்ததாக தீவிரவாத தடுப்பு சட்டத்தின்கீழ் தொடரப்பட்ட வழக்கில் இவருக்கு 13 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து, அவர் சிறையில் அடைக்கப்பட்டு, தண்டனை அனுபவித்து வந்தார்.

சிறைவாசத்தின்போது கடும் முதுகுவலியால் சிறையில் அவதிப்பட்ட அவருக்கு தண்டு வடத்தில் சிகிச்சை நடத்த வேண்டியுள்ளது.

அதற்காக இங்கிலாந்தில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைபெற முடிவு செய்து அரசிடம் அனுமதி கேட்டார். அதற்கு மாலை தீவு அரசு அனுமதி மறுத்து விட்டது. வெளிநாடு செல்லும் நஷீத் மீண்டும் திரும்பி வருவார் என அவரது உறவினர்கள் யாராவது உத்தரவாதம் அளித்தால் மட்டுமே அனுமதி வழங்கப்படும் என அரசு அறிவித்து விட்டது.

அவரது நிலைமை மேலும் மோசமடைந்ததையடுத்து சிகிச்சைக்காக நஷீத் வெளிநாடு செல்ல அனுமதிக்குமாறு மாலைதீவு அரசுக்கு அமெரிக்கா, இந்தியா மற்றும் இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் வலியுறுத்தினர்.

இதனையடுத்து, சிகிச்சைக்காக இங்கிலாந்து நாட்டுக்கு செல்ல அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டது. கடந்த 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சிகிச்சைக்காக இங்கிலாந்து செல்ல மாலைதீவில் இருந்து முகமது நஷீத் புறப்பட்டுச் சென்றார். சிகிச்சைக்கு பின்னர் அவர் மாலைதீவுக்கு திரும்பாமல் இலங்கை நாட்டில் அரசியல் தஞ்சம் அடைந்தார்.

மாலைதீவு ஜனாதிபதி பதவிக்கு செப்டெம்பர் 23 ஆம் திகதி தேர்தலில் அப்துல்லா யாமீன் தோல்வி அடைந்தார். புதிய ஜனாதிபதியாக இப்ராஹிம் முஹம்மது சோலிஹ் பதவியேற்ற நிலையில் முகமது நஷீத் சஅண்மையில் தாய்நாடு திரும்பினார்.

இந்நிலையில், தனக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையை எதிர்த்து முன்னர் மாலைதீவு உச்ச நீதிமன்றில் முஹம்மது நஷீத் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கின் விசாரணைக்கு அவரது சட்டத்தரணி ஹிஸான் ஹூஸைன் ஆஜராகி வந்தார்.

நேற்று முன்தினம் இவ்வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதி முஹம்மது நஷீதுக்கு விதிக்கப்பட்ட 13 ஆண்டு சிறைவாசத்தை இரத்து செய்து உத்தரவிட்டார். (4-7)

## செவ்வாய் கிரகத்தில் அமெரிக்க செயற்கை கோள் தரை இறங்கியது

### நாசா விஞ்ஞானிகள் மகிழ்ச்சி

(கலிபோர்னியா)

நாசா அனுப்பிய இன்சைட் விண்கலம் 6 மாத பயணத்திற்குப் பிறகு செவ்வாய்க்கிரகத்தில் வெற்றிகரமாக தரை இறக்கப்பட்டதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வாழ்த்து தெரிவித்தார்.

அமெரிக்காவின் 'நாசா' விண்வெளி மையம் செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் வாழ முடியுமா? என ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

கடந்த 1997ஆம் ஆண்டு 'நீர்' ஆதாரத்தை கண்டறிய 'யத்பைண்டர்' என்ற விண்கலத்தை அனுப்பியது.

2003ஆம் ஆண்டில் 'பீகிள் 2' என்ற விண்கலத்தை அனுப்பி ஆய்வு மேற்கொண்டது. 2004 ஆம் ஆண்டில் 'ரோவர்' என்ற விண்கலத்தை அனுப்பியுள்ளது. இது அங்கு தரை இறங்கி நீர் உள்ளதா? என ஆய்வு மேற்கொண்டு வருகிறது.



இந்த நிலையில், செவ்வாய் கிரகத்தின் உள் பகுதியில் தீவிர ஆராய்ச்சி மேற்கொள்ள 'இன்சைட்' என்ற செயற்கைக் கோளை அனுப்பியுள்ளது. இது ரூ.7400 கோடி செலவில் உருவாக்கப்பட்டது. கடந்த மே 5ஆம் திகதி அமெரிக்காவின் கலிபோர்னியாவில் இருந்து விண்ணில் செலுத்தப்பட்டது. அது 6 மாதங்களாக பயணம் மேற்கொண்டது.

50 கோடி கி.மீ. தூரம் கடுமையான பயணத்துக்கு பிறகு இன்று இந்திய நேரப்படி அதிகாலை 1.30 மணிக்கு தரை இறங்கியது.

அப்போது கடுமையான புழுதி புயல் வீசியது. இருந்தும் மிக பாதுகாப்பாக இன்சைட் செயற்கை கோள் தரை இறக்கப்பட்டது. அதை தொடர்ந்து முதல் புகைப்படம் பூமிக்கு அனுப்பியது.

புழுதி புயல் காரணமாக இந்த புகைப்படம் தெளிவாக இல்லை. அதன் பின்னர் செவ்வாயின் மேற்பரப்பு புகைப்படம் பூமிக்கு வந்தது. அது மிக தெளிவாக இருந்தது.

'இன்சைட்' செயற்கை கோள் செவ்வாய் கிரகத்தில் தரை இறங்கியதும் கலிபோர்னியாவில் உள்ள ஜெட் புரோபுல்சன் ஆய்வகத்தில் இருந்த விஞ்ஞானிகள் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். ஒருவரையொருவர் ஆரத் தழுவிக் கொண்டனர். இந்த ஆய்வகத்தின் தலைமை நிர்வாகி ஜேம்ஸ் பிரைடைன் ஸ்டைன் விஞ்ஞானிகளுக்கு வாழ்த்து தெரிவித்தார். இது ஒரு 'அதிசயிக்கத்தக்க நாள்' என வாழ்த்தினார். 'இன்சைட்' செயற்கை கோள் செவ்வாய் கிரகத்தில் வெற்றிகரமாக தரை இறக்கப்பட்டதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வாழ்த்துத் தெரிவித்தார்.

இந்த விண்கலம் செவ்வாய் கிரகத்தின் தட்ப வெப்ப நிலை, அதன் தன்மை குறித்து ஆய்வு மேற்கொள்ளும் அத்துடன் தண்ணீர் இருக்கிறதா? என்பதை தீவிரமாக ஆராயும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (4-7)

## இரு இடங்களி
## 17 பேர் பரிதாப

(மொகடிஷ்)

சோமாலியாவில் இடம் பெற்ற இரு வெவ்வேறு குண்டுத் தாக்குதல்களில் 17 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சோமாலிய தலைநகர் மொகடிஷ்விலுள்ள வடாஜிர் மாவட்டத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் மூவர் உயிரிழந்த அதே வேளை, சோமாலியாவின் மத்திய பகுதியில் இடம் பெற்ற மற்றுமொரு தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 14 பேர் உயிரி

இவ்விரு
முன்தினம் தி
தாகத் தெரிவிக்

வடாஜிர் ம
யொன்று க்கு
வெடிப்பொருட்
வெடிக்க வை

## தலிபான்கள் மீண்
## இருபது பொலிஸ

(காபூல்)

ஆப்கானிஸ்தானில்பொலிஸாரை குறி வைத்து தலிபான்கள் நடத்திய தாக்குதலில் 20 பேர் பலியாகினர்.

இதுகுறித்து ஆப்கான் அதிகாரிகள் தரப்பில், "ஆப்கானில் ஃபராஹ் மாகாணத்திலுள்ள லாஷ் வா ஜூவான் மாவட்டத்தில் புதிய தலைமைப் பொலிஸ் அதிகாரி நியமன நிகழ்ச்சியில் தலி



## பிரெக்சிற் திட்

## அமெரிக்க-பிரித்
## வர்த்தகத்தை பா

### ட்ரம்ப் குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)

பிரித்தானிய பிரதமர் தெரேசா மே-யின் பிரெக்சிற் திட்டம், அமெரிக்க-பிரித்தானிய வர்த்தக் உடன்பாட்டிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வோஷிங்டனில் நேற்று
முன்தினம்
கருத்து தெரி
குறிப் பிட்டா
"பிரித் தானி
த் திலிருந்
வெளி யே
வதற்கு அனு
ம தி ப் ப த

## உக்ரேய்னில் 30 நாட்களுக்கு
## இராணுவச் சட்டம் அமுலாக்கம்

(கீவ்)

ரஷ்யாவின் அச்சுறுத்தலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் உக்ரேய்ன் நாட்டில் இன்று முதல் 30 நாட்களுக்கு இராணுவச் சட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

உக்ரேய்னின் கிரிமியா பகுதியை கடந்த 2014 இல் ரஷ்யா தன்னுடன் இணைத்ததில் இருந்து இரு நாடுகளுக்குமிடையே பதற்றமான சூழல் நிலவி வருகிறது. இந்நிலையில், கிரிமியா அருகே உக்ரேய்ன் நாட்டைச் சேர்ந்த 3 கடற்படை கப்பல்களை ரஷ்யா நேற்று முன்தினம் கைப்பற்றியது. கிரிமியா அருகே உள்ள கெர்ச் ஜலசந்தியை உக்ரேய்ன் கப்பல்கள் கடந்த போது, தங்கள் பகுதியில் சட்டவிரோதமாக நுழைந்ததாக கூறி இந்த நடவடிக்கையை ரஷ்ய இராணுவம் எடுத்திருக்கி

### ரஷ்யாவின் அச்சுறுத்தலுக்கு பதில

றது. ரஷ்யா மற்றும் உக்ரேய்ன் நாடுகள் பகி
ந்து கொள்ளும் கெர்ச் ஜலசந்தியானது, அசோ
கடலுக்கு செல்லும் ஒரே பாதை ஆகும். அந்
பகுதியில் ரஷ்யா தனது டேங்கர் கப்பலை
நிறுத்தியுள்ளது. அத்துடன் ரஷ்ய போர்
விமானங்களும் அந்த் பகுதியில் பறக்கின்
றன. உக்ரேய்ன் கப்பல்களை ரஷ்யா கைப்ப
றியதால் அசோவ் கடற்பகுதியில் பதற்ற
அதிகரித்துள்ளது.

இந்த சூழ்நிலையில், உக்ரேய்னின் ரஷ்
எல்லையில் உள்ள குறிப்பிட்ட பிராந்தியங்
ளில் இராணுவத்திற்கு முழு அதிகார
வழங்கக்கூடிய இராணுவச் சட்டத்தை அமு
படுத்த உக்ரேய்ன் அரசு முடிவு செய்தது. இ
ற்காக பாராளுமன்றத்தில் நேற்று முன்தின
மசோதா தாக்கல் செய்யப்பட்டது. விவாதத்
ற்கு பிறகு மசோதா மீது வாக்கெடுப்பு நடத்தப்ப
டது. மசோதாவை நிறைவேற்ற 226 உறுப்பினர்
ளின் ஆதரவு தேவை என்ற நிலையில், மசோ
தாவிற்கு ஆதரவாக 276 உறுப்பினர்கள் வாக்
ளித்தனர் இதையடுத்து இன்று புதன்கிழமை கால
9 மணி முதல் 30 நாட்களுக்கு இராணுவ
சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. (4-7

# வெளிநாடு

## ளில் குண்டுவெடிப்பு ாபமாக உயிரிழப்பு!

உயிரிழந்தனர்.
விரு குண்டு வெடிப் புகளும் நேற்று னம் திங்கட்கிழமை இடம்பெற் றிருந்த தெரிவிக்கப்ப டுகிறது.
ஜிர் மாவட்டத்தின் கடைத் தொகுதி று க்கு முன்னால் நிறுத்தப்ப ட்டிருந்த பொருட்கள் நிரப்பப்பட்ட காரொன்றை க வைத்து நடத்தப் பட்ட தாக்குதலில் மூவர் உயிரிழந்தனர்.

எனினும், இந்த உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுவதாகப் பொலிஸ் அதிகாரி மேஜர் மொஹமட் ஹுசைன் தெரிவித்தார்.

இதேவேளை, சோமாலியாவின் மத்திய பகுதியில் ஒரு மதத் தலத்தை இலக்குவைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு மற்றும் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் மத குரு உட்பட 14 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## ளடும் தாக்குதல் ஸார் உயிரிழப்பு!



தலிபான்களின் பிடியில் இருந்த ஆப்கானிஸ்தானை, அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் கடந்த 2001 ஆம் ஆண்டு மீட்டன. எனினும், ஆப்கானிஸ்தானில் அண்மைக் காலமாக இராணுவத்தினர், பொலிஸாரை குறிவைத்து தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (4-7)

பான்கள் நடத்திய தாக்குதல் நடத்தியதில் 20 பொலிஸார் கொல்லப்பட்டனர்.

நான்கு பேர் காயமடைந்தனர். இந்த தாக்குதலில் அம்மாவட்டத்தின் புதிய பொலிஸ் அதிகாரியாக நியமிக்கப்பட இருந்த நபரும் கொல்லப்பட்டார்" என்று கூறப்பட்டுள்ளது. இந்தத்தாக்குதலுக்கு தலிபான்கள் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர்.

## சேதமடையும் சீனப் பெருஞ்சுவர்



உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றான சீனப் பெருஞ்சுவர் சேதமடைந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலக அதிசயங்களில் பிரமாண்டமான ஒன்று சீனப் பெருஞ்சுவர். சீனப் பேரரசர் கின் ஷி ஹுவாங்கின் யோசனையின் பேரில் இந்தப் பெருஞ்சுவர் கிழக்கே ஹெபேய் மாகாணத்திலுள்ள ஷாங்ஹாய் குவானில் தொடங்கி மேற்கே லோப்நூர் வரையில் 8,850 கி.மீ. தூரத்துக்குப் பிரமாண்டமாய் நீளும்.

சுமார் 2,000 ஆண்டுகள் பழைமை வாய்ந்த பல சிறப்புகளைப் பெற்ற சீனப் பெருஞ்சுவர் தற்போது சேதமடைந்து வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இடியும் நிலையில் இருக்கும் பகுதிகள் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டு வந்தாலும் சுவரின் 30 சதவீதம் பலத்த சேதமடைந்து விட்டதால் இதனைச் சரி செய்யும் பணியில் சீன அரசு ஈடுபட்டுள்ளது.

மேலும், சீனப் பெருஞ்சுவரின் கட்டுமானங்கள் மிகவும் சிக்கலான முறை என்பதால் அதனை மிகவும் நுட்பமான முறையிலேயே அணுக வேண்டும் என்றும் அதற்காக முதற்கட்ட நடவடிக்கையாக பாதிக்கப்பட்ட இடங்களில் ட்ரோன்களைக் கொண்டு அளவெடுக்கும் பணி நடந்து வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீனப் பெருஞ்சுவரின் இந்தப் பாதிப்புக்கு மாறிவரும் நவீன முறைகளே காரணம் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர். (4-7)

## ஈரான்-ஈராக் எல்லையில் நிலநடுக்கம்; ஒருவர் பலி!

(டெஹ்ரான்)

ஈரான்-ஈராக் எல்லையில் ஏற்பட்ட திடீர் நிலநடுக்கத்தினால் கட்டடங்கள் இடிந்து விழுந்ததில் 750 பேர் காயமடைந்தனர்.

ஈரானின் தெற்கு பகுதியில் எகிப்து நாட்டின் எல்லையையொட்டி அமைந்துள்ள கெர்மன்ஷா மாகாணத்தின் சர்போல்-இ-சகாப் நகரில் நேற்று முன்தினம் இரவு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 6.3 புள்ளிகளாக பதிவான இந்த நிலநடுக்கம் ஈராக் தலைநகர் பக்தாத்திலிருந்து 163 கி.மீ. தொலைவிலும், ஈரானின் சர்போல்-இ-சகாப் நகரில் இருந்து 20 கி.மீ. தொலைவிலும் பூமிக்கு அடியில் 10 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

இந்த நிலநடுக்கமானது கெர்மன்ஷா மாகாணத்தில் உள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களை கடுமையாக உலுக்கியது. வீடுகள், வணிக வளாகங்கள் உள்ளிட்ட கட்டடங்கள் பலமாக குலுங்கின. இதனால் பீதியடைந்த மக்கள் வீடுகள் உள்ளிட்ட கட்டடங்களை விட்டு வெளியேறி வீதிகளிலும், திறந்த வெளி மைதானங்களிலும் தஞ்சம் அடைந்தனர்.

### 750 பேர் படுகாயம்



பல இடங்களில் வீடுகள் இடிந்து சேதமடைந்தன. மின்கம்பங்கள் சரிந்து விழுந்தன. இந்த நிலநடுக்கத்தால் 716 பேர் காயம் அடைந்ததாக ஈரான் அரசு தகவல் வெளியிட்டது.

மேலும், நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் மீட்புகுழுவினர் குவிக்கப்பட்டு தீவிர மீட்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## ட்டம் ந்தானிய ாதிக்கும்

னம் திங்கட்கிழமை ஊடகங்களுக்கு து தெரிவிக்கையிலேயே அவர் இதனை பிட்டார். மேலும் தெரிவித்த அவர், தானியாவை ஐரோப்பிய ஒன்றிய ிருந்து யேறு அனு ப்பதா னது. வோஷிங்டனுக்கும் லண்டனுக்கும் இடையிலான வர்த்தகத்தை இன்னும் கடினமாக்கும். பிரெக்சிற் ஒப்பந்தமானது ஐரோப்பிய ஒன்றியத்திற்கே சாதகமானதாகும்.

பிரித்தானியாவுடன் வர்த்தகம் செய்வதனை அனுமதிப்பதா? இல்லையா? என்பதை நாம் கவனிக்க வேண்டியுள்ளது. தற்போதைய ஒப்பந்தத்தை நோக்கினால் பிரித்தானியாவிற்கு நம்முடன் வர்த்தம் செய்ய முடியாது" எனத் தெரிவித்தார். (4-7)

## க்கு கம்

திவடி

ள் பகிர் அசோவ் . அந்த ப்பலை போர் க்கின் கைப்பற் தற்றம் ரஷ்ய தியங்க காரம் அமுல் து. இத தினம் ாதத்தி த்தப்பட் பி னங்க மசோ வாக்க காலை ணுவச் (4-7)

## உக்ரேய்ன் விவகாரம்
## ரஷ்யாவிற்கு ஐ.நா.எச்சரிக்கை

(மொஸ்கோ)



ரஷ்யாவினால் மூன்று உக்ரேய்னிய கப்பல்கள் கைப்பற்றப்பட்டமை குறித்து, ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்கத் தூதுவர் நிக்கி ஹாலி ரஷ்யாவை கடுமையாக எச்சரித்துள்ளார்.

இதேவேளை, ரஷ்யாவின் இச்செயற்பாடு உக்ரேய்ன் பிராந்தியத்தின் இறையாண்மையை மிக மூர்க்கத்தனமாக மீறும் வகையில் அமைந்துள்ளதாகவும் குற்றம் சாட்டினார்.

உக்ரேய்னிய கப்பல்கள் ரஷ்யாவினால் கைப்பற்றப்பட்டமை குறித்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் அவசர கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், "உக்ரேய்னுக்கு எதிரான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பை கண்டித்து கடந்த நான்கு ஆண்டுகளாக சர்வதேச சமூகம் குரலெழுப்பியுள்ளது.


ரஷ்யாவின் செயற்பாடு சர்வதேச சட்டத்தை மீறும் வகையிலானதுடன், ரஷ்யாவின் இந்த ஆணவச் செயற்பாட்டை சர்வதேச சமூகம் கண்டிக்க வேண்டும்.

ரஷ்யாவுடன் அமெரிக்கா சாதாரண உறவை பேணிவரும் அதேவேளை, ரஷ்யாவிற்கு எதிரான அமெரிக்காவின் தடைகளை தொடர்ந்து நீடிக்கும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உறுதியளித்துள்ளார்.

இந்த வகையான ரஷ்யாவின் செயற்பாடுகள் நிலைமையை மேலும் மோசமாக்கும் என அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ளார்" என்றும் நிக்கி ஹாலி மேலும் தெரிவித்துள்ளார். (4-7)

## ஸ்ட்ரோபரி பழத்தில் ஊசி; நியூசிலாந்தில் மீண்டும் சர்ச்சை

(வெலிங்டன்)



நியூசிலாந்தில் ஸ்ட்ரோபரி பழங்களில் ஊசி காணப்படுவது மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஸ்ட்ரோபரி பழத்தில் ஊசி காணப்பட்டமை பாரிய சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில், தற்போது மீண்டும் ஊசி காணப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஜெரல்டின் என்ற நகரத்திலுள்ள சந்தையில் விற்பனை செய்யப்பட்ட பழத்தில் குறித்த ஊசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. இதுகுறித்து நியூசிலாந்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, கடந்த செப்டெம்பர் மாதம் அவுஸ்ரேலியாவில் ஸ்ட்ரோபரி பழங்களில் ஊசி காணப்பட்டமை கண்டறியப்பட்டது. இது தொடர்பாக பல முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்ட நிலையில், இது நியூசிலாந்திற்கும் பரவியுள்ளது. அந்தவகையில் உலகளாவிய ரீதியிலான பழ விநியோகத்தில் இந்த தவறு நடந்திருக்கலாம்என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (4-7)

# சிறுபான்மையினக் கட்சிகளை ஒன்றிணைத்த ஜனாதிபதிக்கு நன்றி

## மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுபான்மையின மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் அனைத்தும் இன, மத, மொழி பேதமின்றி ஓரணியாகத் திரண்டு ஜனநாயகத்தை மீட்டெடுப்பதற்கான போராட்டத்தில் இணைந்துள்ளதாகத் தெரிவித்த தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் இவ்வாறு ஒன்றிணைய வழிவகுத்த ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கின்றேன் எனவும் தெரிவித்தார்.



கொழும்பு விகாரமகா தேவிப் பூங்காவில் 6 ஆவது நாளாகவும் நேற்று முன் தினம் தொடர்ந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் ஜனநாயகம், நீதி, நேர்மை, நியாயம் மற்றும் மக்களாட்சிக்காக உயிரைக்கொடுக்கவும் தயாராகவுள்ளோம்.

தற்போது நாட்டிலே பின் கதவு வழியாக வந்து நீதிக்குப் புறம்பான முறையில் ஆட்சி அதிகாரத்தைப் பிடித்துக்கொண்டு நானே தலைவர் என இருக்கின்றார். இத்தகைய நிலையை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் மனோ கணேசன் இதன் போது தெரிவித்தார். (இ-7)

# ஆயிரம் ரூபாவிலிருந்து பின்வாங்க தயாரில்லை; ஆறுமுகன் தொண்டமான்

(ஹற்றன்)

மலையகமெங்கும் இடம் பெற்ற சம்பள உயர்வுப் போராட்டங்களின் அழுத்தம் காரணமாக நிதி அமைச்சின் செயலாளர் தொடர்பு கொண்டு இப் போராட்டத்தைப் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு சென்றதாகத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு தொடர்ந்து பெருந்தோட்டக் கம்பனிகளின் நிறைவேற்று அதிகாரிகளுடன் (CEO) பேச்சுவார்த்தையில் ஈடுபட்டும் பயனில்லை. எனவே இன்று புதன்கிழமை பெருந்தோட்டக் கம்பனிகளின் உரிமையாளர்களை அழைத்து பிரதமரின் தலைமையில் பேச்சுவார்த்தை ஒன்றை ஏற்பாடு செய்யப் பிரதமர் பணிந்துள்ளதாகவும் நிதி அமைச்சின் செயலாளர் தனக்குத் தொலைபேசியூடாகத் தெரிவித்ததாக மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார். மனிதச் சங்கிலிப் போராட்டம் நேற்று முன் தினம் மலையகமெங்கும் முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் சந்திப்பு ஒன்று கொட்டகலை தொண்டமான் தொழிற்பயிற்சி நிலைய காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு வேண்டி கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலும் அரசாங்கத்திற்கு மக்களின் பலத்தை நிரூபிக்கும் வகையிலும் மத்திய, ஊவா ஆகிய மாகாணங்களிலுள்ள மாவட்டங்களிலும் களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் காலை 8 மணி முதல் மதியம் ஒரு மணி வரை மனிதச் சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்திற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸோ மற்றும் ஏனையவர்களோ உரிமை கோர முடியாது. இது மக்களால் முன்னெடுக்கப்பட்ட ஒரு போராட்டமாகும்.

இப்போராட்டம் மிக சிறப்பாகவும் அமைதியாகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டமை பெருமைக்குரிய விடயமாகும். இதில் பங்கு கொண்ட தொழிலாளர்கள் மற்றும் இதற்கு ஆதரவாகச் செயற்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர்கள் எனப் பலருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.



தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு வழங்க வேண்டும் என்று நாட்டின் பல பாகங்களிலும் ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், இளைஞர்கள் எனப் பலரும் போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர்.

ஆயிரம் ரூபாய் அடிப்படை என்பது தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்று அவசியமான ஒன்றாகும்.

கட்சி, இன, மத, மொழி வேறுபாடுகள் அற்றவகையில் அனைவரும் இதனை ஏற்றுக்கொண்டு போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள். அதேநேரத்தில் கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலும் அரசுக்கு மக்களின் பலத்தை உணர்த்தும் வகையிலும் இந்தப் போராட்டம் இன்று அமைந்துள்ளது.

போராட்டம் ஆரம்பமே தவிர முடிவல்ல. சம்பளம் தொடர்பில் ஓர் இரு நாட்களில் பேச்சுவார்த்தை இடம் பெறவுள்ளது. அதன் பின் ஏனைய முடிவுகளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எடுக்கும் எனத் தெரிவித்த அமைச்சர்,

ஆயிரம் ரூபாய் சம்பள விடயத்தில் அரசுக்கு வழங்கும் ஆதரவிலிருந்து விலகவும் தயார். ஆனால் அவ்வாறு விலகினால் இன்றைய அரசியல் சூழ்நிலையில் யாரிடம் சென்று பேசுவது. ஆகையினால் அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப முடிவு எடுக்க இ.தொ.கா. தயாராகவுள்ளது. ஆயிரம் ரூபாவிலிருந்து பின்வாங்கி செல்லாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 53 ஆயிரம் அமெரிக்க டொலர் பறிமுதல்

# திருடனின் பணத்தை திருடனிடமே ஒப்படைக்க உத்தரவிட்ட மகிந்த!

(கொழும்பு)

சட்டவிரோதமாகப் பெருந்தொகைப் பணத்தைக் கடத்த முற்பட்டவருக்கு ஆதரவாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ செயற்பட்டுள்ளதாகச் சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக் குடிவரவு குடியகல்வு சட்டத்தை மீறி, வெளிநாட்டுக்கு 53 ஆயிரம் அமெரிக்க டொலரைக்கொண்டு செல்ல முற்பட்ட வேளையில் சுங்கப் பிரிவினர் பறிமுதல் செய்திருந்தனர்.



அலி ரிசாத் மொப் என்ற நபரே இந்தப் பணத்தைச் சட்டவிரோதமாக இலங்கையில் இருந்து கொண்டு செல்ல முயற்சித்துள்ளார்.

பறிமுதல் செய்யப்பட்ட பணத்தை அரச உடைமையாக்குவதற்கு சுங்கப் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டது.

எனினும் மகிந்த ராஜபக்ஷ தலையிட்டு அந்த பணத்தை விடுவிக்குமாறு சுங்கப் பிரிவிற்கு கட்டளையிட்டுள்ளதாகக் குறித்த ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

(வழக்கு இலக்கம் BIA/D/CASE/128/2017) 2018.11.19 தினத்தைக் குறிப்பிட்டு கடிதம் ஒன்றின் மூலம் மகிந்த ராஜபக்ஷ இந்த உத்தரவை சுங்கப் பிரிவிற்கு வழங்கியுள்ளார்.

தற்போது இந்த மோசடியாளரைப் பிடித்த சுங்கப் பிரிவு அதிகாரியின் பணிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகக் குறித்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பற்று

ஆசை தான் துன்பத்துக்குக் காரணம்! அதற்காக ஆசையை விட்டுவிட முடிகின்றதா? துன்பம் வந்தாலும் பரவாயில்லை... கொஞ்சம் ஆசைப்பட்டு பார்க்கலாமே... என்று தானே தோன்றுகின்றது!

பற்றற்ற தன்மை என்பது மிகவும் பெரிய விடயம். சுலபமாக எல்லோருக்கும் அது வந்து விடாது! சுவாமி ராமதீர்த்தர் ஒரு தடவை ஜப்பானிலிருந்து அமெரிக்காவுக்குக் கப்பலில் போய்க் கொண்டிருந்தார். சான் பிரான்ஸிஸ்கோ துறைமுகத்துக்குக் கப்பல் போய்ச் சேர்ந்தது!

எல்லோரும் கப்பலை விட்டு இறங்கிவிட்டார்கள்! ஆனால்... ராமதீர்த்தர்.... கப்பலை விட்டு இறங்குவதற்கு மனசு இல்லாதவர் மாதிரி கப்பல் மேல் தளத்திலேயே நின்றுகொண்டிருந்தார். அங்கே இருந்த அமெரிக்கர் ஒருத்தர் இதைப் பார்த்தார்.

"ஏங்க... நீங்கள் மட்டும் அங்கேயே நிக்கிறீர் கள்? உங்கள் பொருள் எல்லாம் எங்கே?" என்று கேட்டார். "என் உடம்பில் இருக்கும் ஆடை தான் என் உடைமை! அதைத்தவிர எனக்கு வேறு ஒன்றும் கிடையாது" என்றார் ராமதீர்த்தர்.

"அப்படி என்றால்... உங்கள் பணத்தையெல்லாம் எங்கே வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார் அந்த அமெரிக்கர். "நான் பணம் எதுவும் வைத்திருக்கவில்லை" என்றார் இவர்.

"அப்படி என்றால்... சாப்பாட்டுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டார் அவர். "இந்த உலகம் முழுவதும் எனக்குச் சொந்தம்... அப்படி இருக்கும் போது என்னுடைய சாப்பாட்டைப் பற்றி எனக்கு என்ன கவலை? யாராவது கொடுத்தால் சாப்பிடுவது இல்லை என்றால் சும்மா இருப்பது" என்றார் ராமதீர்த்தர்.

அந்த அமெரிக்கருக்கு மிகவும் ஆச்சரியம். "அமெரிக்காவில் உங்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா?" என்று கேட்டார். "ஒரே ஒருத்தர் இருக்கிறார்" என்றார் இவர். "யார்?" என்று கேட்டார் அவர். ''நீங்கள் தான்!'' என்று சொல்லி அந்த அமெரிக்கர் தோள் மேலே அன்போடு தன் கையை வைத்தார் ராம் ராமதீர்த்தர்.

இவருடைய பற்றற்ற தன்மை அவருக்கு மிகவும் ஆச்சரியத்தை உண்டு செய்திருக்கின்றது! சுவாமி ராமதீர்த்தர் இரண்டரை வருட காலம் அமெரிக்காவிலே இருந்தார். அதற்குப் பின்னர் அங்கிருந்து புறப்பட்டார். அவருடைய அன்பர்கள் எல்லாம் சேர்ந்து நிறையப் பணம் சேர்த்து அதை அவருக்கு காணிக்கையாகக் கொடுத்தார்கள்.

மற்றைய நாடுகளில் பசியால் வாடிக்கொண்டிருப்பவர்கள் கஷ்டத்தைத் தீர்க்கும் பணிக்கு அந்தப் பணத்தை இவர் கொடுத்துவிட்டார். ஒரே ஒரு செட் அமெரிக்க உடை மட்டும் அவரிடம் மீதமிருந்தது. விலை உயர்ந்த தொப்பி ஒன்றும் இருந்தது. இந்தியாவுக்கு வந்த பின்பு அந்தத் தொப்பியைக் கூட தலையிலே வைத்திருக்கவில்லை...

அதற்குப் பதிலாக எளிமையான தலைப்பாகை கட்டிக்கொண்டார். "ஏன் இந்த அருமையான தொப்பியைத் தலையிலே வைத்துக் கொள்ளவில்லை?" என்று சிலபேர் கேட்டார்களாம். "இந்த ராமனுடைய சிரத்தில் மட்டும் எப்பவும் பெருமைக்குரிய பாரதம் தான் வீற்றிருக்கும்" என்று சொல்லிவிட்டு தாய்நாட்டு மண்ணை அள்ளித் திருநீறாக நெற்றியில் பூசிக் கொண்டாராம்.

இதிலிருந்து "பற்று என்பது எது?" "பற்றில்லாத தன்மை என்பது எது?'' என்று புரிந்து கொள்ள முடிகிறது. நாங்களெல்லாம் அவ்வளவு தூரத்திற்குப் போக வேண்டாம்...

நம்மிடம் இருக்கும் கெட்ட பழக்கங்களில் ஒன்று இரண்டை விட்டால் போதாதா? அதற்கே எவ்வளவு பாடுபட வேண்டியிருக்கிறது?

எனக்கு மிகவும் வேண்டிய ஒருத்தர் ஒரு நாள் திடீரென்று என்னிடம் வந்தார். "இதோ பாருப்பா! சிகரெட் குடிப்பது மிகவும் தவறு என்று ஒரு புத்தகத்தில் போட்டிருந்தது. அதைப் படித்தேன்! உடனே விட்டுவிட்டேன்!" என்றார். "சிகரெட்டையா? என்று கேட்டேன்!" "இல்லை! படிப்பதை!" என்றார் அவர்.

# நாவலர் எழுந்தார்



19 ஆம் நூற்றாண்டை தமதாக்கிக் கொண்டவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர். நாவலர் சைவத்துக்கும் தமிழுக்கும்செய்ததொண்டை நாம் எவரும் மதிப்பிட முடியாது. இப் பெருமகனார் மறைந்து 139 ஆண்டுகள் கடந்தோடி விட்டன. அவருக்கு வெள்ளைக்குருக்கள் ஆகிய பீற்றர் பாக்கியவல பாதிரியார் ஏலவே குரு பூசையைச் செய்தார்.

நாமும் அதனை இன்றும் செய்கின்றோம். நிழலின் அருமை வெயிலிற் தெரியும் என்பது பழமொழி.

தென்மராட்சியில் பிறந்து நாவலர் தர்மத்தில் வளர்ந்த பண்டிதமணி அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் சூழ்நிலை நோக்கி எழுதிய 27 கட்டுரைகள் ஆறுமுகநாவலர் எனும் பெயரில் 1979 இல் வெளிவந்தன. இந்நூல் தென்மராட்சி செந்தமிழ் மன்றத்தவரும் நாவலர் நினைவு நூற்றாண்டு விழாச் செயலாளருமான காலஞ்சென்ற வித்துவான் பொ.கந்தையா வெளியிட்டார்.

இந்நூலில் ஒரு கட்டுரை "நாவலர் எழுந்தார்" என்பதாகும். 1878 ஆம் ஆண்டு இலங்கைசட்டசபைக்கு பிரதிநிதியாகப் போட்டியிட்டவர்களில் பிரசித்தி பெற்ற பழுத்த அப்புக்காத்து பிறீற்றோ ஒருவர். அவருக்கு அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் அதியுயர் செல்வாக்கு இருந்தது. மற்றையவர் சேர் பொன் இராமநாதன். சிரித்த முகமும் 25 வயதும் கொண்ட இவர் கொழும்பில் வாழ்ந்தவர். யாழ்ப்பாணத்துக்கு இவரைப் பற்றி ஒன்றுமே தெரியாது.

சட்டசபைத் தெரிவுக்கான பிரசாரக் கூட்டம் யாழ்ப்பாணம்வண்ணைநாவலர்சைவ வித்தியாசாலையில் நடைபெற்றது. நாவலரைத் தம் குருவாகக் கொண்டவை. விஸ்வநாத பிள்ளையே பீற்றோ சார்பில் கூட்டத்துக்கு தலைமை வகித்து வாதிட வந்தவர். சேர்.பொன். இராமநாதனுக்கு ஆதரவாக தலைமை தாங்க வேண்டியவர் ஆறுமுகநாவலர். ஆயினும் நாவலர் தலைமை வகிக்கவில்லை. அக் கூட்டத்துக்கு நாவலர் ஏன் தலைமை வகிக்கவில்லை என்பதை பண்டிதமணி அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்.

"ஒரு தூணுக்கு அருகிலே தலைணை ஒன்றில் அடிக்கடி சாய்ந்து கொண்டும் மடியிலும் பக்கங்களிலும் அடுக்கிய தலையணைகளில் முழங்கைகளை ஊன்றி கொண்டும் சட்ட நடவடிக்கைகளே கவனித்தபடி இருக்கின்றார்கள். தொய்வு குளிர்காலத்திலே இடையிடையே வருகின்ற காசம். மூச்சுவிட முடியாது. பேச வியலாது வயிற்றைக் கொய்து வாங்கு கின்ற பொல்லாத வருத்தம் அது"

இந்நிலையில் நாவலர் அவர்கள் சட்ட நடவடிக்கைகளையும் வாதப்பிரதிவாத மின்னல்முழங்கங்கள் நடப்பதையும் பார்த்துக் கொண்டிருந்தார். நாவலரின் காசம் பறந்தது. நாவலர் எழுந்தார். சேர் பொன் இராமநாதனைச் சட்டசபைக்கு அனுப்பும் பொருட்டாக எதிரானவர்கள் அனைவரையும் ஒருவர் ஒருவராகவோ இருவர் இருவராகவோ அன்று பலர் கூட்டம் கூட்டமாகவோ வருமாறு வாதிட்டார். இக்கட்டுரைக்கு பண்டிதமணி "காசம் பறந்தது" என தலையங்கமிட்டார். கல்கி ஆசிரியர் "நாவலர் எழுந்தார்" எனத் தலையங்கமிட்டார்.

அன்று நாவலர் பெருமான் சேர் பொன் இராமநாதனை சட்ட சபைக்கு அனுப்பாவிட்டால் சைவத் தமிழரின் நிலை வேறாக இருக்கும். நாங்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தையோ, மருதனார்மடம் நுண்கலைக் கழகம், இராமநாதன் கல்லூரி போன்றவற்றையே காண இயலாது. எனவேசைவப்போராளியான நாவலர்பெருமான்குருபூசை நாளிற் சிந்திப்போமாக.

**கா.சிவபாலன்**

# சுதந்திரக் கட்சியை மீண்டும் ஐ.தே.கவுடன் இணைக்க முயற்சிக்கிறார் சந்திரிகா

## தயாசிறி ஜெயசேகர குற்றச்சாட்டு



(குருநாகல்)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றிணைப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முயற்சித்து வருவதாக அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

குருநாகல்பகுதியில்நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் மக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தற்போது ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினராகவே மாறிவிட்டார். அவர் மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவார் எனக் குறிப்பிடமுடியாது.

அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் உருவாக்கப்பட்டுள்ள அரசாங்கம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கமே. அது ஒரு பொதுஜன பெரமுன அரசாங்கமல்ல.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்கம்தான் என்பதை அனைவரும் உணர்ந்து செயற்படவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது மு/இரணைப்பாலை றோ.க.ம.வி பாடசாலையில் 2018 ஆம் ஆண்டுநடைபெற்றதரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திச் சாதனைபடைத்தமாணவர்களைப் பாராட்டிவாழ்த்துகின்றோம்.



ஜே.ப்ரியங்கா
177



எ.மல்சியா
170



யூ.அஸ்வினி
169



பி.தரணிகா
165



100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

அ.மதுமிதன்-160 றெ.மேரியஸ்ரினா-139 ர.திகழ்நிலா-136
சு.அயுன்சன்- 139 கு.லோசிந்தன்-133 நி.பியூட்சன்-114
டெ.வேதிகா-106 ஜோ.ரியான்சன்-101

70-100 இடையே புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள்

ஜெ.ஜானுசன், வி.இசையின்பன், சு.சுவேத்தா, சு.நிலா, வி.ரிஷாந்

இம் மாணவர்களை நல்வழிப்படுத்திய ஆசிரியர்கள், அதிபர், உப அதிபர், பாடசாலைச் சமூகம் மற்றும் பெற்றோர் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
பாடசாலைச் சமூகம்
மு/இரணைப்பாலை றோ.க.ம.வி.

(c-4501)


# பரஸ்பரம் துப்பாக்கிச்சூடு! முக்கிய புள்ளிகள் இருவர் பலி!

(கொழும்பு)

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பாரிய திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் ஹபரகட வசந்த மற்றும் மீகொட உபுல் ஆகிய இருவரும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கொட்டாவ, ருக்மல்கம வீதியில் பொலிஸாருடன் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்திலேயே குறித்த இருவரும் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இவர்கள் இருவரும் கடந்த மாதம் மாத்தறை நகைக்கடையொன்றில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தில் பிரதான சந்தேக நபர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# உச்ச நீதிமன்றத் தீர்ப்பு 7-ம் திகதி வழங்கப்படாது



(கொழும்பு)

பாராளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பில் உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்கின் தீர்ப்பை டிசெம்பர் ஏழாம் திகதி வழங்கப்போவதாக நீதிமன்றம் தீர்மானிக்கவில்லையென அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிட்டகோட்டையிலுள்ள கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பாராளு மன்றத்தை கலைத்தமை தொடர்பிலான உச்சநீதிமன்றத்தின் வழக்குத் தீர்ப்பு எதிர்வரும் ஏழாம் திகதி வழங்கப்படுமென பெரும்பாலானோர் நாட்டிற்கு தெரிவித்து வருகின்றனர்.

அந்த வழக்கின் விசாரணைகள் 4.5.6ஆம் திகதிகளில் விசாரணை செய்யப்படவுள்ளது. எனவே, ஆறாம் திகதி மாலையே தீர்ப்பு எப்போது என்பது தெரியவரும். எவ்வாறெனினும் அந்த வழக்கிற்கான தீர்ப்பு ஏழாம் திகதி வழங்கப்படாது. அன்றைய தினம் வார இறுதிநாள் என்பதால் 10ஆம் திகதிக்குப் பின்னரான ஒரு தினத்திலேயே அந்தத் தீர்ப்பு வழங்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# விஞ்ஞானத்துறை மாணவர்களின் — வளமான எதிர்காலம் —

அண்மைக் காலங்களில் பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினை சம்பந்தமாக அடிக்கடி பத்திரிகைகளில் பார்க்கக் கூடியதாக உள்ளது. படித்தவர்க்குவேலையில்லாதநிலைமை ஒருபுறமிருக்க ஏராளமான வேலைகளுக்கு உரிய தகுதியுடைான ஆட்கள் இல்லாமல் நீண்டகாலமாக வெற்றிடமாகவே இருப்பது கண் கூடு.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகளுடன் இணைந்த துறையில் பணியாற்றுபவர்கள் 47.3 ஆகும். அதே வேளை கைத்தொழில் துறையில் ஈடுபடுவோர் 19.6% மாத்திரமே. 2015 ஆம் ஆண்டு தரவுகளை ஆராயும் போது வெற்றிடமாக உள்ள வேலைகளின் அளவை எம்மால் உணர முடிகின்றது.

வடமாகாணத்தில் வேலையற்றோர் வீதம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி -5.7%, மன்னார்-6.4%, வவுனியா-4.3%, முல்லைத்தீவு- 3.2% ஆகவும் காணப்படுகிறது.

க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞானத் துறையிலே எமது மாகாணத்தை பொறுத்தவரையில் மிகவும் ஏராளமான தொழில் வாய்ப்புகள் இருப்பது எம்மில் பலருக்கு தெரியாது. அண்மையில் சுகாதார அமைச்சால் தாதியர் மற்றும் ஏனைய சேவை கட்டு விண்ணப்பம் கோரப்பட்ட போதிலும் யாழ்ப்பாணம் உட்பட வட மாகாணத்தில் இருந்து மிக சொற்பமாணவர்களே (20% குறைவு) விண்ணப்பித்தனர் என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

உயர்தரத்தில் விஞ்ஞானத் துறையில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையானது மிகவும் குறிப்பிடத்தக்க அளவில் வடமாகாணத்தில் குறைவடைந்து செல்வதனை கல்விச் சமூகம் மிகவும் கவலையுடன் அவதானித்து வருகின்றது.

கடந்த காலங்களில் போர்ச் சூழல்இ போதியஆளணிப்பற்றாக் குறை போன்றன பெரிய குறைபாடாக பலராலும் சுட்டிக்காட்டப்பட்டாலும் எமது சமுதாய முன்னேற்றத்தின் அக்கறையின் பால் அதனை முழுமையான காரணியாக நியாயப்படுத்த முடியாமல் உள்ளது.

அறியாமை, ஆர்வமின்மை சோம்பல்தனம் வெளிநாட்டு மோகம் மற்றும் ஏளனப்பார்வை குறிப்பாக கல்வியியலாளர் எனக் கருதப்படும் சிலரின் ஏளனப் பேச்சுக்கள் போன்ற ஏராளமான காரணங்களை அடுக்கிக் கொண்டே போகின்றார்கள் பாடசாலை கல்வியை முடித்த மாணவ,மாணவியர்.

வடமாகாணத்தைப் பொறுத்தமட்டில் வைத்தியர், தாதியர், பொது சுகாதார பரிசோதகர் மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர், கதிரியலாளர், தொழில் கட்டு பாரிய வெற்றிடங்கள் நிலவுகின்றது. எமது பிரதேசங்களில் சுகாதார திணைக்களத்தின் சிறந்த சேவையை எம்மக்களுக்கு



வழங்க வேண்டுமாயின் மேற்குறிப்பிட்ட வெற்றிடங்கள் எம் பிள்ளைகளால் நிரப்பப்பட வேண்டும்.

அப்போதே எமது வைத்திய சாலைகள் சிறப்பான சேவையை வழங்க முடியும் என்பதனை நாம் நினைவில் கொள்ள வேண் டும். தற்போது எமது பிரதேச வைத்தியசாலைகளில் மேற்படி சேவைகள் ஓரளவுக்கு எமது சகோதர இன பிள்ளைகளாலேயே வழங்கப்படுகின்றது என்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

இந்த வெற்றிடங்களுக்கு காரணம் நாம் அனைவரும் ஏதோ விதத்தில் தலைகுனிய வேண்டிய நிலையில் உள்ளோம். உயிரியல் துறையில் உள்ள எமது பிள்ளைகளை 3S எடுக்க வைக்க கல்வித்துறையில் ஏன் முடியவில்லை.

என்ன பிள்ளை நீ Bio க்கு படிக்கப் போறியோ? எல்லோரும் டாக்டரானா என்ன செய்கிறது? பேசாம Arts ஐ ஒழுங்காப் படிச்சு கம்பஸ்சுக்கு போற வழியைப் பார் என அறிவுரை கேட்ட ஏராளமான கலைப்பிரிவு கற்கின்ற, கற்று முடித்த மாணவ மாணவிகளின் வேலையில்லா ஏக்கம் ஏன் எமக்கு இன்னமும் புரியவில்லை!

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவின் கீழ் மருத்துவம் மட்டுமன்றி ஏராளமான பட்டப்படிப்பு கற்கை நெறிகள் உள்ளன என்பதனை நாம் அறிய வேண்டும்.

மருத்துவம், பல் மருத்துவம், விலங்கு, விவசாய தொழில்நுட்பமும் முகாமைத்துவமும், உணவு விஞ்ஞானமும் போசாக்கும், உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், உயிரியல் விஞ்ஞானம், சுகாதார விருத்தி, தாதியியல், மருத்தகவியல், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், ஊடுகதிர் படமெடுப்பு, இயன் மருத்துவம், மூலக்கூற்று உயிரியலும் உயர் இரசாயனவியலும், கடற்றொழில் மற்றும் கடல் சார் விஞ்ஞானம், சூழல் பேணலும் முகாமைத்துவமும், விலங்கு விஞ்ஞானமும் மீன்பிடித்தலும், உணவு உற்பத்தியும் தொழில்நுட்ப முகாமைத்துவமும், விவசாய வியாபார முகாமைத்துவம், பசுமைத் தொழில்நுட்பம், ஏற்றுமதி விவசாயம், நீர்வாழ்வளங்கள் தொழில்நுட்பம்.

மேற்குறிப்பிட்ட பட்டப்படிப்புகள் கற்கை நெறிகள் தவிர சுகாதாரத்துறையில் பட்டதாரிகள் அல்லாத விஞ்ஞானத்துறை சார்ந்த மாணவர்களுக்கான அடிப்படை பயிற்சியுடன் கூடிய வேலை வாய்ப்புக்கள் தாராளம்.

தாதிய உத்தியோகம், மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், மருந்தாளர், பாடசாலை பயிற்சி சிகிச்சையாளர், சுகாதார பூச்சியியல் அலுவலர், பௌதீக சிகிச்சையாளர், தொழில் சார் சிகிச்சையாளர், கதிரியலாளர், கண் தொழில்நுட்பவியலாளர் , பல் தொழில்நுட்பவியலாளர், குடும்ப நல சேவை உத்தியோகஸ்தர், பொது சுகாதார பரிசோதகர், இதய துடிப்பு பதிவாளர், மூளை மீள் இயக்க பதிவாளர், மருந்து கலவை உத்தியோகஸ்தர்.

பொதுவாக மேற்படி வேலைகளுக்கான அடிப்படைக் கல்வித் தகைமை க.பொ.த. உயர்தரத்தில் உயிரியல் விஞ்ஞானத் துறையில் 3S சித்தி மாத்திரமே. அத்துடன் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய 4 பாடங்களில் திறமை சித்தியுடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

பொதுவான வயதெல்லை 18-30 ஆக இருப்பதுடன் சம்பளத்துடன் கூடிய பயிற்சி நெறியானது 2-3 வருடங்களாகும்.

2015 ஆம் ஆண்டு தரவின் படி க.பொ.த. உயர்தரத்தில் யாழ். மாவட்டத்தில் தோற்றியோரில் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி உடையோர் பின்வருமாறு,

உயிரியல் விஞ்ஞானத் துறை- 60.3%

கலைத்துறை- 67.9%

வணிகத்துறை- 65.6%

வடமாகாணத்தில் உயிரியல் விஞ்ஞானத்துறையில் 2145 மாணவர் பரீட்சைக்கு தோற்றி 1176 மாணாக்கர் (54.83%) பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இதில் கவலைக்குரிய விடயம் என்னவெனில் 9 மாகாணங்களில் வடக்கு மாகாணமே விஞ்ஞானத்துறையில் தோற்றியோரில் 9 ஆம் இடத்தைப் பிடித்துள்ளது.

வடமாகாணம் -2145

மேல்மாகாணம்- 11421

தென் மாகாணம்- 7708

மத்தியமாகாணம்- 5948

வடமேற்குமாகாணம்-5472

சப்ரகமுவா- 5000

அகில இலங்கை ரீதியில் 2015 ஆம் ஆண்டு மொத்தமாக உயிரியல் விஞ்ஞானத் துறையில் 46 581 மாணவர்கள் தோற்றி 24 689 மாணவர்கள் 3S இற்கு மேற்பட்ட சித்திகளைப் பெற்றுள்ள அதேவேளை 6000 இற்கு அதிகமானோர் நேரடியாக பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளனர்.

மேற்படி உயிரியல் விஞ்ஞான துறையில் கற்கை நெறியை முடித்த பட்டதாரிகளில் 45.5% உடனடியாக சுகாதார அமைச்சினால் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அதேநேரம் தனியார் துறைகளில் குறிப்பாக தனியார் வைத்தியசாலைகளில் இவர்களுக்கான தேவை மிகவும் அதிகம் என்பதனையும் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

எனவே இன்றைய காலகட்டத்தில் எமது சமூகத்தில் எமது மாணவச் செல்வங்களை சரியான திசையில் வழிகாட்டத் தவறின் எதிர்காலத்தில் தற்போது நிலவும் பாரிய ஆளணி வெற்றிடங்கள் எமது மாகாணத்துக்கு வெளியே உள்ள தகுதியானவர்களால் நிரப்பப்படும் என்பதில் ஐயமில்லை. அதன் பின்பு வேலைவாய்ப்பைத் தேடி அலைந்து கொண்டே இருக்க வேண்டியிருக்கும்.

எனவே எதிர்கால சந்ததியின் பழிச்சொல்லில் இருந்து நாம் தப்பித்துக் கொள்ள கல்விச் சமூகம் உடனடியான நடவடிக்கைகள் மற்றும் ஊக்கப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

| பதவி | சம்பள குறியீடு | ஆரம்ப அடிப்படைச் சம்பளம் | உரிய அடிப்படைச் சம்பளம் |
|---|---|---|---|
| வைத்தியர் | SL-2 2016 | 52955 | 104335 |
| தாதியர் | MT-T-2016 | 32525 | 59035 |
| மருந்தாளர் | | | |
| பௌதிக சிகிச்சை செயலாளர் | | | |
| தொழில் சார் சிகிச்சையாளர் | | | |
| கண்தொழில்நுட்பவியலாளர் | | | |
| கதிரியலாளர் | | | |
| பல் தொழில்நுட்பவியலாளர் | MT-06-2016 | 32080 | 57590 |
| பாடசாலை பற்சிகிச்சையாளர் | | | |
| சுகாதார பூச்சியியல் அலுவலர் | | | |
| செயற்கைஆலயதொழில்நுட்பவியலாளர் | | | |
| பொது சுகாதார பரிசோதகர் | MT-5-2006 | 31635 | 58145 |
| இதயத்துடிப்பு பதிவாளர் | | | |
| மூளை மின் இயக்க பதிவாளர் | MT-4-2016 | 31190 | 57700 |


திருமதி ஜசிந்தா-
நித்தியானந்தா
ஆசிரியர்
யாழ்.இந்து மகளிர்
கல்லூரி.

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

106



## டச்சுக்காரர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களை சுரண்டியமையும் (கி.பி. 1658-கி.பி. 1796)

1663 இல் மொத்தமாக 15 ஆயிரத்து 12 மாணவர்கள் யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் மன்னாரிலும் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்றிருக்கின்றார்கள். இத்தொகை 1665 இல் 18 ஆயிரமாக உயர்ந்து காணப்பட்டது. மேலும் இத்தொகை 1669 களில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் குறிப்பாக நான்கு மாகாணங்களில் 28,639 ஆக உயர்ந்து காணப்பட்டது.

மன்னாரில் கல்வி கற்ற மாணவர்களின் தொகை 2220 ஆகக் காணப்படுகின்றது. 1756 இல் திருகோணமலையில் கல்வி கற்ற மாணவர்களின் தொகை 219 ஆகவும் மட்டக்களப்பில் கல்வி கற்றவர்களின் தொகை 142 ஆகவும் காணப்படுகின்றது.

மேலும் 1756 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் கல்வி கற்ற மாணவர்களின் தொகை 30859 ஆகக் காணப்படுவதைப் புள்ளி விபரங்கள் காட்டி நிற்கின்றன.

1766 ஆம் ஆண்டில் சிலாபத்திலுள்ள நான்கு பாடசாலைகளில் 80 மாணவர்கள் கல்வி கற்றிருக்கின்றார்கள்.

மேலும் பெண் பிள்ளைகளுக்கும் கல்வி வாய்ப்பு அளிக்கப்பட்டபோது யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் தொகை மிகவும் அதிகரித்துக் காணப்பட்டது.

பாடசாலைக் கல்வி ஆரம்பித்த ஒரு நூற்றாண்டு கால கட்டத்தில் அதாவது 1760 களில் வலிகாமம், வடமராட்சி, தீவுப்பகுதி என்பவற்றிலுள்ள பாடசாலைகளில் 20886 மாணவ மாணவிகளும் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி பிரதேசப் பாடசாலைகளில் 9994 மாணவ மாணவிகளுமாக மொத்தம் 30880 பேர் கல்வி கற்றிருக்கின்றார்கள்.

போர்த்துக்கீசரினால் கட்டப்பட்ட தேவாலயங்களையும் அவற்றின் ஒரு பாகமாக அமைந்திருந்த பாடசாலைகளையும் டச்சுக்காரர் அமைத்திருக்கின்றனர் என்பதனை மேற்படி புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

ஆனால் டச்சுக்காரர் தமிழ்ப் பிள்ளைகளுக்குக் கல்வியை வழங்குவதற்குத் தமது பணத்தைச் செலவு செய்யாது அப்பாடசாலைகளிலிருந்து கிடைக்கும் சிறியதொகை வருமானத்திலிருந்தே செய்திருக்கின்றார்கள்.

சுருங்கக்கூறின் இலவசமாகக் கிடைக்கப் பெற்ற பாடசாலைக் கட்டடங்கள் எதுவித செலவுமின்றி வழங்கப்பட்ட கல்விமுறை இவற்றினூடாகவே அவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளைக் கூடுதலாகச் செய்திருக்கிறார்கள்.

உண்மையாகவே கல்வியை அம்மாணவர்களுக்கு வழங்க வேண்டுமென்ற கொள்கை டச்சுக்காரருக்கு இருந்திருந்தால் அவர்கள் அதற்கான பணத்தை உரிய முறையில் ஒதுக்கி நல்லாசிரியர்களை அமர்த்தி ஒரு தரமான கல்வி முறையினைக் கூடுதலானவர்களுக்கு வழங்கியிருக்க முடியும்.

இலவசமாகக் கிடைக்கப் பெற்ற வசதிகளைப் பயன்படுத்தி எதுவிதச் செலவுமின்றித் தமது கல்வி முயற்சியைச் செய்திருக்கின்றார்கள். தமது மத மாற்று நடவடிக்கைகளுக்கு இவ்வாறான ஒரு அணுகுமுறைக் கொள்கையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியிருக்கின்றார்கள் என்று எண்ணுவதிலும் தவறிருக்க முடியாது.

மேலும் டச்சுக்காரரின் கல்வித் திட்டத்தின்மூலம் விஞ்ஞான ரீதியான பாடங்கள் எதுவும் மாணவர்களுக்குப் போதித்ததற்கான ஆதாரங்கள் எதுவும் காணப்படவில்லை.

முழுக்க முழுக்கத் தமது மதக் கொள்கைகளைப் பரப்புவதற்கான கல்வித் திட்டத்தையே முன்வைத்தனர் எனக் காண முடிகின்றது. மதமாற்றத்தின் பொருட்டு இளைய தலைமுறையினரின் திறன்கள் டச்சுக்காரரினால் சுரண்டப்பட்டுள்ளது என்று கொள்வதில் தவறு இருக்கமுடியாது.

இருந்தும் டச்சுக்காரர்களுடைய கல்வி நடவடிக்கைகள் தமிழ்ப் பிரதேசங்களில் பரவலாக நடைமுறைப்படுத்தப்பட்டு இளம் தலைமுறையினரின் அறிவு வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்திருக்கின்றது என்பதனை மேலே காணப்படும் புள்ளிவிபரங்களிலிருந்து அறிய முடிகிறது.

சாதாரண மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையுள்ள மக்கள் மத்தியில் நிச்சயம் இவ்வாறான செயற்பாடுகள் அறிவியல் ரீதியாகவும் சமய, மொழி, பொருளாதார ரீதியாகவும் குறிப்பிடத்தக்களவு மாற்றத்தையும் தாக்கத்தையும் ஏற்படுத்தத் தவறியிருக்கமாட்டாது.

குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் உயர்மட்டத்தினரின் பிள்ளைகள், நல்லூர்ச் செமினரி போன்ற தரமான பாடசாலைகளில் படிக்கின்ற வாய்ப்பையும் லத்தீன் கிரேக்க டச்சு மொழிகளுடன் சமயக் கல்வி போன்ற பாடங்களையும் படிக்கின்ற வாய்ப்பைப் பெற்றமை அவர்கள் மேலைத்தேயக் கலாசார விழுமியங்களைத் தழுவிக்கொள்ள உதவியிருக்கும்.

அத்தோடு அதிக திறமை வாய்ந்த மாணவர்கள் உயர் கல்வியின் பொருட்டு நெதர்லாந்திலுள்ள லெய்டன் (Leiden), உற்றெக் (Utrech) போன்ற உயர்கல்வி நிலையங்களுக்கு அனுப்பப்படும் வாய்ப்பையும் பெற்றிருக்கின்றார்கள்.

இவ்வாறான நிகழ்வுகள் உயர்மட்டத் தமிழர்கள் மத்தியில் ஒரு மேலைத்தேயக் கலாசாரத்தை ஏற்படுத்தியிருக்கக் காரணமாக இருந்திருக்கிறது என்று கருதலாம்.

இதனால் மேற்படி வர்க்கத்தினர் டச்சுக்காரரை அடுத்து இப்பிரதேசங்களை ஆட்சி செய்ய வந்த பிரித்தானியரின் செல்வாக்கை மிகவும் இலகுவாகப் பெற முடிந்தது.

(தொடரும்)

“அதிக திறமை வாய்ந்த மாணவர்கள் உயர் கல்வியின் பொருட்டு நெதர் லாந்திலுள்ள லெய்டன் (Leiden), உற்றெக் (Utrech) போன்ற உயர்கல்வி நிலையங்களுக்கு அனுப்பப்படும் வாய்ப்பையும் பெற்றிருக்கின்றார்கள். இவ்வாறான நிகழ்வுகள் உயர்மட்டத் தமிழர்கள் மத்தியில் ஒரு மேலைத் தேயக் கலாசாரத்தை ஏற்படுத்தியிருக்கக் காரண மாக இருந்திருக்கிறது என்று கருதலாம்”



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதி ஒதுக்கீட்டில் தென்மராட்சியைச் சேர்ந்த இரண்டு மாதர் அமைப்புக்களுக்கு கதிரைகள்,அலுமாரி போன்ற தளபாடங்கள் கடந்த வெள்ளிக்கிழமை தென்மராட்சி பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. மீசாலை மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியிலான 30 பிளாஸ்ரிக் கதிரைகளும்,சாவகச்சேரி நகர் பெண்கள் விவகார அமைப்பிற்கு 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியிலான அலுமாரி மற்றும் பத்து பிளாஸ்ரிக் கதிரைகள் என்பன வழங்கப்பட்டன. உபகரணங்களை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சாவ கச்சேரி நகரசபை உறுப்பினர் லலிதாராணி மற்றும் கட்சியின் நிர்வாகச் செயலர் ஆகியோர் இணைந்து வழங்கினர்.(படங்கள்:-சுபேசன்)

# யாழ்.தமிழ்ச் சங்கத்தின் நாவலர் விழா சனிக்கிழமை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் கரிகணன் பதிப்பகமும் இணைந்து நடத்தும் நாவலர் விழா எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க உபதலைவர் சொல்லின் செல்வர் இரா.செல்வ வடிவேல் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கரிகணன் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் சி.ராஜ்குமார் தம்பதியர் மங்கல விளக்கேற்றுவர். யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்கள் தமிழ்த்தெய்வ வணக்கப்பாவையும் நாவலர் வழிபாட்டுப் பாக்களையும் இசைப்பர்.

தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு உறுப்பினர் பா.பால கணேசன் வரவேற்புரையையும் தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தொடக்கவுரையையும் ஆற்றுவர்.

நாவலர் விழாவையொட்டி சனிக்கிழமை பிற்பகல் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படவுள்ள நாவலர் விடயத்திறன் இறுதிப் போட்டிக்கான பரிசளிப்பும் அன்றையதினம் நடைபெறும் போட்டியின் இணைப்பாளர் ஜீ.சஜீவன் பரிசளிப்பை நெறிப்படுத்துவர்.

சிறப்பு நிகழ்ச்சிகளாக யாழ். சக்சபோன் சகோதரர்களான ஆர்.வை.நவரூபன், ஆர்.வை. காண்டீபன் ஆகியோரின் நாதசங்கமம் என்ற தலைப்பில் அமைந்த சக்சபோன் கச்சேரி, சின்னமணியின் சீடர் கலாவித்தகர் ஆசிரியர் ஏ.எஸ்.மதி யழகனின் தலைமையில் கலைவாணர் வில்லிசைக் குழுவினர்வழங்கும் 'ஆறுமுக' நாவலர் என்ற பொருளில் அமைந்த வில்லிசை என்பன இடம்பெறவுள்ளன. (இ-7)

# சனசமூக நிலையங்கள் ஊடாக சிறிய வேலைகளை முன்னெடுக்க வேண்டும்

## உறுப்பினர் கஜிதன் கோரிக்கை

(சாவகச்சேரி)

சிறிய வீதிகளை அமைக்கும் போது சனசமூக நிலையங்களின் ஊடாக அந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.கஜிதன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இருபது இலட்சத்திற்குட்பட்ட நிதியில் சபையால் அமைக்கப்படுகின்ற வீதிகள் உள்ளிட்ட வேலைத் திட்டங்களை அந்த வட்டாரத்திலுள்ள சனசமூக நிலையங்களின் ஊடாக உரிய ஒப்பந்தக்காரரிடம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறான வேலைத் திட்டங்கள் சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் ஆலோசனைக்கு அமைவாக நடைபெற இருப்பதனால் தவறுகள் ஏற்பட வாய்ப்பில்லை. அத்துடன் சனசமூக நிலையங்கள் நகர சபையின் நேரடிக் கண்காணிப்பிலுள்ளன. சனசமூக நிலையத்தை வளர்க்க வேண்டிய கடமை எமது சபைக்கு உண்டு.

இவ்வாறு சனசமூக நிலையங்களூடாக சிறிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் போது வேலை இலகுபடுத்தப்படுவதுடன் நகர சபையின் பணம் வீணாகும் சந்தர்ப்பமும் குறைவு.

அத்துடன் இது சனசமூக நிலையங்களை வளர்ப்பதாகவும் அமையும் என மேலும் அவர் தெரிவித்தார். (இ-30)

# எட்டு சிறைச்சாலை அதிகாரிகள் நீக்கம்

(கொழும்பு)

போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட சந்தேக நபர் சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பில் எட்டு சிறைச்சாலை அதிகாரிகளை சேவையிலிருந்து இடை நிறுத்தியுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த எட்டு சிறைச்சாலை அதிகாரிகளும் தமது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றத் தவறிய குற்றச்சாட்டின் பிரகாரமே இவ்வாறு சேவையிலிருந்து இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளைதப்பிச்சென்ற குறித்த கைதியை கைது செய்வதற்காக பொலிஸ் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாராளுமன்ற மோதல் குறித்து விசாரணை

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் அண்மையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்யப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் 05 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் பாராளுமன்ற சி.சி.டி.வி. காட்சிகளை அடிப்படையாக வைத்து விசாரணை முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளின் முன்னேற்றம் சம்பந்தமாக சட்டமா அதிபரிடம் தெரிவித்து ஆலோசனை பெற்றுக்கொள்ளவுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார். (இ-7)

# இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் நான்கு மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்பட்டு வரும் இரத்ததான முகாங்களின் வரிசையில் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை இளவாலை கலைமகள் படிப்பகத்தில் இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது. (இ-281)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1570

### கண்மணி

பணம் சம்பாதிக்க ஆயிரம் கஷ்டப்பட்டாலும் அவமானப்பட்டாலும் அதை மனதோடு வைத்துக்கொண்டு புன்னகையால் குடும்பத்தை நடத்தும் ஒவ்வொரு ஆணும் புனிதமானவனே



### ஆதி

உலகத்தில் நாம் விரும்பும் அத்தனையும் இருமுறைதான் அழகாய் தெரியும்



ஒன்று அடைவதற்கு முன்பு இரண்டு இழந்ததற்குப் பின்பு

### சுரேஷ்

கணவர்: கூட்டு பிரமாதம், அடடே பொறியல் அற்புதம், சாம்பார் சுவையோ சுவை



மனைவி: போதும் தற்பெருமையை நிறுத்திட்டு சாப்பிடுங்க

### வினோத்



ஆடி காரில் போவது வசதியான வாழ்க்கை அல்ல ஆஸ்பத்திரிக்கும் போகாமல் வாழ்வதே வசதியான வாழ்க்கை

### சிவாசா

பகல் புல்லா ஒன்லைன்ல போராடினது போதும், போய் தூங்குங்க



மிச்சத்தை நாளைக்கு போராடிக்கலாம்

### கதிரவன்

கோபம் கொண்டால் உறவு இல்லை...



பேராசை கொண்டால் நிம்மதி இல்லை

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நான்கு, ஐந்து இராஜதந்திரிகளே குழப்பம் விளைவிக்கின்றனர்

## ஜனாதிபதி மைத்திரி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை மற்றும் அரசியலமைப்பு விவகாரங்கள் குறித்து நான்கு ஐந்து இராஜதந்திரிகள் மாத்திரம் தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்துகின்றனர் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**



வெளிநாட்டு செய்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களை சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை எந்த ஒரு நாடும் அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி கேள்வி எழுப்பிய போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, "நான்கு அல்லது ஐந்து இராஜதந்திரிகள் மாத்திரமே தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்துகின்றனர். ஏனையோர் அமைதியாக இருக்கின்றனர்" என்று பதிலளித்துள்ளார்.

சட்டபூர்வமான பிரதமர் எனக் கூறிக் கொள்ளும் ரணில் விக்கிரமசிங்க பொருளாதார சபை ஊடாக தன்னிச்சையான முடிவுகளை எடுத்திருந்தார் என்றும், காணிகள் உள்ளிட்ட அரச வளங்களை வெளிநாட்டவர்களுக்கு மிகக்குறைந்த விலையில் விற்பனை செய்தார் என்றும் இந்த சந்திப்பின் போது மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அது மட்டுமன்றி முன்னாள் சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க சில முக்கிய வழக்குகளின் போது, பொலிஸாரின் விசாரணைகளில் தலையீடு செய்தார் என்றும் ஜனாதிபதி குற்றம்சாட்டியுள்ளார். (இ-7)

# அவன்கார்ட் முதல் தாஜுடீன் படுகொலை வரை அனைத்தையும் அம்பலப்படுத்துவோம்-சம்பிக்க

(கொழும்பு)

அவன்காட் விவகாரம் தொடக்கம் வசீம் தாஜுடீன் கொலை, ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை மற்றும் ஊடகவியலாளர் எக்னலிகொட காணாமலாக்கப்பட்டமை போன்ற சம்பவங்கள் வரையிலான அனைத்து குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளை அறிந்து வைத்துள்ளதாகவும் சந்தர்ப்பம் வரும்போது உண்மை தகவல்களை மக்களுக்கு தெளிவுபடுத்தப்போவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.



அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய அரசாங்கத்தில் இடம்பெற்றதாக குறிப்பிடப்படும் ஊழல் மோசடிகளை விசாரிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆணைக்குழுவை நியமிப்பதாக குறிப்பிட்டுள்ள விடயம் வரவேற்கத்தக்கது.

ஆகவே இவ் விசாரணைகளுக்கு நாம் எவ்வித தடைகளையும் ஏற்படுத்த மாட்டோம். ஆனால் இந்த விசாரணைகள் அரசியல் பழிவாங்கல்களை அடிப்படையாகக் கொண்டு அமையக் கூடாது.

மேலும் மகிந்த ராஜபக்ஷ தொடர்ச்சியாக பிரதமர் வேடத்தை கலைத்து பெரும்பான்மைக்கு முன்னுரிமை கொடுத்து பிரச்சினைகளில் இருந்து விலகிச்செல்ல வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (இ-7)

# இலங்கை மக்களை வியப்பில் ஆழ்த்திய — கறுப்பு மழை —



(கொழும்பு)

வெலிகந்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் கறுப்பு நிறத்தில் மழை பெய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெலிகந்த, ருவன்பிட்டிய உட்பட கிராமங்கள் சிலவற்றில் இவ்வாறு கறுப்பு மழை பெய்துள்ளது.

நேற்று மாலை 3-5 மணிக்கு இடையில் இந்த கறுப்பு மழை பெய்துள்ளதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதேச மக்களால் நிரப்பப்பட்ட பாத்திரங்களில், இந்த கறுப்பு மழை நிரம்பியுள்ளது. அத்துடன் நேற்று முன்தினம் காலை முதல் வெலிகந்த பிரதேசத்தில் மழை பெய்துள்ளதாக அந்த பகுதி மக்கள் தெரிவித்தனர். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 200 | 120 | 220 | 200 |
| உருளைக்கிழங்கு | 140 | 100 | 100 | 92 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 340 | 320 | 400 |
| தக்காளி | 400 | 400 | 400 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 30 | 40 |
| கோவா | 160 | 120 | 150 | 150 | 120 |
| கரட் | 160 | 200 | 240 | 250 | 350 |
| பூசணி | 80 | 50 | 50 | 40 | 80 |
| புடோல் | 180 | 160 | 130 | 150 | 120 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 130 | 160 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 100 | 90 | 120 |
| பாகற்காய் | 300 | 300 | 260 | 300 | 240 |
| வெண்டிக்காய் | 120 | 150 | 140 | 120 | 160 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 60 | 60 | 60 |
| பயற்றங்காய் | 300 | 280 | 240 | 300 | 240 |
| லீக்ஸ் | 200 | 200 | 220 | 150 | 240 |
| பீற்றூட் | 150 | 160 | 160 | 60 | 200 |
| கறிமிளகாய் | 300 | 300 | 280 | 250 | 240 |
| முருங்கைக்காய் | 500 | — | 500 | — | 400 |
| போஞ்சி | 200 | 180 | 180 | 210 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 180 | 140 | 180 | 160 |
| கீரை - 1பிடி | 60 | 70 | 80 | 30 | 80 |
| தேசிக்காய் | 500 | 500 | 400 | 450 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 200 | 160 | — | 200 |
| வெங்காயப்பூ | — | — | 300 | — | — |
| முள்ளங்கி | 100 | 120 | 140 | 30 | 120 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 15 | 30 |
| ஈரப்பலா | 60 | 80 | 60 | 140 | 100 |

# செய்தித்துளிகள்

## மனித சங்கிலி போராட்டத்தால் முடங்கியது மலையகம்



(ஹற்றன்)

மலையகத்தில் பல பகுதிகளிலும் தோட்டத் தொழிலாளர்கள், ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு கோரிக்கையை முன்வைத்து, மனித சங்கிலிப் போராட்டத்தில் நேற்று முன்தினம் ஈடுபட்டுள்ளனர். (இ-7)

## மருத்துவ சபைக்கு புதிய தலைவர்

(கொழும்பு)

இலங்கை மருத்துவ சபையின் புதிய தலைவராக டாக்டர் பாலித அபேகோன் நியமிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இவர் நேற்று முன்தினம் முதல் எதிர்வரும் 5 வருடங்களுக்கு தலைவராக கடமையாற்றவுள்ளார். டாக்டர் கொல்வின் குணரத்ன பதவி விலகியதையடுத்து அவரது இடத்துக்கே டாக்டர் பாலித அபேகோன் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-7)







மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு ஒக்ஸ்போர்ட் நகரில் அமைந்துள்ள தமிழர் வரலாற்று மையத்தில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

**Parai voice of Revolution Drum group** இன் ஒருங்கிணைப்பாளர் மயூரன் தாமோதரம்பிள்ளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வரவேற்பு நிகழ்வாக எமது பாரம்பரிய கலைகளில் ஒன்றான பறை இசை இடம்பெற்றது. இதற்கு ராசேந்திரன் சுதன் தலைமை தாங்கி நடத்தியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர் குறித்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டதுடன் இந்த நிகழ்வில் தாயக மக்கள் மற்றும் மனித நேய செயற்பாட்டாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## மாணவனின் மரணத்தையடுத்து பாடசாலைக்குப் பூட்டு





(கொழும்பு)

மோதலொன்றில் பாடசாலை மாணவரொருவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து பேருவளை - உமயிசரா மத்திய மகா வித்தியாலயம் இரண்டு நாட்களுக்கு மூடப்பட்டுள்ளது.

மாணவரின் மரணம் மற்றும் சந்தேகநபரான மாணவரின் கைது ஆகியவற்றை கருத்திற் கொண்டு பாடசாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக பேருவளை வலயக் கல்வி அலுவலகம் தெரிவித்துள்ளது.

பாடசாலையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் நீண்டதில் இந்தக் கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளது. 17 வயதுடைய பேருவளை - மரக்கலாவத்த பிரதேசத்தை சேர்ந்த மாணவனே உயிரிழந்துள்ளார். (இ-7)

# சிறுவர் அரங்கம்

## அச்சம் தவிர்



ஒரு நள்ளிரவு..! ஜென் குரு தன் அறையில் அமர்ந்து எழுதிக்கொண்டிருந்தார்.

திடீரென அந்த அறைக் கதவைத்தள்ளிக்கொண்டு திருடன் உள்ளே நுழைந்தான். அவன் கையில் பளபளக்கும் கத்தி இருந்தது. அவன் அதை நீட்டிக் கொண்டே ஜென் குருவை நெருங்கினான்.

நிமிர்ந்து அவனை அமைதி தவழப்பார்த்த ஜென் குரு "உனக்கு என்ன வேண்டும்? என் உயிரா? அல்லது பணமா?" என்று கேட்டார்.

அதைக்கேட்ட திருடன் திகைத்தான். அவரை மிரட்டிப் பணம் பறிக்கலாம் என்பதற்கு வாய்ப்பே இல்லாமல் போய்விட்டதை எண்ணி அவன் சற்று வருந்தினான்.

"சரி போகட்டும்! எனக்குப்பணம்தான் வேண்டும்...!" என்றான் திருடன்.

ஜென் குரு சிறிது கூட சஞ்சலப்படாமல் தன்னிடமிருந்த பணத்தை எடுத்து அவனிடம் கொடுத்துவிட்டுத் தொடர்ந்து எழுதத் தொடங்கினார்.

அமைதியான அவரது செயல் திருடனின் மனதை என்னவோ செய்தது.

ஆனாலும் அவன் பணத்துடன் வெளியே போவதையே விரும்பினான்.

அவன் அறையின் வாயிலை நோக்கி நடந்தபோது. "தம்பி..! நீ வெளியே போகும்போது அறைக் கதவை சாத்தி விட்டுப் போ..!" என்றார் ஜென் குரு.

திருடன் ஒரு கணம் நின்று திரும்பி அவரைப் பார்த்தான். பிறகு அறைக் கதவைச் சாத்திவிட்டு வெளியேறினான்.

மிக விரைவிலேயே பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் என்ற முதுமொழிப்படி அவன் காவலர்களிடம் பிடிபட்டான்.

அவன் காவல் அதிகாரிகளிடம், நீண்ட நாள் தன் மனதை அரித்துக்கொண்டிருந்த ஒரு விடயத்தைச் சொல்லத் தொடங்கினார்.

"ஐயா...! திருடுவதென் தொழில். கத்தியைப் பார்த்த உடனேயே பலரும் பயத்தால் அலறிப்பார்த்திருக்கிறேன். பலர் மிரட்டலுக்குப் பின்னே பணிந்திருக்கிறார்கள்.

"ஆனால் எதற்குமே பயப்படாத ஒரு குருவை என் வாழ்நாளில் ஒரு முறை பார்த்தேன். அந்தப் பயங்கரமான சூழ்நிலையிலும் அவர் எப்படி அமைதியைக் கடைப்பிடித்தார்.

எப்படிப் பயப்படாமல் இருந்தார் என்பதை இப்போதும் ஆச்சரியத்துடன் எண்ணிப்பார்க்கிறேன்.

"உயிர் வேண்டுமா? பணம் வேண்டுமா...?" என்று அவர் அன்று கேட்டது என் இதயத்தையே அறுத்துக் கூறு போட்டு விட்டது"

"நிச்சயம் அவர் ஒரு மகானாகத்தான் இருக்க வேண்டும்.

நீங்கள் என் உடலுக்குத்தான் தண்டனை தர முடியும். ஆனால் அவர் என் உள்ளத்துக்கே தண்டனை கொடுத்துவிட்டார். என்னை மனிதனாக்கி விட்டார்"

"நான் விடுதலை பெற்றதும் அவரிடம்தான் சரணாகதி அடைந்து, வாழ்நாள் முழுவதும் அவருக்குச் சேவை செய்யப்போகிறேன்!" என்றான்.

ஒரு சந்தர்ப்பத்தில் இந்த விடயத்தை கேள்விப்பட்ட ஜென் குரு மிகவும் மகிழ்ந்தாராம்.

அச்சத்தில் இருந்தால் தான் எல்லா தவறுகளும், எல்லா துன்பங்களும் வந்து சேர்கிறது.

அச்சத்தை தவிர்த்து விடுவோம். பிறகு யாருக்கும் பயப்படவேண்டிய அவசியம் இல்லாமல் போய்விடும்.

## விடுகதைகள்

• காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும். முக்காடு போட்டால் மூலையில் அமரும். அது என்ன?

பேனா

• நெட்டை அக்காள் தாக்குகிறாள். குட்டை அக்காள் தாங்குகிறாள். அது என்ன?

உலக்கை, உரல்

• ஆற்றிலே பத்து மரம் அசையுது அசையுது. ஆனால் பிடுங்க முடியவில்லை. அது என்ன?

கை விரல்கள்

• இலையுண்டு கிளையில்லை பூ உண்டு காய் இல்லை. நான் யார்?

கரும்பு

• ஏழை படுக்கும் பஞ்சணையை எடுத்துச் சுருட்ட ஆள் இல்லை. அது என்ன?

பூமி

• ஊசி நுழையாத காட்டில் ஒரு துரை போகிறான். அவன் யார்?

புகை

• வேகாத வெய்யிலிலே வெண்ணெய் பிசைந்து வைத்தேன். உருகவில்லை ஓடவில்லை உலர்ந்து விட்டது. அது என்ன?

சுண்ணாம்பு

• மக்களும் மக்களும் நாங்கள்தான். மகராசி மக்களும் நாங்கள் தான். அம்மியின் மேலே கும்மி அடிக்கிற அம்மான் மக்களும் நாங்கள் தான். பட்டுப்புடைவைக்கு முத்திரை வைக்கிற பல்லு மக்களும் நாங்கள் தான். நாங்கள் யார்?

எலிகள்

## சிந்தனைத் துளிகள்

• புகழ்ச்சியையும் அவமதிப்பையும் கருதாது என்றும் உண்மையை மேற்கொண்டு செய்யும் தியாகமே சிறந்த தியாகம்.

• தன்னை அடக்கப் பழகிக் கொண்டவன் வேறு எதற்கும் வசப்படமாட்டான். அவனே வாழத் தகுதியுள்ளவன்.

• நம்மை நாமே வெறுக்காமல் இருப்பது முதற்கடமை. முன்னேற்றமடைவதற்கு முதலில் சுயநம்பிக்கை அவசியம்.

• உலக நன்மைக்காக அவசியமாயின் உங்களிடமுள்ள அனைத்தையும் தியாகம் செய்யுங்கள், தூய்மை உடையவன் தான், நல்ல சிந்தனையாளனாக, பகுத்தறிவாளனாக, மற்றவர்களுக்கு வழிகாட்டியாக ஆகிறான்.

• உங்களை ஓர் ஏழை என்று எப்போதும் நினைக்காதீர்கள், பணம் சக்தியல்ல, பணம் ஒன்றே வாழ்வின் இலட்சியம் என்றால் அது தவறான வழியிலேதான் தேடப்படும். பணத்தைச் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக ஒழுக்கத்தை விற்று விடாதே.

• பணத்தை வைத்திருப்பவனுக்குப் பயம். அது இல்லாதவனுக்குக் கவலை. சிலர் பணத்தை வெறுப்பதாகக் கூறுவர். ஆனால், அவர் வெறுப்பது பிறரிடமுள்ள பணத்தை... பணக்காரன் ஆக வேண்டுமா? அதற்குப் பணத்தைக் குவிக்க வேண்டியது இல்லை. தேவைகளைக் குறைத்துக் கொள்.

• நியாயத்திற்கு நன்மை உறுதி.

• வேலை செய்யாமல் பிறரிடம் பணம் பெறுவது பிச்சை எடுப்பதற்கு சமம். எவ்விதமான வேலையும் இல்லாமல் இருப்பவனைப் பார்ப்பது கூட, நமக்குத் தீமையை உண்டாக்கும்.

• பழிக்குப்பழி வாங்கியாக வேண்டும் என்ற எண்ணத்துடன் தண்டனை தரும் அதிகாரம் மனிதர் யாருக்கும் கிடையாது.

> மனிதனை மனிதனாக ஆக்குபவை உதவிகளும் வசதிகளும் அல்ல. இடையூறுகளும் துன்பங்களுமேதான்.
>
> – யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தூய தங்கம் ஆபரணமாகாது தூய தர்மம் அமுலாகாது

மகாபாரதப் போரில் கௌரவர் சேனையின் தளபதியாக வீஷ்மர் நின்று களமாடுகிறார்.

சிகண்டி என்பான் போர்க்களம் புகுந்ததும் வீஷ்மர் தன்வசம் இருந்த ஆயுதங்களையெல்லாம் நிலத்திடை போட்டு, நிராயுதபாணியாக நிற்கிறார்.

நிராயுதபாணியாக நிற்கின்றவர் மீது அம்பு தொடுப்பது யுத்த தர்மமன்று. எனினும் சிகண்டிக்கு யுத்த தர்மம் பற்றி இம்மியும் கருசனையில்லை. அவன் வீஷ்மர் மீது தாக்குதல் நடத்துகின்றான்.

மகாபாரதப் போரில் தர்மம் வென்றது எனக் கூறுகின்ற போதிலும் தர்மத்தின் வெற்றியிலும் தர்மத்துக்கு ஒவ்வாத சில காரியங்கள் நடந்தன என்பதை யாரும் மறுக்க முடியாது.

இவ்வாறு தர்மத்துக்கு முரணாக நடந்த ஒரு சில சம்பவங்களை அதர்மம் என்று யாரும் கூறிக்கொள்வதில்லை.

இதனை இராஜதந்திரம் என்றோ அல்லது சமயோசிதம் என்றோ கூறிக்கொள்கின்றோம்.

அந்தவகையில் யாராலும் கொல்ல முடியாத வீஷ்மரைக் கொல்வதற்கென்றே பிறந்த சிகண்டியை வீஷ்மரே அடையாளம் காட்டுகிறார். இங்குதான் இரு தரப்பு இராஜதந்திர வியூகம் நடந்தாகிறது.

அதாவது வீஷ்மர் பிதாமகர் என்று போற்றப்பட்டவர். வில்வித்தையின் குரு. வில்வித்தையை அரசகுமாரர்களுக்குப் போதித்த குரு போர்க்களம் புகுந்தபோது அவரை எதிர்த்து அவர் மாணவர் அம்பு தொடுப்பது யுத்த தர்மமாயினும் கல்வி கற்ற மாணவன் குருவைக் கொல்வதென்பது தர்மமன்று.

ஆகையால்தான் பாண்டவர்கள் வீஷ்மரைக் கொல்வது என்ற செயலில் இருந்து ஒதுங்கிக் கொண்டனர்.

தவிர, வீஷ்மரை இன்னொரு வீரன் வென்றால் – கொன்றால் அது வீஷ்மரின் பிரம்மச்சாரியத்துக்கும் அவரின் வீரத்துக்கும் இழுக்கு. ஆகையால் வீஷ்மரை சிகண்டி என்பான் கொல்லுகின்ற ஏற்பாடும் சிகண்டி அம்பு தொடுக்கையில் வீஷ்மர் நிராயுதபாணியாக நிற்பது என்ற நியதியும் மிகத் திறம்படக் கட்டமைக்கப்பட்டது.

இது விடயங்களில் எல்லாம் கௌரவர் சேனை கவனம் செலுத்தவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

இவை ஒருபுறமிருக்க, தர்மத்தின் வெற்றி என்ற முடிவின் பின்னால், பாண்டவர் தலைவன் தருமர் பொய்யுரைக்கின்ற செயலும் நடந்தாகின்றது.

அதுதான் அசுவத்தாமா இறந்தது மெய்யே என்ற உரத்த குரலும் யானை என்ற மெல்லிய உச்சரிப்புமாகும்.

துரோணர் தன் நம்பிக்கைக்குரிய மாணவனாக தருமரை நம்பியிருக்க தருமரோ அசுவத்தாமா இறந்தது மெய்யே யானை என்றார் என்றால், புனிதமான தர்மம் என்று எதுவும் இல்லை என்பதும் அதர்மத்தை அழிப்பதற்கு அதர்மத்தின் உதவியும் ஒரு சிறுபங்கு தேவை என்பதும் இங்கு உணர்தற்குரியது.

இதை நாம் கூறும்போது இது எதற்கு என்று நீங்கள் கேட்கலாம். தூய தங்கத்தில் எந்த ஆபரணத்தையும் செய்துவிட முடியாது. சில கலப்புகளும் தங்கத்தில் இருந்தால்தான் தங்கம் ஆபரணமாய் கையேறும்; கழுத்தேறும்; காதேறும்.

இது தூய தங்கத்துக்கு மட்டுமல்ல. தூய தர்மத்துக்கும் இதுவே நியதியாகும்.

# மகிந்தவின் மிருகக்காட்சிச்சாலை சபைக்குள் வராமல் இருப்பதே நல்லது

## ஹிருணிகா எம்.பி.காட்டம்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் மிருகக்காட்சிசாலைபோல் செயற்படுபவர்கள் சபைக்கு வராமல் இருப்பதே சபைக்கு மரியாதை எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, இதனால் அமைதியான முறையில் எமது கருத்துக்களை முன்வைக்க முடிகிறது எனவும் தெரிவித்தார்.

மேலும் எமது அரசாங்கம் கடந்த மூன்று வருடங்களில் ஊடகங்கள் மீது எந்த தலையீட்டையும் மேற்கொள்ளவில்லை. சுதந்திரமாக செயற்பட்டன.

ஊடகங்கள் தலை நிமிர்ந்து செயற்படும் வகையில் நாங்கள் அவர்களின் கௌரவத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுத்தோம்.

ஆனால் இன்று ஊடகங்களின் நிலைமையை பார்க்கும்போது, தற்போது உங்களுக்கு நலமா என்றே கேட்கத் தோன்றுகிறது என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சபை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் உறுப்பினர்கள் கருத்து தெரிவிக்கும் நேரத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஹிருணிகா இவ்வாறு தெரிவித்தார்.(இ-7)

# ரணில் விரும்பினால் நாடு கடந்த தமிழீழ அரசில் பிரதமராகலாம்

## டளஸ் எம்.பி. சீண்டல்

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை வகிக்க வேண்டுமாயின் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் பதவி வெற்றிடமாக காணப்படுகின்றது. ஆகவே அப் பதவியை அவர் பெற்றுக் கொள்ளலாம் என பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மேலும் தேசிய அரசாங்கத்தின் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களின் தேவைகளை முன்னிலைப்படுத்தி செயற்படவில்லை.

அவர் மேற்குலக நாடுகள், புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் போன்ற அமைப்புகளுக்காகவே செயற்பட்டார். எனவே அவர்களே ரணிலை ஆதரிப்பார்கள்.

அத்துடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது வாழ்நாளில் மீண்டும் ரணிலை பிரதமராக நியமிக்க மாட்டேன் என்று உறுதியளித்துள்ளார்.

சிலவேளை மீண்டும் ரணில் பிரதமராகினால் எவ்வாறான விளைவுகளை நாடு எதிர்கொள்ளும் என்பதை அவர் நன்கு அறிவார் எனவும் தெரிவித்தார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## நாட்டின் குழப்பத்துக்கு காரணம் சட்டரீதியான அரசு இன்மையே

### டி.எம்.சுவாமிநாதன் தெரிவிப்பு

நாட்டில் இன்று சட்டரீதியிலான அரசாங்கம் இல்லாத காரணத்தினால் தான் அண்மைக்காலமாக நாடே ஸ்தம்பித்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு கூடிய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், "நாட்டில் இன்று சட்ட ரீதியிலான அரசாங்கம் இல்லை. இந்த நெருக்கடியால் கடந்த சில வாரங்களாக நாடே ஸ்தம்பித்துள்ளது.

அத்தோடு எந்தவொரு பிரேரணையும் நிறைவேற்றப்படவில்லை. டொலர் விலை அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

ஜனாதிபதி இதுவிடயத்தில் உடனடி நடவடிக்கையை எடுக்க வேண்டும். ஜனநாயகத்தை நிலைநாட்ட அவர் செயற்பட வேண்டும்." என தெரிவித்தார். (3)

## வித்தியாலய பரிசில் நாள்

கோப்பாய் சரவண பவானந்த வித்தியாலய பரிசில் நாள் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் வித்தியாலய அதிபர் அ. ஆனந்தராசா தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வித் திணைக்கள ஆரம்பப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சு. சற்குணராசா கலந்து கொள்வார். (இ-7)

## பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்

16 2018

யாழ்.சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

வறுமையும் வன்முறையும் பெரிதும் தாக்குவது பெண்களையே. வறுமையை ஒழிப்போம் வன்முறையை தடுப்போம். சமத்துவமான சமுதாயத்துக்காய் ஒன்றுபட்டு உழைப்போம்!

JSAC

## உறவுகள் வளர்ச்சிக்கே..

- உறவுகள் என்பது வளர்ச்சிக்கே என்று கருதி வாழ்ந்திடுங்கள்.
- உறவுகள் பாலம் போன்றது. உறவுகள் என்பது பீங்கான் தட்டு மாதிரி. உடைந்தாலும் விரிசல் விழுந்தாலும் ஒட்ட வைக்கலாம். ஆனால் அதன் விரிசல்கள பகையை நினைவுபடுத்தி கொண்டேதான் இருக்கும். எனவே உறவுகளைக் கையாளுவது அவரவர் குணத்தைப் பொறுத்தே அமைகிறது.
- உறவுகள் மேம்பட எக்காரணத்தை கொண் டும் பிரச்சினை மனதில் கொள்ளக்கூடாது .சிறு சிறு இடர்பாடுகளைக் கூட மன்னிக்கும் தன்மையை பெருக்கிக்கொள்ள வேண்டும்.
- பிறரிடம் குடும்பப் பிரச்சினைகளைப் பற்றி பேசாதீர்கள். குடும்ப உறவுகளில் விரிசல் ஏற்படக் காரணமே மூன்றாம் மனிதர்களால் தான். எனவே உறவுகள் தான் இறுதிவரை கூட வரும் நிழல் என்பதை உணர்ந்து வாழ்ந்திடுங்கள்.
- தலைமுறைகளின் பிரச்சனைகளை விலகிவ விட்டு நட்புறவுடன் நன்றியுடன் வாழ்ந்து வாழ்க்கையை வசந்தமாக்குங்கள்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2018

"மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடி கொள்ளச் செய்யும் ஒன்றாகும்"

*ஸ்டேர்லிங் மோர்ட்டன் (அமெரிக்க அரசியலவாதி)*

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். பிரதேசத்தில கல்லாரை (மல்லாகம்) பிரதேசத்திலும் மன்னார் பிரதேசத்தில எழுத்தூரிலிருந்து தலைமன்னார்வரை, Timex ஆடைத் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி நீர்ப்பாசனத் திணைக்களம், Palmyra House, வங் காலைப்பாடு ஐஸ் தொழிற் சாலை, Lourdes ஐஸ் தொழிற்சாலை, மீன் பிடி சமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### பயனுள்ளதைச் செய்



✦ பிறருடைய குறைகளைச் சிந்தித்து பொழுதை வீணாக்காதே. எப்போதும் பயனுள்ள பணியில் ஈடுபடு.

✦ எங்கு தேடினாலும் கடவுளைக் காண முடியாது. அவர் உன் உள்ளத்திலேயே குடி கொண்டிருக்கிறார்.

✦ பெருமை பேசாதே. உன்னிலும் செல்வம் படைத்தவர் பலர் உலகில் இருக்கவே செய்கிறார்கள்.

✦ உலக வாழ்வில் இருந்து கொண்டே மனதை அடக்கி ஆள்பவனே சிறந்த வீரன்.

✦ கடின முயற்சி உள்ளவனுக்கு எல்லாம் உண்டாகும். அது இல்லாதவனுக்கு ஒன்றும் கிடைக்காது.

# சூதாட்ட குற்றச்சாட்டு என் வாழ்வின் இருண்டகாலம்




சூதாட்ட வழக்கில் சிக்கிய கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்த் பாலிவுட் நடிகர் சல்மான் கான் நடத்தி வரும் ஹிந்தி பிக்போஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ளார்.

பிக்போஸ் வீட்டில் உள்ள போட்டியாளர்கள் அவ்வப் போது ஒன்று கூடி ஸ்ரீசாந்தைக் கிண்டல் செய்கிறார்கள். இதனால் அவர் கோபப்படுகிறார். அவர் டென்ஷன் ஆவதைப் பார்த்து வெளியே இருக்கும் அவரின் மனைவி வேதனைப் படுகிறார். யாராவது என் கணவரைச் சூதாட்டக்காரர் என்று கூறினால் கேஸ் போடுவேன் என்று எச்சரித்துள்ளார்.

இந்நிலையில் நிகழ்ச்சியில் அவர் சூதாட்ட சர்ச்சையில் சிக்கியது பற்றி உருக்கமாக பேசியுள்ளார். நான் 10 இலட்சம் ரூபாய்க்காக இப்படி செய்தேன் என கூறுவது உண்மையில்லை. என்மீது அப்படி ஒரு குற்றச்சாட்டு வந்தது என் வாழ்க்கையில் ஒரு இருண்டகாலம். அப்போது நான் தற்கொலை செய்து கொள்ள கூட முயற்சித்தேன் என கூறி அழுதுள்ளார். இவர் அழுவதை பார்த்து இதர போட்டியாளர்கள் சமாதானப்படுத்தியுள்ளனர். (க)

# வாகா எல்லையில் நடந்தவரை இந்திய அணிக்கு கொண்டு வந்தோம்

## கங்குலியின் நகைச்சுவை



இந்திய அணியின் நட்சத்திர வீரராக இருந்து வரும் டோனி, வாகா எல்லையில் நடந்து கொண்டிருந்த போது அப்படியே இந்திய அணிக்குக் கொண்டு வந்துவிட்டதாக பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் முஷரப் பிடம் கங்குலி தெரிவித்துள்ளார். அண்மைக்காலமாகப் பார்ம் இன்றி தவிக்கும் டோனி, தன்னுடைய ஆரம்ப காலத்தில் ஒரு அபாயகரமான வீரராக இருந்தார். இவர் கடைசி வரை மைதானத்தில் இருந்தால், இந்திய அணி நிச்சயம் வெற்றி தான், அந்தளவிற்கு எதிரணி வீரர்கள் இவரைக் கண்டு பயப்படுவார்கள்.

அப்படி இருந்த டோனி தான், தற்போது அந்த பினிசிங்கை சரியாக கொடுக்க முடியாமல் தவித்து வருகிறார். கொஞ்சம் கொஞ்சமாக இந்திய அணியிலிருந்து தானாக விலகி வருகிறார் என்றும் கூறலாம்.

இந்நிலையில் இந்திய அணியின் வெற்றித் தலைவர்களில் ஒருவராக இருந்த கங்குலி, டோனி குறித்து சில தகவல்களை பகிர்ந்துள்ளார்.

அதில், கடந்த 2006 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இந்தியா விளையாடிய போது அப்போதைய பிரதமர் முஷாரப் , டோனியைக் காட்டி, இவரை எங்கிருந்து கொண்டு வந்தீர்கள் என்று கேட்டார்.

அதற்கு நான் வாகா எல்லையில் நடந்துகொண்டிருந்தவரை இந்திய அணிக்குள் கொண்டு வந்துவிட்டோம் என்று நகைச்சுவையாகப் பதிலளித்தேன் என்று கூறியுள்ளார். (க)

# இலங்கை அணியை வெள்ளையடித்து இங்கிலாந்து படைத்த சாதனை



இலங்கை அணிக்கெதிரான மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை இங்கிலாந்து அணி 3-0 என்று கைப்பற்றியுள்ளதால், அந்தணி வரலாற்று சாதனை படைத்துள்ளது.

இங்கிலாந்து அணி, இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று விதப் போட்டிகளில் விளையாடியது. ஒருநாள் தொடர், இருபது-20 தொடர், தற்போது டெஸ்ட் போட்டி என மூன்று தொடரையும் கைப்பற்றி இங்கிலாந்து அணி அசத்தியுள்ளது. சொந்த மண்ணில் விளையாடிய இலங்கை அணியோ ஒரு தொடரைக் கூட கைப்பற்ற முடியாமல் ரசிகர்களின் கோபத்திற்குள்ளாகியுள்ளது.

இந்நிலையில் டெஸ்ட் தொடரை கைப்பற்றிய இங்கிலாந்து அணிக்கு இது 55 வருட வரலாற்று சாதனையாக பதிவாகியுள்ளது. இங்கிலாந்து அணி, வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தில் 55 வருடங்களுக்குப் பின்னர் பெற்றுள்ள வைட்வாஷ்தொடர் இதுவாகும்.

இதற்கு முன்னர் 1963 ஆம் ஆண்டு நியூசிலாந்தில் வைத்து, அந்த அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை 3-0 என கைப்பற்றியிருந்தது. அத்துடன் இந்த வைட்வோஷ் வெற்றியானது இலங்கையில் வைத்து இங்கிலாந்து அணி பெற்ற முதல் வைட்வோஷ் வெற்றியாகவும் பதிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. (க)



இலங்கை கராத்தே சம்மேளனம் நடத்திய 43 ஆவது தேசிய கராத்தே இறுதிச் சுற்றுப்போட்டியில் ஆசிரியர்களுக்கான போட்டி கடந்த 25 ஆம் திகதி கொழும்பு டொறின்ரன் உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இதில் வடமாகாணம் சார்பாக பங்கு கொண்ட சென்சே S.விஜயராஜ் 84 கிலோ பிரிவில் காட்டா, குமித்தே போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்று மாகாணத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். இவர் இவ்வாண்டிற்கான அனைத்து பிரிவிற்குரிய போட்டிகளிலும் 23 தேசிய பதக்கங்கள் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# பயிற்சியாளராகவே மகிழ்ந்தார் தந்தையாக அல்ல-அசாம்



பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் பாபர் அசாம் நியூசிலாந்துக்கு எதிராக சதம் விளாசியதற்குப் பலரும் பாராட்டுக்களை தெரிவித்த நிலையில், தொகுப்பாளினி ஒருவரின் டுவீட் அசாமிற்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான்-நியூசிலாந்து அணிகளுக்கு இடையே 2 ஆவது டெஸ்ட் போட்டி நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியில், பாகிஸ்தான் அணியின் இளம் வீரர் பாபர் அசாம் தனது முதல் சதத்தை பதிவு செய்தார். அவர் 127 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இதனால் பலரும் பாபருக்கு தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். ஆனால், பாகிஸ்தான் கிரிக்கெட் தொகுப்பாளினியான சைனாப் அப்பாஸ் என்பவர், பாபரின் சதத்தை பாராட்டி பதிவிட்ட டுவீட் கொஞ்சம் எல்லை மீறியதாக இருந்தது.

அதாவது, அவர் தனது டுவீட்டில் 'நன்றாக ஆடினீர்கள் பாபர் அசாம். மிக்கி ஆர்தர் தன் மகனின் சதத்தை கொண்டாடியபோது, மற்ற வீரர்கள் வாழ்த்தியதை ரசித்தேன்' என பதிவிட்டிருந்தார். பாகிஸ்தானின் பயிற்சியாளராக இருப்பவர் மிக்கி ஆர்தர்.

அந்த அணிக்காக சிறப்பான பயிற்சியை அளித்து வரும் இவர், ஒரு பயிற்சியாளராக பாபர் அசாமின் சதத்தை கொண்டாடினார். ஆனால், அதனைத் தனது மகனின் சதத்தைக் கொண்டாடியதாக சைனாப் அப்பாஸ் கூறியது பாபர் அசாமிற்கு கோபத்தை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து, பாபர் அசாம் தனது டுவிட்டர் பக்கத்தில் தொகுப்பாளினி சைனாப் அப்பாஸிற்கு பதிலடி கொடுத்துள்ளார்.

அவர் கூறுகையில், 'எதையாவது கூறும் முன் யோசியுங்கள். எல்லையை மீறாதீர்கள்' என எச்சரிக்கை விடுக்கும் வகையில் தெரிவித்துள்ளார். (க)

# ஹோலி மட்டும் விளையாடினால் போதாது மற்ற வீரர்களும் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்

## கில்கிறிஸ்ட் அறிவுரை



விராட்ஹோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலியாவை வீழ்த்த விராட் ஹோலி மட்டும் போராடினால் போதாது. சக வீரர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று அவுஸ்திரேலிய முன்னாள் வீரர் கில்கிறிஸ்ட் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில்,

கடந்த 2014 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை போன்றே வீராட்கோலி தற்போது 4 டெஸ்ட்டிலும் ஓட்டங்களைக் குவிப்பார் என்று நம்புகிறேன். இந்தியா வெற்றி பெற வேண்டுமானால் ஹோலியுடன் சேர்ந்து மற்ற வீரர்களும் சிறப்பாக விளையாட வேண்டும்.

கோலியுடன் மற்ற வீரர்களும் சிறப்பாக பட்டிங் செய்து, பந்து வீச்சும் நன்றாக அமைந்தால் அவுஸ்திரேலியாவை அதன் சொந்த மண்ணில் இந்தியா வீழ்த்த இயலும்.


இவ்வாறு கில்கிறிஸ்ட் கூறியுள்ளார்.

2014 ஆம் ஆண்டு 4 டெஸ்ட் போட்டிகொண்ட தொடரை டோனி தலைமையிலான அணி 0-2 என்ற கணக்கில் இழந்தது.

இந்த தொடரில் விராட் ஹோலி 694 ஓட்டங்களை (சராசரி 86.50) குவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# மாவீரர்களுக்கு உணர்வெழுச்சியுடன் அஞ்சலி...


கனகபுரம் துயிலும் இல்லம்


கோப்பாய் துயிலும் இல்லம்



வல்வை. தீருவில் திடல்


சாட்டி துயிலும் இல்லம்


விசுவமடு தேராவில் துயிலும் இல்லம்


மன். பண்டிவிரிச்சான் துயிலும் இல்லம்


வன்னி விளாங்குளம் துயிலும் இல்லம்


நாவற்குழி கடற்கரை


மன். ஆட்காட்டிவெளி துயிலும் இல்லம்


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


முழங்காவில் துயிலும் இல்லம்


பருத்தித்துறை சுப்பர்மடம்


கனடா


பிரான்ஸ்


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் அலுவலகம்


தமிழகத்தில் ஓவியர் புகழேந்தி வீட்டில்


லண்டன்

படங்கள்:
சோபிகா,
சுமித்தி மற்றும்
பனிக்கன்குளம்,
மன்னார்,
பரந்தன்,
கண்டாவளை,
சாவகச்சேரி,
கரணவாய்
செய்தியாளர்கள்.

மஹஜன சம்பத
திகதி 2018/11/27
சீட்டிழுப்பு இலக்கம் 3799
ஆங்கில எழுத்து G
வெல்லப்பட்ட இலக்கங்கள் 7 0 2 2 1 5
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2018.11.27
சீட்டிழுப்பு இலக்கம் 1956
ஆங்கில எழுத்து M
வெல்லப்பட்ட இலக்கங்கள் 15 52 61 66
தேசிய லொத்தர் சபை

செவன
திகதி 2018/11/27
சீட்டிழுப்பு இலக்கம் 139
ஆங்கில எழுத்து C
வெல்லப்பட்ட இலக்கங்கள் 11 33 34 43
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2018/11/27
சீட்டிழுப்பு இலக்கம் 478
லக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 11 18 21 31
59
தேசிய லொத்தர் சபை

# சபை அமர்வுகளை புறக்கணிக்க சபாநாயகரே காரணம் - தினேஷ்

(கொழும்பு)

சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்றும் நிலையியற் கட்டளைக்குப் புறம்பாக செயற்பட்ட காரணத்தினால்தான் சபை அமர்வுகளை புறக்கணித்ததாக தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், பிரதமர் தலைமையில் நேற்று ஆளும் தரப்பினரின் கூட்டம் இடம்பெற்றது. பாராளுமன்றில் சபாநாயகர் செயற்பட்ட விதமானது அரசியலமைப்பு, மற்றும் நிலையியற் கட்டளைக்கு புறம்பாக செயற்பட்டார் என்பதை நாம் தொடர்ந்தும் தெரிவித்து வருகிறோம்.

இதனை திருத்திக்கொள்ளுமாறு நாம் கேட்டிருந்தோம். நிலையியற் கட்டளைக்கு இணங்க செயற்படுமாறு நாம் அவரை கோரியிருந்தோம்.

அவர் சுயாதீனமாக செயற்படவில்லை. மாறாக சிறிகொத்தாவின் சபாநாயக ராகவே செயற்படுகிறார். இதனை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஜனாதிபதியும், தவறான முறையில் நிறைவேற்றிக் கொண்ட பிரேரணைகளை வாபஸ் பெற்றுக்கொள்ளுமாறு அறிவித்துள்ளார்.

இந்தநிலையில், நேற்றும் அவர் நிலையியற் கட்டளைகளுக்கு எதிராக செயற்பட்டுள்ளார். குறைந்தது கட்சித் தலைவர்கள் கூட்டமோ, தெரிவுக்குழுக் கூட்டமோ இடம்பெறவில்லை. இதனாலேயே, நாம் நேற்றைய அமர்வை புறக்கணித்துள்ளோம் என கூறினார். (3)

## மாவீரர் தினம்...

மிகவும் உணர்வுபூர்வமாக இடம்பெற்ற மாவீரர் நினைவு நாள் நிகழ்வுகளில் பெருமளவான மக்கள் திரண்டு வந்து மாவீரரான தமது உறவுகளுக்கு தீபத்தாலும் கண்ணீராலும் மலர் தூவி அஞ்சலி செலுத்தியிருந்தனர். தமது உறவுகளை மண்ணுக்காக அர்ப்பணித்த பெற்றோர் மற்றும் உறவுகள் தம் உறவுகளின் கல்லறைகளை சிதைக்கப்பட்ட இடங்களில் கதறியழுது அஞ்சலி செலுத்தியமை பார்ப்பவர் மனங்களை கனக்கச்செய்திருந்தது.

இம்முறைவடக்கு கிழக்கிலுள்ள பிரதான துயிலுமில்லங்களில் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

அனைத்து துயிலுமில்லங்களிலும் மாலை 6.05 க்கு முதன்மை சுடர் ஏற்றப்பட்டு மாவீரர் பாடல் ஒலிபரப்பப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டது.

பிரதான துயிலுமில்லங்களான கிளிநொச்சி - கனகபுரம் துயிலுமில்லம், முழங்காவில் துயிலுமில்லம், யாழ்ப்பாணம்-கோப்பாய் துயிலுமில்லம், தென்மராட்சி கொடிகாமம் துயிலுமில்லம், வடமராட்சி கிழக்கு - உடுத்துறை துயிலுமில்லம், வல்வெட்டித்துறை - தீருவில் திடல், தீவகம் சாட்டி துயிலுமில்லம், முல்லைத்தீவு - முள்ளியவளை துயிலுமில்லம், இரட்டைவாய்க்கால் துயிலுமில்லம், விசுவமடு தேராவில் துயிலுமில்லம், வன்னிவிளாங்குளம், வவுனியா- களிக்காடு துயிலுமில்லம், மன்னார்-பண்டிவிரிச்சான் துயிலுமில்லம், ஆட்காட்டிவெளி துயிலுமில்லம், மட்டக்களப்பு- கல்லடி துயிலுமில்லம், தரவை துயிலுமில்லம், கஞ்சிகுடிச்சாறு துயிலுமில்லம், வாகரை துயிலுமில்லம், மாவடிமுன்மாரி வேம்பு துயிலுமில்லம், திருகோணமலை - ஆலங்குளம், அம்பாறை கஞ்சிக்குடிச்சாறு துயிலுமில்லம் ஆகியவற்றில் ஆயிரக்கணக்கானோர் திரண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

அத்துடன் பொது இடங்களான யாழ்ப்பாண பல்கலைக்கழகம் , கிழக்கு பல்கலைக்கழகம், பாசையூர் கடற்கரை, நல்லூர் தியாகி திலீபனின் நினைவிடம், பருத்தித்துறை சுப்பர்மடம் மற்றும் கட்சி அலுவல கங்கள் என்பவற்றிலும் பெரும் எழுச்சியுடன் அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் வீடுகள், கல்லூரிகள் போன்றவற்றிலும் பொதுமக்கள் தமது அஞ்சலிகளை செலுத்தியிருந்தனர்.

தமிழர் தாயகம் எங்கும் உணர்வெழுச்சியுடன் நேற்று முன்னெடுக்கப்பட்ட மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் அனைத்தும் இராணுவ புலனாய்வாளர்கள் மற்றும் பொலிஸாரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இடம்பெற்றுள்ளது.

பொலிஸாரின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் பொதுமக்கள் ஒன்று சேர்ந்து மாவீரராகிய தமது உறவுகளுக்கு அஞ்சலியை செலுத்தியிருந்தனர்.

மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட நாட்களில் இருந்து குறித்த நிகழ்வை தடுப்பதற்கான நடவடிக்கைகள் பொலிஸ்தரப்பால் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் மண்ணுக்காய் உயிர் நீத்த மாவீரருக்கு தடைகளைத் தாண்டி தமது அஞ்சலியை செலுத்தியிருந்தனர்.

மேலும் இம்முறை கட்சி பேதமின்றி அனைவரும் ஓரணியில் திரண்டு இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-9)

## மகிந்தவுக்கெதிராக...

நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் ஓசல ஹேரத், இந்த அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட 12 அடிப்படை உரிமை மனுக்கள் நிலுவையிலுள்ள நிலையில், மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்தமை அரசியலமைப்புக்கு முரணானது என்று இந்த அடிப்படை உரிமை மனு நேற்று தாக்கல் செய்யப்பட்டது. (3)

## மாவீரர்களுக்கு...

பாராளுமன்றம் கூடியபோது, பிரதான நிகழ்வுகள் நிறைவடைந்த பின்னர் உறுப்பினர்கள் கருத்து தெரிவிக்கும் நேரம் ஒதுக்கப்பட்டது. அதன்போது கருத்து தெரிவித்து இறுதியில் மாவீரர்களுக்கும் தனது அஞ்சலியை செலுத்துவதாக தெரிவித்து சபையில் அமர்ந்துகொண்டார். (3)

## பாராளுமன்றம்...

பாராளுமன்ற அமர்வில் கலந்து கொள்வதில்லை என தீர்மானித்து பராளுமன்ற அமர்வினை பகிஷ்கரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ள பாராளுமன்ற அமர்வுகளையும் புறக்கணிக்க தீர்மானம் மேற்கொண்டுள்ளதாக ஆளும் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்ற அமர்வினை நேற்று புறக்கணித்த பின்னர், பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற ஆளும் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர்கள் இதனை தெரிவித்துள்ளனர். (3)

## மாவீரர் தின நிகழ்வு...

பருத்தித்துறை சுப்பர் மடம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. நேற்றைய தினம் குறித்த பகுதியில் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க அப் பகுதி மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

இந் நிலையிலேயே அங்கு சென்ற பருத்தித்துறை பொலிஸார் மாவீரர் தின ஏற்பாடுகளை தடுத்து நிறுத்தி அப்பகுதி மக்களை அங்கிருந்து விரட்டியடித்துள்ளனர்.

மேலும் அங்கு கட்டப்பட்டிருந்த கொடிகளை அறுத்தெறிந்தும், வைக்கப்பட்டிருந்த மாவீரர்களது சிவில் உடையிலான புகைப்படங்களை அப்புறப்படுத்துமாறும் பொது மக்களை அச்சுறுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் இருந்து பொது மக்களை பொலிஸார் வெளியேற்றியுள்ளனர். இதனால் குறித்த பகுதியில் பதற்றமான சூழல் காணப்பட்டதுடன் பெருமளவான பொலிஸாரும் குவிக்கப்பட்டனர். (3-60)


**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**

(C-4468)

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 Kg க்கான கட்டணம்

UK - 550/=,
France - 700/=
Germany - 650/=
Swiss - 750/=
Canada - 950/=

ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு. பொதிகள் அனுப்பி வைக்கப்படும்

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும். 077 755 4528

திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்

321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.(முட்டாஸ் கடை சந்தி அருகாமையில்)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. DHL aramex SKYNET
04, மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி. கிளிநொச்சி, மன்னார்.
3-5 Working Days

**அன்பொளி கல்வியகம்**

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மைதான வீதி, யாழ்ப்பாணம்.

2019 இல் தரம் 1,2,3,4

மாணவர்களுக்கான வகுப்புக்கள் 03.12.2018 திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

அனுமதிகளை 28.11.2018 புதன்கிழமையிலிருந்து 02.12.2018 ஞாயிற்றுக்கிழமை வரை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.

(C-4526) இயக்குநர்

**வேலைவாய்ப்பு**

நீங்கள் O/L எழுதியவர்களா!

அல்லது பரீட்சையில் சித்தியடையாதவர்களா!

உங்களுக்கான அரியதோர் சந்தர்ப்பம். யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் DNMC நிறுவனத்தில் பயிற்சி நெறியுடன் கூடிய பதவி வெற்றிடங்கள் உள்ளன. வெளிமாவட்டத்தினருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும். தங்குமிடம், உணவு வசதிகள் உண்டு. ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : 076 459 8925 / 076 459 7725 (6582)


**அந்தியேட்டி அழைப்பு**

கடந்த 31.10.2018 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர் **சின்னப்பு தவராசா**



அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று 28.11.2018 புதன்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் 30.11.2018 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு : தயவு செய்து பெரியோர்கள் அனைவரும் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தரவும்.

மகன் : த.கருணாகரன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் தென்மராட்சி, கணித ஆசிரியர் - தனியார் கல்வி நிறுவனம்.)

த.தயாபரன் (ஆசிரியர் - நாரந்தனை றோ.க.த.க. பாடசாலை)

7/3, கற்குளம் லேன், கொட்டடி, யாழ்ப்பாணம். - குடும்பத்தினர் (6579)


**சிறுநீரகம் தேவை**

வடமராட்சியை வசிப்பிடமாகக்கொண்ட 33 வயதுடைய நபர் ஒருவருக்கு A+ வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவைப்படுகின்றது.

தகுந்த சன்மானம் வழங்கப்படும் (6575)

தொடர்புகளுக்கு : 077 843 5310, 076 185 1314

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532

**வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை**

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை (C-4462)

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்

கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்

முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

**தவறி விட்டது**

NP JH 8655 வாகன இலக்கத்தகடு காரை நகர் யாழ்ப்பாணம் வீதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். T.P : 076 862 2764 (6580)

பிரத்தியேக / குழுவகுப்புக்கள்

A/L 2019 & DAY / A/L 2020

கணக்கீடு

MR. BALAKAJEN

கந்தர்மடச்சந்தி கந்தர்மடம் (Tue & Fri 5-7 P.M)

கொழும்புத்துறை (Sat & Sun 2-5 P.M)

தொடர்புகளுக்கு : 075 077 5660, 076 565 5956 (6576)

**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5.DAYS (C-4462)

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி-700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

0768226240

V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.